# சிறப்புத் தமிழ்

(செய்யுள் - உரைநடை)

மேல் நிலை—முதலாம் ஆண்டு

பகுதி 3 — சிறப்புத் தமிழ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# சிறப்புத் தமிழ்

## (செய்யுள் - உரைநடை)

மேல் நிலை — முதலாம் ஆண்டு

பகுதி 3 — சிறப்புத் தமிழ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதல் பதிப்பு—1978
மறு பதிப்பு—1979

பதிப்பாசிரியர் குழுத் தலைவர் :

வித்துவான் டாக்டர் தி. முத்து-கண்ணப்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சிறப்புப் பேராசிரியர் (யு. ஜி. சி.),
தமிழ்த் துறை,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030.

உறுப்பினர்கள் :

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.,
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

வித்துவான் சாந்தலிங்க இராமசாமி அடிகள்,
முதல்வர்,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி,
பேரூர், கோவை மாவட்டம்.

பேராசிரியர் க. பெருமாள், எம். ஏ.,
முதல்வர், சரபோஜி மன்னர் அரசினர் கல்லூரி,
தஞ்சாவூர்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம். ஏ., பிஎச். டி.,
(ஓய்வுபெற்ற தமிழ்த் துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)
'கதிரகம்', காரைக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்,லிட்., பிஎச்.டி.,
தமிழ்த் துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600 005.

மதிப்புரையாளர் :

டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம், எம்.ஏ., எம். லிட்., பிஎச்.டி.
முதல்வர், அரசினர் கலைக்கல்லூரி, கோவை.

விலை : ரூ. 2-50

இந்நூல் 60 ஜி.எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
ஏ. எஸ். பிரிண்டர்ஸ், சென்னை - 600 018

# பொருளடக்கம்

## செய்யுட்பகுதி


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | ... | 1 |
| 2. | தமிழின் இனிமை | .. | 2 |
| 3. | குறுந்தொகை | ... | 3 |
| 4. | சிலப்பதிகாரம் | ... | 17 |
| 5. | கந்தபுராணம் | ... | 32 |
| 6. | திருவேங்கடத்தந்தாதி | ... | 42 |
| 7. | பாஞ்சாலி சபதம் | ... | 51 |
| 8 | வாழுநர் கவிதைகள் | ... | 66 |

## உரைநடைப் பகுதி


பக்கம்

1. கடல் கடந்த தமிழ் ... 73
—மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

2. சமரசம் ... 83
—திரு. வி கலியாணசுந்தரனார்

3. கவிதை .. 90
—பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

4. விவேகாநந்தர் திருமுகம் ... 95
—சுவாமி விவேகாநந்தர்

5. தமிழரசு நீதி வழங்கிய திறம் ... 100
—பேராசிரியர்
ஔவை சு. துரைசாமிப் பிள்ளை

6. நாடும் பண்பாடும் ... 108
—பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார்

7. அறிவியலும் வறுமையொழிப்பும் ... 115
—டாக்டர் வ செ. குழந்தைசாமி

8. சங்க இலக்கிய மரபு ... 120
—டாக்டர் தா. ஏ ஞானமூர்த்தி

9. சில சொற்கள் ... 128
—டாக்டர் ரா. சீனிவாசன்

10. ஒளிச்செல்வம் ... 137
—டாக்டர் பீ. திருஞானசம்பந்தம்

11. இயற்கை இன்பம் ... 143
—டாக்டர் இரா. சாரங்கபாணி


---


கவிதைகள், கட்டுரைகள் உரிமையாளர் இசைவு பெற்று வெளியிடப்பட்டுள்ளன.

# செய்யுட் பகுதி

## 1. கடவுள் வணக்கம்

பொருளாகக் கண்டபொருள் எவைக்குமுதற்
பொருளாகிப் போத மாகித்
தெருளாகிக் கருதும்அன்பர் மிடிதீரப்
பருகவந்த செழுந்தே ஞகி
அருளானோர்க்(கு) அகம்புறம் என்(று) உன்ஞத
பூரண ஆனந்த மாகி
இருள்தீர விளங்குபொருள் யா(து) அந்தப்
பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்.

—தாயுமானவர்

### குறிப்புரை

தாயுமானவர் கி. பி. 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; வேதாரணியத்தில் பிறந்து திருச்சிராப்பள்ளியில் அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருந்தார் என்பர். திருமூலர் மரபில் வந்த மௌனதேசிகரைக் குருவாகக்கொண்டு, சைவ சமய நெறியில் சிறந்து விளங்கியவர். இவருடைய பாடல்கள் பக்திச் சுவையும் மெய்ஞ்ஞான உண்மைகளும் பொதிந்தனவாகும். இவர் பாடிய பாடல்களின் தொகுப்புத் 'தாயுமான சுவாமிகள் திருப்பாடல் திரட்டு' என வழங்கப்படுகிறது.

### அருஞ்சொற்பொருள்

எவைக்கும் - எவற்றிற்கும்; முதற்பொருள் - முதற்காரணமாயுள்ள பொருள்; போதம் - அறிவு; தெருள் - தேளிவு; கருதும் - எண்ணும்; மிடி - வறுமை; செழுந்தேன் - வளமான தேன், பண்புத் தொகை; தேன்போல இனிமையானவன் என்பதாகும். அருளானோர் - தெய்வத்திருவருள் பெற்றவர்; அகம்புறம் - உள்வெளி; உன்ஞத - நினைக்க இயலாதபடி; பூரண ஆனந்தம் - நிறைந்த பேரின்பம்; இருள் - குற்றம்; இறைஞ்சிநிற்பாம் - வணங்குவாம். 'ஆகி' என வரும் வினையெச்சங்கள் 'விளங்கு பொருள்' என்பதைக் கொண்டு முடிகின்றன. இறைஞ்சி நிற்பாம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

# 2. தமிழின் இனிமை

*கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்*

*பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்*

*நனிபசு பொழியும் பாலும்—தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*

*இனியன என்பேன் எனினும்—தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்.*

—பாவேந்தர் பாரதிதாசனார்

### குறிப்புரை

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த தமிழ்க் கவிஞர்களுள் ஒருவர் பாவேந்தர் பாரதிதாசனார். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம் என்பது. இவர் புதுவை மாநிலத்தில் கனகசபை என்பாரின் புதல்வராக 1891-ல் பிறந்தார். தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரிடம் ஈடுபாடு கொண்ட இவர் 'பாரதிதாசன்' என்னும் பெயரை வைத்துக்கொண்டார். 'புரட்சிக் கவிஞர்' என்றும் இவரைப் புகழ்வர். இவர் 1964-ல் மறைந்தார். தமிழ்மொழி, தமிழினம் என்பவற்றை உயிர் மூச்சாகக் கொண்டு இவர் பாடிய கவிதை நூல்கள் பலவாகும்.

### அருஞ்சொற்பொருள்

கழை - கரும்பு ; பனிமலர் - குளிர்ந்த பூ ; கண்டீர் - முன்னிலை யசைநிலை.

## 3. குறுந்தொகை

1. **தோழி கூற்று**

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக்
கழறொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

2. **தலைவன் கூற்று**

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முள்வோநீ யறியும் பூவே.

3. **தலைவி கூற்று**

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினுமாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

4. **தலைமகள் கூற்று**

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் நெஞ்சே.

5. **தலைவி கூற்று**

நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

6. **கண்டோர் கூற்று**

வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்.

யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

7. தோழி கூற்று

யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னாணிக் கரப்பா டும்மே.

8. தோழி கூற்று

யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்கினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே

9. தலைவி கூற்று

கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவ ணுறைதலு முய்குவ மாங்கே
எழுவினி வாழியென் னெஞ்சே முனாது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே

10. தலைவி கூற்று

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவவர் சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.

11. தலைவி கூற்று

மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்
பைத லொருதலைச் சேக்கு நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே.

12. செவிலித்தாய் கூற்று

பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

13. தோழி கூற்று

உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

14. தோழி கூற்று

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார லுட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

15. தலைவன் கூற்று

எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ லுறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

16. தலைவி கூற்று

அருளி மன்பு நீக்கித்துணை துறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்

உரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே.

17. தலைவி கூற்று

வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் குலரே.

18. தோழி கூற்று

நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கம்மும்
தேமூ ரொண்ணுத னின்னொடுஞ் செலவே.

19. தோழி கூற்று

அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

20. தலைவி கூற்று

கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த வொருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே.

21. தோழி கூற்று

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்

வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னேயே.

22. தலைவி கூற்று

முட்டு வேன்கொ ருக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமர லசைவளி யலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

23. தலைவன் கூற்று

நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்
பெயனீர்க்கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூச லுயர் கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

24. தலைவி கூற்று

அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.

25. தோழி கூற்று

ஒருப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றாய்
இனியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅ, தியானையங் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மரந்தை யன்னவெம்
குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே.

26. தலைவி கூற்று

நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.

27. தலைவி கூற்று

துறுக வயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்
நெஞ்சுகள ஞக நீயலென் யானென
தற்றேண் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னனே.

28. தோழி கூற்று

நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே.

29. தலைவி கூற்று

கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்ற நாடன் கேண்மை யென்றும்
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
நீரொ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.

30. தலைவன் கூற்று

யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

31. தலைவி கூற்று

காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேண் மன்ற
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய வணிலாடு மூன்றிற்
புலப்பில் போலப் புல்லென்
றலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே.

32. தோழி கூற்று

காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென வருவி

விடரகத் தியம்பு நாடவெம்
தொடர்புந் தேயுமோ நின்வயி னானே.

33. தலைவி கூற்று

செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
ஒவ்வா ளல்லளென் றவரிகழந் தனரே
ஆயிடை, இருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்ல னெஞ்ச மலமலக் குறுமே.

34. செவிலித்தாய் கூற்று

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

35. தோழி கூற்று

காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூர ரெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன் றாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

36. தலைவி கூற்று

ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கன் மாந்தி மன்றத்
தெருவி னுண்டாது குடைவன வாடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொ றோழியவர் சென்ற நாட்டே.

37. தோழி கூற்று

கருங்கால்வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

38. தோழி கூற்று

தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென

ஓரை யாயங் கூறக் கேட்டும்
இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதல் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பி னொருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

**39. தலைவி கூற்று**

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

**40. தலைவி கூற்று**

ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ணூரே யிறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

—சங்கப் புலவர்கள்

**குறிப்புரை**

சங்ககாலத் தொகை நூல்களாகிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இது 4 அடி முதல் 8 அடி வரையிலான அகவற்பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் 205 புலவர் பெரு மக்கள் பாடிய 400 அகப்பொருள் பாடல்கள் உள்ளன. எனவே, இதனைக் 'குறுந்தொகை நானூறு' என்றும் கூறுவர்.

1. அவுணர் - சூரபதுமன் முதலியோர்; கோல் - திரட்சி; கோடு - கொம்பு; கோட்டியானை - குற்றியலிகரம். சேஎய் - முருகன், அளபெடை; செய்யுட்கண் இசை நிறைத்தற்கு வந்தது. குருதிப்பூ - செந்நிறமான பூ. காந்தட்டு - காந்தளினை உடையது; 'டு' விகுதி; குறிப்புவினை முற்று.

"நீ கொண்டுவரும் காந்தள் மலர் எமது மலையிலும் உண்டு; யாம் இதனை வாங்கேம்", எனத் தோழி கையுறை மறுத்தாள். கையுறை - ஒருவர் ஒருவரைக் காணும்போது அன்பின் அடை யாளமாய்க் கொடுக்கும் பொருள்.

2. கொங்கு - பூந்தாது; தேர் - ஆராய்கின்ற; அஞ்சிறை உள் ளடங்கிய சிறகு ; அகம்+சிறை=அஞ்சிறை என வந்தது. அகம்

மூனர்ச் செவிகைவரின் இடையன கெடும் (நன் - மெய் - 19). தும்பி - வண்டு, அண்மை விளி; காமம் - விரும்பியது; கண்டது - மெய்யாக ஆராய்ந்து உணர்ந்தது. மொழி - சொல்வாயாக; 'மோ' - முன்னிலை அசை. பயிலியது - பழகுதல்; செழீஇய - பொருந்திய; குற்றெழுத் தளபெடை. நெட்டெழுத்தே அளபெடுக்கும். சில இடங்களில் குற்றெழுத்து நெட்டெழுத்தாய் நீண்டு பின்னர் அளபெழும். இஃது ஒரு சொல் பிறிதொரு சொல்லின் தன்மையைப் பெறுதற்காக அளபெடுப்பதும் தளை முதலியன வழுவாதிருந்தும் இன்னோசை நிறைத்தற்காக அளபெடுப்பதும் என இருவகைப்படும். முன்ன தைச் சொல்லிசை அளபெடை என்றும் பின்னதை இன்னிசை அள பெடை என்றும் கூறுவர். இவை பொதுவாகக் குறில் நெடிலாய்ப் பின் அளபெடுப்பதனால் குற்றெழுத்தளபெடை என்றே குறிக்கப படும். (இலக்கணக் கொத்துரை - ஒழிபியல் - சூ. 4)

இப்பாடல் பற்றியதொரு வரலாற்றினைத் திருவிளையாடல் புராணம் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தாலும் தமிழ் நாவலர் சரிதையாலும் அறியலாம்.

3. உயர்ந்தன்று - உயர்ந்தது; ஆர் - அளத்தற்கரிய ; அள வின்று - அளவினை உடையது ; இவை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று. 'று' விகுதி; அன், இன் - சாரியைகள்.

4. தாங்கி - தடுத்து; அமைவிலர் - மனம் பொருந்துதல் இல்லாதவர்.

5. நள்ளென்றன்று - செறிவுடையதாய் இருக்கிறது ; நளி என்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது. என்றன்று - என்னும் குறிப்பினை உடையதாய் இருக்கிறது. யாமம் - இரவு ; அவிந்து - அடங்கி ; அடங்கினர் - இயக்கம் தவிர்ந்து உறங்கினர். நனந்தலை - அகன்ற இடம். நன - உரிச்சொல்; உலகம் - உயிர்ப் பன்மையை உணர்த் தும். துஞ்சாதேன் - துயிலாதேன். மன்ற - இடைச்சொல், தேற்றப் பொருளில் வந்தது.

6. வில்லான், தொடியாள் என்னும் ஈற்றயல் ஆகாரம் செய்யுளில் ஒகாரமாயிற்று. காலன - காலில் உள்ளன ; மேல - மேலே உள்ளன ; பலவின்பால் படர்க்கை வினையாலணையும் பெயர். ஆரியர் - ஆரியக் கூத்தாடுவோர் ; அளியர் - அருள் செய்தற்குரி யவர் ; கயிறுடுபறை - கயிற்றின்மேல் ஏறி ஆடுங்காலத்துக் கொட்டும்பறை ; கால் - காற்று ; வாகை - வாகை மரம்; வேய - மூங்கில் ; அழுவம் - பாலை நிலப்பரப்பு ; முன்னியோர் - கருதி வருபவர்.

7. யாய் - கற்புக் கடம் பூண்ட இல்லத் தலைவி; மாஅயோள் - மாமைநிறம் உடையவள்; மடை - பொருத்துவாய்; வைகிய - இருந்த; பெய்யாப் பூ - சூடப்படாத பூ; சாயினள் - மெலிந்தாள்; சாய் என்னும் உரிச்சொல்லடியாக வந்த வினைமுற்று. பாசடை - பசுமையான இலை, பசுமை + அடை; நிவந்த - உயர்ந்த; கணைக்கால் - திரண்டகாம்பு; ஓதம் - வெள்ளம்; தண்ணந்துறை - அம் விரித்தல் விகாரம். துறைவன் - நெய்தல் நிலத்தலைவன்; கரப்பு ஆடும் மறைத்துப் பேசுகிறாள்.

8. விழவு - மகிழ்ச்சி விழா என்னும் குற்றெழுத்தின் பின் நின்ற ஆகார ஈறு குறுகி உகரம் பெற்றது. முதலாட்டி - காரணமானவள்; இணர - பூங்கொத்தில் உள்ளனவாகிய - குறிப்புப் பெயரெச்சம்; பைந்தாது பசுமை + தாது. பண்புச் சொல்லின் ஈறு கெட்டு, முதல் அகரம் ஐகாரமாய்த் திரிந்து, இடை நின்ற உயிர்மெய் கெட்டு,வரும் எழுத்திற்கு இனம் மிக்கு முடிந்தது. படீஇயர் - பட; செய்யியர் என்னும் வாய்பாட்டு வினையெச்சம். காஞ்சி - ஒருவகை மரம்; கரந்தனள் - மறைத்தனள்; நாணிய - நாண; செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். 'வரும்' செய்யும் என்னும் முற்று.

9. கோடு ஈர் இலங்கு வளை - சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளை; பாடு இல - உறங்குதல் இல்லாதன வாகிய; கலிழும் - அழுகின்ற; புலம்பி தனித்து; முனது - முன்னிடத்தேயுள்ளது; குல்லைக் கண்ணி - கஞ்சங்குல்லையால் தொடுத்த மாலை; இனி - இப்பொழுது; கட்டி - சேரமன்னர்களின் படைத் தலைவர்களுள் ஒருவன்; கங்க நாட்டை ஆண்டு வந்தவன். மொழி பெயர் தேஎத்தர் - மொழி மாறுபட்ட தேசத்தில் இருப்பவர்; வழிபடல் - செல்லுதல்; சூழ்ந்திசின் - எண்ணினேன்; 'சின்' அசை; தன்மையில் வந்தது.

10. அளை - வளை; சுனைய - சுனைகளை உடைய குறிப்புப் பெயரெச்சம்; உலைக்கல் - கொல்லன் உலைக்களத்தில் இருக்கும் பட்டடைக் கல். பகழி - அம்பு; மாய்க்கும் - தீட்டும்; கவலைத்து - கிளைத்துச் செல்லும் வழிகளை உடையது. 'து' விகுதி குறிப்பு வினைமுற்று. நொதுமல் - அயன்மையுடைய சொற்களால்; கழறும் - இடித்துரைக்கும்; அழுங்கல் - ஆரவாரம்.

11. கழீஇய - கழுவிய; குற்றெழுத்தளபெடை; பிணர் - சுரசுரப்பு; துறுகல் - பொற்றைக்கல்; உழந்த - ஏற்றுக்கொண்ட; பைதல் - பசுமை; சேக்கும் - தங்கும்; நாடன் - முல்லை நிலத் தலைமகன்.

12. பட - ஒலிக்க; பணிலம் - சங்கு; இறைகொள்பு - தங்கி; 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கோசர் - ஒருவகை

வீரர் கூட்டத்தினர்; பொதியில் - ஊர்ப் பொதுவிடம்; வாயா கின்று - உண்மையாகியது.

13. உள்ளார்கொல்லோ - நினையாரோ; 'கொல்' அசை. ஓகாரம் எதிர்மறை; உள்ளுவர் என்பது கருத்து. பொன்புனைபகழி - இரும்பாற் செய்த அம்பு; செப்பம் - கூர்மை; கொண்மார் - கொள்ளும் பொருட்டு ; 'மார்' ஈற்று வினைமுற்று எச்சப் பொருளில் வருவதால் முற்றெச்சமாம். உகிர்நுதி - நகத்தின் முனை ; பயிரும் அழைக்கும் ; கள்ளி - பாலை நிலத்துத் தாவரங்களுள் ஒன்று ; இறந்தோர் கடந்து சென்றோர்.

14. வேரல்வேலி - மூங்கில் தூறுகளால் இயல்பாக அமைந்த வேலி. (இது வாழ் முள்வேலி; செயற்கையாகக் கட்டிவைத்த வேலி இடு முள்வேலி எனப்படும்.) கோள் – குலை ; நாட - அண்மைவிளி ; செவ்வியை – மணம் செய்து கொள்ளும் பக்குவம் உடையவனாய் ; முற்றெச்சம். ஆகுமதி – ஆவாயாக; மதி – முன்னிலையசை. அறிந்திசினோர் – அறிந்தோர் ; சின் – அசை. படர்க்கையில் வந்தது. தூங்கியாங்கு – தொங்கினாற்போல ; தவ – மிகவும், உரிச்சொல் ; ஓபெரிது - மிகப் பெரிது ; 'ஓ' – இடைச் சொல் ; சிறப்புப் பொருளில் வந்தது.

15. எவ்வி - ஒரு வள்ளல் ; புல்லென்று - குறிப்புச் சொல், பொலிவழிந்து; என்று என்னும் எச்சம் பண்புப் பொருளில் வந்தது. இனைமதி - வருந்துவாயாக ; மதி, வாழிய - முன்னிலையசை எல் - ஒளி; மௌவல் - முல்லை; கூந்தல் - தலைவி ; அன்மொழித் தொகை ; யாரளோ - என்ன உறவு உடையவள்.

16. உரவோர் - முன்னது அறிவுடையவர் ; பின்னது வலியுடையவர். மடவம் - அறியாமையுடையேமாவோம். 'ஆக' இரண்டும் வியங்கோள் : முன்னது படர்க்கைக்கண் வந்தது ; பின்னது தன்மைக்கண் வந்தது.

17. வண்டுபட – வண்டு மொய்க்கும்படியாக ; ததைந்த – நெருங்கி மலர்ந்த ; இணர் - பூங்கொத்து ; இடையிடுபு - இடையே இட்டு ; 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இழை - அணி கலன்; கதுப்பின் – கூந்தல்போல் ; 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு; உவமப் பொருளில் வந்தது. கானம் - காடு; கார் எனக் கூறினும் - இது கார்காலம் என்பதை உணர்த்தினாலும்; கூறுதல் – இலக்கணை, யானோ தேறேன் – யான் தெளியேன். ஓகாரம்-பிரிநிலை. வழங்கலர் - வழங்கார்; 'அல்' எதிர் மறையிடைநிலை.

18. வார் – ஒழுகுகின்ற; கண்ணை – கண் உடையவளாய், முன்னிலைக் குறிப்பு முற்றெச்சம். யாரோ – 'ஓ' அசை; சிலம்பு – மலை ;

மராஅம் - வெண் கடம்பு மரம்; மராஅத்து மராஅம் - அத்து நிலை மொழியீற்று மகரம் கெடுச் சாரியை அகரம் கெடாது முடிந்தது. தேம் - மணம்; ஊர்-பரந்த; ஒண்ணுதல் - அண்மை விளி

19. அகவல் மகள் - தெய்வங்களை அழைத்துப் பாடிக் குறி சொல்லும் கட்டுவிச்சி; மனவு - சங்குமணி; கட்டுப்பார்த்தல் முறத்தில் நெல்லைப்பரப்பித் தெய்வத்தை நினைந்து நிற்குங்கால் நெல்லில் தோன்றும சில அடையாளங்களைக் கொண்டு பலன் கூறுதல்; ஒற்றை இரட்டை எண்ணிப் பார்த்துப் பலன் கூறுதல் என்றும் சொல்வர்.

20. கால் -.அடிமரம்; யாணர் – புதுவருவாய்; உரிச்சொல்; என் ஐ – என்னுடைய தலைவன்; அதவத்து – அத்தி மரத்தினுடைய; அதவம் + அத்து, நிலைமொழியீறும் சாரியை அகரமும் கெட்டு முடிந்தது. குளிறு – நண்டு; கல் என்ற – ஒலிக்குறிப்புச் சொல்; ஆரவாரம் உடையவாயின. என்ற - என்று என்னும் இடைச் சொல்லடியாக வந்த அன்பெறுத அகர ஈற்று அஃறிணைப் பலவின் பால் படர்க்கை வினைமுற்று. என்று என்னும் இடைச்சொல் இசைப்பொருளில் வந்தது.

21. அற – முழுவதும்; மேக்கு – மேலே; தான் – கட்டுப்பார்ப் பவள்; தேக்கொக்கு - இனிய மாவின் கனி, தேன் + கொக்கு = தேக் கொக்கு என வந்தது. துவர் – செம்மை; பறழ் – குட்டி, குரங்கின் இளமைக்கு வந்தது; கடுவன் – ஆண் குரங்கு.

22. ஓரேன் – உணரேன்; ஓர்பெற்றி – யாதானும் ஒரு காரணம்; மேலிட்டு – மேற்கொண்டு; ஆஅ, ஒல் - ஒலிக்குறிப்புச் சொற்கள்; அலமரல் - சுழலுதல்; உரிச்சொல்; உயவு – வருத்தம்; உயா என்னும் உரிச்சொல் திரிந்து வந்தது.

23. இகந்து - நீங்கி; தாஅய் - பரந்து; பசுங்கலம் - சுடப் படாத மட்கலம்; நன்றும் பெரிது - மிகவும் பெரிது. நன்று - உரிச் சொல்; ஆல், அம்ம - அசைநிலை இடைச்சொல்.

24. அன்னாய் - விளி; ஐகாரம் ஆய் எனத் திரிந்து விளித்தது. என்னன் - எத்தகையனோ; இரந்தூண் நிரம்பாமேனி - பிச்சை ஏற்று உண்பதனால் நன்கு வளராத உடம்பு. ஊரும் - செல்லும்; செம்மலன் - தலைமையுடையன்.

25. ஓவலர் - நீங்காதவராய்; தேறலர் - தெளியாதவராய்; கௌவை - வருத்தம்; ஊர் - மக்கள். இடவாகுபெயர்; முனாஅது - முன்னிடத் துள்ளதாகிய; யானையங்குருகு - பறவையுள் ஒருவகை. கானல் - கடற் கரைச் சோலை; தோடு - தொகுதி; அட்ட மள்ளர் - பகைவரைக் கொன்ற வீரர்; வெரூஉம் - அஞ்சுகின்ற; குற்றெழுத்

தளபெடை; மரந்தை - சேரர்க்குரிய நகரங்களுள் ஒன்று; குழல் - கூந்தல்; கிழவன் - உரிமையுடையவன்.

26. நாள் + நேர்பு - நாணேர்பு; தலைவன் பிரிந்த நாளில் உடம்பட்டு; 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கனைத்த - திரண்ட; உறை - மழை; தலைஇய - பொருந்திய; பிரிந்திசினோர் - பிரிந்த தலைவர். 'சின்' - அசை, படர்க்கைக்கண் வந்தது; அழல் - அழுதல்; தொழிற்பெயர்.

27. மாணை - ஒருவகைக் கொடி; இவரும் - மேலே படரும்; நீயலென் - நீங்கேன்; தாவா - கெடாத; நோயோ - 'ஓ' - எதிர்மறை.

28. களைஇய - களையும் பொருட்டு; செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; யாஅம் - ஒருவகை மரம்; பொளித்தல் - பட்டையை உரித்தல்; ஆறு - வழி.

29. மஞ்ஞை - மயில்; பெயர்த் திரிசொல்; அறை - பாறை; முசுவின் குருளை - குரங்குக் குட்டி; தணப்ப - பிரிய; மன் - இடைச்சொல். மிகுதி என்னும் பொருளில் வந்தது.

30. யாய் - என் தாய்; தன்மைக்குரியது. ஞாய் - உன் தாய்; முன்னிலைக்குரியது. ஆகியர் - ஆவர்; திரிசொல். எந்தை - என் தந்தை, தன்மைக்குரியது; நுந்தை - உன் தந்தை; முன்னிலைக் குரியது. (தாய், தந்தை இரண்டும் படர்க்கைக் குரியனவாம்) கேளிர் - உறவினர்; செம்புலம் - செம்மண் நிலம்.

31. சாறு - விழா; புகல்வேன் - விரும்புவேன்; அத்தம் - பாலை நிலத்து வழி; புலப்பில் (புலம்பு + இல்) - தனியான வீடு; புணர்ச்சிக்கண் மென்றொடர் வன்றொடராயிற்று; அலப்பென் - வருந்துவேன்; தன்மை ஒருமை முற்று.

32. கருவி - தொகுதி, உரிச்சொல்; வீழ்ந்தென - பெய்ததாக ;- 'செய்தென' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். தேயுமோ - 'ஓ' - எதிர்மறை.

33. செல்வாரல்லர் - செல்லார்; ஒல்வாளல்லள் - உடம்படாள்; ஆயிடை - அ + இடை = ஆயிடை என வந்தது; கதுவியாங்கு - கவ்விற்றுப்போல; அலமலக்கு - கலக்கம்.

34. பரி - நடை; வாள் - ஒளி; உரிச்சொல். கடுந்தேர் - விரைந்து செல்லும் தேர்; வால் இழை - தூய அணிகலன்.

**35.** தழீஇய - தழுவ, 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; மல்லல் - வளப்பம்; எல்லினன் - விளக்கம் உடையவன்; 'எல்' என்னும் இடைச் சொல்லடியாக வந்த குறிப்பு வினை முற்று. மறுவரும் - மனம் சுழலும்; தெறுவது - துன்புறுத்துவது; திணைப் பிறத்தல் - உயர்குடியிற் பிறத்தல்; பிறத்தல்லே - லகரம் விரித்தல் விகாரம்.

**36.** சாம்பல் - வாடிய பூ; சிறகர் - இறுதிப்போலி; குரீஇ - குருவி; குற்றெழுத்தளபெடை; உணங்கல் - காய வைத்த தானியம்; மாந்தி - தின்று; எரு - உலர்ந்த சாணப்புழுதி; குடைவன - குடைந்து; முற்றெச்சம். இறை - இறப்பு; வீட்டுக்கூரையின் முன்னிடம்; புன்கண் - துன்பம்; இன்றுகொல் - இல்லையோ. 'கொல்' - ஐயம்.

**37.** வேங்கை - வேங்கை மரம்; வீ - மலர்; குருளையின் - குட்டி போல; 'இன்' ஐந்தாம் வேற்றுமை; ஒப்புப் பொருள். எல்லி - இரவுப் பொழுது; வருநர் - வருந்தலைவன்; வினையாலணையும் பெயர்ச்சொல். நல்லையல்லை - நன்மைசெய்வாயல்லை.

**38.** தாதின் செய்த - பூந்தாதுக்களால் செய்யப்பட்ட; 'இன்' ஐந்தாம் வேற்றுமை, ஏதுப்பொருள். ஓரை - மகளிர் விளையாட்டு; ஆயம் - கூட்டம்; இனை - துன்பம்.

**39.** அன்ன - உவமஉருபு; முண்டகம் - முள்ளிச்செடி. கேழ் - நிறம், உரிச்சொல்; மா - கரிய; சேர்ப்ப - நெய்தல் நிலத்தலைவனே, அண்மை விளி; ஆகியர் - இரண்டும் வியங்கோள்; முன்னது முன்னிலைக்கண்ணும் பின்னது தன்மைக்கண்ணும் வந்தன.

**40.** ஐயவி - வெண்சிறு கடுகு; ஞாழல் - ஒருவகைமரம்; செம்மல் - பழைய பூ; தாஅய் - பரந்து; அணிந்தன்று - அழகு செய்தது. இறை - முன்கை; இறந்து - கடந்து.

[இப்பாடல்களின் திணை, பாடியோர் பெயர் ஆகிய விவரங்களை 152-ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காண்க]

# 4. சிலப்பதிகாரம்

## வாழ்த்துக் காதை

### தேவந்தி சொல்

முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து
கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர். 1

### காவற்பெண்டு சொல்

மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள் காதற் கணவன் கைப்பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர். 2

### அடித்தோழி சொல்

தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த
வெற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லைக்
கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர் 3

### தேவந்தியரற்று

செய்தவ மில்லாதேன் தீக்கனாக் கேட்டநா
ளெய்த வுணரா திருந்தேன்மற் றென்செய்தேன்
மொய்குழல் மங்கை முலைப்பூசல் கேட்டநா
ளவ்வை யுயிர்வீவுங் கேட்டாயோ தோழீ
யம்மாமி தன்வீவுங் கேட்டாயோ தோழீ. 4

### காவற்பெண்டரற்று

கோவலன் றன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் றன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து

மாசாத்து வான்றுறவுங் கேட்டாயோ வன்னை
மாநாய்கன் றன்றுறவுங் கேட்டாயோ வன்னை 5

### அடித்தோழியரற்று

காதலன் றன்வீவுங் காதலிநீ பட்டதூஉ
மேதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ. 6

### தேவந்தி ஐயையைக் காட்டிய அரற்றியது

ஐயந்தீர் காட்சி யடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன் பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
வவ்வை மகளிவடா னம்மணம் பட்டிலா
வையெயிற் றையையைக் கண்டாயோ தோழீ
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ. 7

### செங்குட்டுவன் கூற்று

என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமால். 8

### செங்குட்டுவற்குக் கண்ணகியார் கடவுணல்லணி காட்டியது

தென்னவன் றீதிலன் றேவர்கோன் றன்கோயி
னல்விருந் தாயினா னனவன் றன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலே
னென்னோடுந் தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம். 9

### வஞ்சிமகளிர் சொல்

வஞ்சியீர் வஞ்சி யிடையீர் மறவேலான்
பஞ்சடி யாயத்தீ ரெல்லீரும் வம்மெல்லாங்
கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாந்
தென்னவன் றன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம். 10

செங்கோல் வளைய வுயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் றன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம். 11

## ஆயத்தார் சொல்

வானவ னெங்கோ மகளென்றும் வையையார்
கோனவன்றான் பெற்ற கொடியென்றாள்—வானவனை
வாழ்த்துவோ நாமாக வையையார் கோமானை
வாழ்துவா டேவ மகள். 12

## வாழ்த்து

தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர் வையை
சூழு மதுரையார் கோமான்றன் றொல்குலமே. 13

மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிமே லேற்றினான் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர்த் தண்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் றொல்குலமே 14

எல்லா நாம்
காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார். 15

## அம்மானை வரி

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோ
னோங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
யோங்கரணங் காத்த வுரவோ னுயர்விசும்பிற்
றூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை. 16

புறவுநிறை புக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை. 17

கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன் றிக்கெட்டுங்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
கொற்றவன் பூம்புகார் பாடேலோ ரம்மானை. 18

அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை

கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்த
னம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை. 19

### கந்துக வரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்பவார்ப்ப வெங்கணுந்
தென்னவன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே. 20

பின்னுமுன்னு மெங்கணும்பெ யர்ந்துவந்தெ ழுந்துலாய்
மின்னுமின்னி ளங்கொடி வியனிலத்தி ழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே. 21

துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலந்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே. 22

### ஊசல் வரி

வடங்கொண் மணியூசன் மேலிரீஇ யையை
யுடங்கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்
கடம்பு முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்
கொடுவிற் பொறிபாடி யாடாமோ வூசல். 23

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றுது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல். 24

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கற்
றென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக் குங்கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செ யிடைநுடங்க வாடாமோ வூசல்
விறல்விற் பொறிபாடி யாடாமோ வூசல். 25

### வள்ளைப் பாட்டு

தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார்மகளி
ராழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பூவைமா ராரிரக்கும் பாடலே பாடல். 26

பாடல்சான் முத்தம் பவழ வுலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோ னாரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல். 27

சந்துரற் பெய்து தகைசா லணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டாற்
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல். 28

### பத்தினிக் கடவுள் செங்குட்டுவனை வாழ்த்துதல்

ஆங்கு,
நீணில மன்னர் நெடுவிற் பொறையனற்
றடொழார் வாழ்த்த நமக்கரிது சூழொளிய
வெங்கோ மடந்தையு மேத்தினா ணீடூழி
செங்குட் டுவன்வாழ்க வென்று. 29

## வரந்தரு காதை

வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை
கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்
றேவந் திகையைச் செவ்விதி னோக்கி
வாயெடுத் தரற்றிய மணிமே கலையார்
யாதவ டுறத்தற் கேதுவீங் குரையெனக்
கோமகன் கொற்றங் குறைவின் றோங்கி
நாடு பெருவளஞ் சுரக்கென் றேத்தி
யணிமே கலையா ராயத் தோங்கிய
மணிமே கலைதன் வான்றுற வுரைக்கு
மையீ ரோதி வகைபெறு வனப்பி
னைவகை வகுக்கும் பருவங் கொண்டது
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்க
ணவ்விய மறிந்தன வதுதா னறிந்திலள்
ஃ ஃ ஃ ஃ
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்
யாது நின்கருத் தென்செய் கோவென
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப
வருகவென் மடமகண் மணிமே கலையென்
றுருவி லாள னொருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து

போதித் தானம் புரிந்தறம் படுத்தன
ளாங்கது கேட்ட வரசனு நகரமு
மோங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர்
தம்மிற் றுன்பந் தாநனி யெய்தச்
செம்மொழி மாதவர் சேயிழை நங்கை
தன்றுற வெமக்குச் சாற்றின ளென்றே
யன்புறு நன்மொழி யருளொடுங் கூறினர்
பருவ மன்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை கோல நீங்கின ளாதலி
னரற்றின ளென்றுங் கரசற் குரைத்தபிற்
குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்
துடித்தனள் புருவந் துவரிதழ்ச் செவ்வாய்
மடித்தெயி றரும்பினள் வருமொழி மயங்கின
ளிருமுகம் வியர்த்தனள் செங்கண் சிவந்தனள்
கைவிட் டோச்சினள் கால்பெயர்த் தெழுந்தனள்
பலரறி வாராத் தெருட்சியள் மருட்சிய
ளுலறிய நாவின ளுயர்மொழி கூறித்
தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர்க் குறிஞ்சிக் கோமான் றன்முன்
கடவுண் மங்கலங் காணிய வந்த
மடமொழி நல்லார் மாணிழை யோரு
ளரட்டன் செட்டித னாயிழை யீன்ற
விரட்டையம் பெண்க ளிருவரு மன்றியு
மாடக மாடத் தரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமக ளீங்குளண்
மங்கல மடந்தை கோட்டத் தாங்கட்
செங்கோட் டுயர்வரைச் சேணுயர் சிலம்பிற்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய
வணிகயம் பலவுள வாங்கவை யிடையது
கடிப்பகை நுண்கலுங் கவிரிதழ்க் குறுங்கலு
மிடிக்கலப் பன்ன விழைந்துகு நீரு
முண்டோர் சுனையத னுள்புக் காடினர்
பண்டைப் பிறவிய ராகுவ ராதலி
னங்கது கொணர்ந்தாங் காயிழை கோட்டத்
தோங்கிருங் கோட்டி யிருந்தோ யுன்கைக்
குறிக்கோட் டகையது கொள்கெனத் தந்தே
னுறித்தாழ் கரகமு முன்கைய தன்றே
கதிரொழி காறுங் கடவுட் டன்மை

மூதிரா தந்நீர் முத்திற மகளிரைத்
தெளித்தனை யாட்டினிச் சிறுகுறு மகளி
ரொளித்த பிறப்பின ராகுவர் காணாய்
பாசண் டன்யான் பார்ப்பனி தன்மேன்
மாடல மறையோன் வந்தே னென்றலு
மன்னவன் விம்மித மெய்தியம் மாடலன்
றன்முக நோக்கலுந் தானனி மகிழ்ந்து
கேளிது மன்னா கெடுகநின் றீயது
மாலதி யென்பாண் மாற்றாள் குழவியைப்
பால்சுரந் தூட்டப் பழவினை யுருத்துக்
கூற்றுயிர் கொள்ளக் குழவிக் கிரங்கி
யாற்றாத் தன்மைய ளாரஞ ரெய்திப்
பாசண் டன்பாற் பாடு கிடந்தாட்
காசில் குழவி யதன்வடி வாகி
வந்தன னன்னைநீ வான்றுய ரொழிகெனச்
செந்திறம் புரிந்தோன் செல்ல னிக்கிப
பார்ப்பனி தன்னொடு பண்டைத் தாய்பாற்
காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து
தேவந் திகையைத் தீவலஞ் செய்து
நாலீ ராண்டு நடந்ததற் பின்னர்
மூவா விளநலங் காட்டியென் கோட்டத்து
நீவா வென்றே நீங்கிய சாத்தன்
மங்கல மடந்தை கோட்டத் தாங்க
ணங்குறை மறையோ னாகத் தோன்றி
யுறித்தாழ் கரகமு மென்கைத் தந்து
குறிக்கோள் கூறிப் போயினன் வாரா
னாங்கது கொண்டு போந்தே னாதலி
னீங்கிம் மறையோ டன்மேற் றோன்றி
யந்நீர் தெளியென் றறிந்தோன் கூறினன்
மன்னர் கோவே மடந்தையர் தம்மேற்
றெளித்தீங் கறிகுவ மென்றவன் றெளிப்ப
வொளித்த பிறப்புவந் துற்றதை யாதலிற்
புகழ்ந்த காதலன் போற்றா வொழுக்கி
னிகழ்ந்ததற் கிரங்கு மென்னையு நோக்கா
யேதி னன்னாட் டியாருமி லொருதனிக்
காதலன் றன்னொடு கடுந்துய ருழந்தா
யான்பெறு மகளே யென்றுணைத் தோழி

வான்றுயர் நீக்கு மாதே வாரா
யென்னோ டிருந்த விலங்கிழை நங்கை
தன்னோ டிடையிருட் டனித்துய ருழந்து
போனதற் கிரங்கிப் புலம்புறு நெஞ்சம்
யானது பொறேஎ னென்மகன் வாராய்

வருபுனல் வையை வான்றுறைப் பெயர்ந்தே
னுருகெழு மூதூ ரூர்க்குறு மாக்களின்
வந்தேன் கேட்டேன் மனையிற் காணே
னெந்தா யிளையா யெங்கொளித் தாயோ
வென்றாங் கரற்றி யினைந்தினைந் தேங்கிப்

பொன்றா ழகலத்துப் போர்வெய் யோன்முன்
குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்
முதியோர் மொழியின் முன்றி னின்றழத்
தோடலர் போந்தைத் தொடுகழல் வேந்தன்
மாடல மறையோன் றன்முக நோக்க

மன்னர் கோவே வாழ்கென் றேத்தி
முந்நூன் மார்பன் முன்னிய துரைப்போன்
மறையோ னுற்ற வான்றுயர் நீங்க
வுறைகவுள் வேழக் கையகம் புக்கு
வானோர் வடிவம் பெற்றவன் பெற்ற

காதலி தன்மேற் காதல ராதலின்
மேனிலை யுலகத் தவருடன் போகுந்
தாவா நல்லறஞ் செய்தில ரதனா
லஞ்செஞ் சாய லஞ்சா தணுகும்
வஞ்சி மூதூர் மாநகர் மருங்கிற்

பொற்கொடி தன்மேற் பொருந்திய காதலி
னற்புளஞ் சிறந்தாங் கரட்டன் செட்டி
மடமொழி நல்லாண் மனமகிழ் சிறப்பி
னுடன்வயிற் றோரா யொருங்குடன் றோன்றின
ராயர் முதுமுக ளாயிழை தன்மேற்

போய பிறப்பிற் பொருந்திய காதலி
னாடிய குரவையி னரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமக ளாயின
ணற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலு
மற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலு

மறப்பயன் விளைதலு மறப்பயன் விளைதலும்
பிறந்தவ ரிறத்தலு மிறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை

யானே றூர்ந்தோ னருளிற் றோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவ னாதலிற்
செய்தவப் பயன்களுஞ் சிறந்தோர் படிவமுங்
கையகத் தனபோற் கண்டனை யன்றே
யூழிதோ றூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை யென்ற
மாடல மறையோன் றன்னொடு மகிழ்ந்து
பாடல்சால் சிறப்பிற் பாண்டிநன் னாட்டுக்
கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனிப்
பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து
நித்தல் விழாவணி நிகழ்கென் றேவிப்
பூவும் புகையு மேவிய விரையுந்
தேவந் திகையைச் செய்கென் றருளி
வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
யுலக மன்னவ னின்றோன் முன்ன
ரருஞ்சிறை நீங்கிய வாரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னருங்
குடகக் கொங்கரு மாளுவ வேந்தருங்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனு
மெந்நாட் டாங்க ணிமைய வரம்பனி
னன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தோர்குர
லாங்கது கேட்ட வரசனு மரசரு
மோங்கிருந் தானையு முரையோ டேத்த
வீடுகண் டவர்போன் மெய்ந்நெறி விரும்பிய
மாடல மறையோன் றன்னொடுங் கூடித்
தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற
வேள்விச் சாலையின் வேந்தன் பெயர்ந்தபி
னியானுஞ் சென்றே னென்னெதி ரெழுந்து
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழ லிருந்தோய் நின்னை
யரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன்மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்

செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்மு
னகலிடப் பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் தரசாள் வேந்தென்

றென்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி
தன்றிற முரைத்த தகைசா னன்மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
றெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்

பொய்யுரை 'யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமி
னூனூண் டுறமி னுயிர்க்கொலை நீங்குமின்
றானஞ் செய்ம்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லமின் றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்

அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமி
னறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்

வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமி
னிளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்.

## குறிப்புரை

### வாழ்த்துக் காதை

பண்டைத் தமிழ்க் காப்பியங்களுள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது சிலப்பதிகாரம்; கோவலன் - கண்ணகியர் வரலாற்றைக் கூறுவது. இதில் இசைத் தமிழின் கூறுகிய வரிப் பாடல்களும், நாடகத் தமிழுக்குரிய உரைப்பாட்டுகளும் காணப்படுவதால், இதனை, 'இயல் இசை நாடகப் பொருட் தொடர்நிலைச் செய்யுள்' எனவும் வழங்குவர். இக் காப்பியத்துள் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களும் அவற்றுள் 30 காதைகளும் உள்ளன.

இப் பெருங்காப்பியம் பாடியவர் இளங்கோவடிகள். இவருடைய வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. இவர் அரசு துறந்து

துறவு பூண்டு குணவாயில் கோட்டத்து இருந்தார் என்றும், 'குடக் கோச் சேரல்' என்றும், 'இளங்கோவடிகள்' என்றும் பதிகம் இவரை அறிமுகப்படுத்துகிறது. இவர் காலத்து விளங்கிய மற்றொரு பெரும்புலவர் மணிமேகலைக் காவியம் பாடிய மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனுர் ஆவர்.

1. கடுவரல் - விரைந்து வருதலை உடைய; தொடிவளை - உம்மைத்தொகை, தொடியும் வளையும் அணிந்த; கண்டீர் - அசை.

2. மடம் படு - மடம் என்னும் குணம் தோன்றுகின்ற; கடம்படாள் - காரணமாகக் கருதிச் சினங்கொள்ளாள்; கூவல் - கிணறு; குடம் புகா என்றது நீரின்மையால்.

3. தற்பயந்தாள் - தன்னை (கண்ணகியை)ப் பெற்ற நற்றாய்; புறங்காத்தல் - ஒரு சொல், காத்தல் என்பது பொருள். எற் பயந்தாள் - என்னை (கண்ணகியின் தோழியை)ப் பெற்ற தாய், (கண்ணகிக்குச் செவிலி); கடம்பூண்டு - உரிமையினை மேற் கொண்டு.

4. தீக்கனு - கண்ணகி கண்டு தேவந்திக்குக் கூறியது (புகார்க் காண்டம் - கனுத்திறம் உரைத்த காதை); அவ்வை - தாய்; வீவு - நீங்குதல்.

5. மாநாய்கன் - கண்ணகிக்குத் தந்தை.

6. ஏச்சுரை - பழிப்புரை; போதி - அரசமரம்; மாதவர் - பெரிய தவசியர்.

7. காட்சி - நற்காட்சி, இங்கு இதனை உடைய கவுந்தியடிகளை உணர்த்திற்று. வல்லாதேன் - வலிமையில்லாத யான்; மயல் - மயக்கம்; மணம் பட்டிலா - திருமணத்தைப் பெருத; வை - கூர்மை; மாமி என்றது மாதரியை.

8. அடுக்கு வியப்பு மிகுதியை உணர்த்திற்று. பொன்னஞ் சிலம்பு - பொற்சிலம்பு; அம் - சாரியை; நாவலம் பொன் - சாம்பூநதம் என்னும் பெயருடைய பொன்.

9. வென்வேலான் - வெற்றியைத் தரும் வேலை உடையவன்; வம் - பன்மை ஏவல்; எல்லீரும் - முன்னிலை; எல்லாம் - படர்க்கை, நீயிரும் பிறரும் வம்மின் என்பது கருத்து.

10. வஞ்சியீர் - வஞ்சி நகரத்தில் உள்ளவர்களே! வஞ்சியிடையீர் - வஞ்சிக்கொடி போலும் இடையை உடையவர்களே! உவமத் தொகை; பஞ்சடி - செம்பஞ்சுக் குழம்பு பூசப்பட்ட பாதம்; வென்றானை - வினையாலணையும் பெயர்; பாடுதும் - தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று; 'தும்' ஈறு காலம் உணர்த்திற்று.

11. எங்கோ என்றது செங்குட்டுவனை; முறைநா - நீதி தவறாத நாக்கு; (இவன் இயம்பியதைக் காட்சிக் காதை 95-99 வரிகளில் காண்க).

12. வானவன் எங்கோ - சேரனாகிய எம் அரசன்; என்றும் - என்று கூறினோம், தன்மைப் பன்மை இறந்த கால வினைமுற்று.

13. உழந்தாள் - வருந்தினவள்; வினையாலணையும் பெயர்.

14. மலையரையன் - இமய அரசன்; பெற்ற மடப்பாவை - கண்ணகி, இமயமலையிலிருந்து கல் கொணர்ந்து செய்ததனால் இங்ஙனம் கூறினார். பொருநை, ஆன் பொருநை; சேர நாட்டிற்கு உரிய ஆற்றின் பெயர்.

15. எல்லா - ஏடீ! விளிக்கும் சொல்; ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாய் வரும். கூந்தல் - கண்ணகி, அன்மொழித் தொகை; அண்மை விளியாகவும் உரைப்பர்.

16. அம்மானை வரி - அம்மனை யாடுவார் பாடும் பாடல்; வீங்கு நீர் - பெருகும் நீர், கடல், அரணம் - கோட்டை; உரவோன் - வலிமை படைத்தவன்; தூங்கெயிலெறிந்த தொடித் தோள் செம்பியன்; ஏல், ஓர் - அசைநிலை.

17. புறவு - புறா; புறா என்னும் குறியதன் பின்நின்ற ஆகார ஈறு குறுகி உகரம் பெற்றது. நிறை - எடைக்குச் சமமாக; புக்கு - துலாக்கோலில் புகுந்து அமர்ந்து; உடம்பரிந்த கொற்றவன்- சிபி; கறவை - பசு; முறை - நீதி; காவலன் - மனு.

18. கடவரை - மதம் ஒழுகும் மலை என்றது யானை. இமையா- இமையாதனவாய்; எதிர்மறை முற்றெச்சம். வாள் வேங்கை - ஒளியுடைய வேங்கை; ஒற்றினன் - பதித்தவன்; கரிகாற்சோழன்.

19. அம்மனை - அம்மானைக் காய்; மனை - இல்லம்; தார் மாலை; கொம்மை - திரட்சி.

20. கந்துக வரி - பந்தாடுவார் பாடும் பாடல்; பூங்கொடி - அண்மை விளி; பொலம் - பொன் என்னும் சொல் செய்யுளில் பொலம் என்று வந்தது. வில் இட - ஒளி வீச; தேவர் ஆர மார்பன்- இந்திரன் ஆரம் தரித்த பாண்டியன்.

21. உலாய் - உலாவி, வினையெச்சம்; வியல் நிலம் - அகன்ற பூமி; இழிந்தென - இறங்கினாற் போல.

22. துன்னி - நெருங்கி; அந்தரம் - ஆகாயம்.

23. ஊசல் வரி - ஊசலாடுவோர் பாடும் பாட்டு. வடம் - கயிறு; இரீஇ - இருக்கச் செய்து; குற்றெழுத்தளபெடை; ஐயை

உடங்கு ஒருவர் - ஐயையின் உடன் நின்றருள் ஒருவர்; கை நிமிர்த்து - கையை மேலெடுத்து. ஒற்றை மேல்ஊக்க - ஒற்றைத் தாளம் இட , குடங்கை - அகங்கை; குடங்கை நெடுங்கண் - உவமத் தொகை. கடம்பு - கடற்கடம்பரின் காவல் மரம். முதல் - அடி மரம்; தடிந்தவன் - இமயவரம்பன் , செங்குட்டுவனும் ஆம்.

*24*. ஐவர் - பாண்டவர் ; ஈரைம்பதின்மர் - நூற்றுவர், துரியோதனுதியர்; சேரன் - பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்; கார்செய் குழல் - மேகம் போலும் கூந்தல்; செய் - உவமப் பொருளில் வந்தது.

*25*. வன்பெருங்கல் - இமயம் ; - வள்ளைப் பாட்டு - தானியம் குற்றுவார் பாடும் பாடல்.

*26*. காஞ்சி - ஒரு மரத்தின் பெயர் ; நீழல் - நிழல் என்னும் சொல் நீண்டது ; அவைப்பார் - குற்றுவார் ; வம்பு - மணம் ; பாழி - வலிமை ; தடவரைத் தோள் - பெரிய மலைபோன்ற தோள்; உவமத் தொகை, 'தட' - உரிச்சொல் ; ஆரிரக்கும் - ஆத்திமாலையை இரந்து வேண்டும்.

*27*. குறுவர் - குற்றுவர் ; பஞ்சவன் - பாண்டியன் ; உணக்கும் பாடல் - வருத்தும் திறத்தைக் கூறும் பாடல்.

*28*. சந்துரல் - சந்தனமரத்தாற் செய்த உரல் ; வான்கோடு - பெருமை உடைய யானைக் கொம்பு; படர்ந்த - அகன்ற; போர்த்த - மூடிக்கொண்ட, இலக்கணை.

*29*. பொறையன் - சேரன் ; எங்கோமடந்தை என்றது கண்ணகியை ; ஏத்தினள் - வாழ்த்தினள்.

## வரந்தரு காதை

*1*. திசை - திசையில் உள்ள அரசர்; வணக்கிய - வணங்கச் செய்த ; வணங்கு என்னும் பகுதி மெல்லொற்று வல்லொற்றாய்ப் பிறவினை உணர்த்திற்று. வானவர் - சேரர்.

*7*. சுரக்க - வியங்கோள் ; சுரக்கென்று - விகாரத்தால் தொக்கது.

*10*. மை ஈர் ஓதி - கரிய குளிர்ச்சியுடைய கூந்தல்.

*11*. ஐவகை - முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள்.

*13*. அவ்வியம் - வஞ்சனை.

*14*. குலத்தலைமாக்கள் - உயர்குலத்தோர்.

*15*. செய்கு - செய்வேன் ; தன்மை ஒருமை எதிர்கால வினை முற்று. 'கு' ஈறு காலங் காட்டிற்று. 'ஓ' - அசை.

18. உருவிலாளன் - மன்மதன்.

20. கோதைத் தாமம் - மலர் மாலை, மணி மாலைகள்.

21. போதித்தானம் - புத்தப்பள்ளி; அறம்படுத்தனள் - அற நெறியிற் செலுத்தினள்.

25. செம்மொழி மாதவர் - அறவண அடிகள்.

28. பருவம் - துறத்தற்குரிய பருவம்.

31. குரல் - பூங்கொத்து.

31-38. தெய்வ ஆவேசம் உற்றோர்-மெய்ப்பாடுகள்.

40. காணிய - காண; செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

42. அரட்டன் - ஒருவணிகனுடைய பெயர்; ஆயிழை - மனைவி; அன்மொழித்தொகை.

44. ஆடகமாடம் - பொன் மாளிகை; (திருவனந்தபுரம்).

45. சேடக்குடும்பி - தொண்டு செய்யும் குடும்பத்தைச் சார்ந்தவன்.

46. மங்கல மடந்தை கோட்டம் - மங்கலாதேவி கோயில்.

48. பிணிமுக நெடுங்கல் - யானை போலும் வடிவம் உடைய பாறை.

50. கடிப்பகை நுண்கல் - வெண் சிறுகடுகு போலும் நுண்ணிய கற்களும்; கவிர்இதழ்க் குறுங்கல் - முருக்க மலரின் இதழ் போன்று செந்நிறம் உடைய குறிய கற்களும்.

51. இடிக் கலப்பன்ன - மாவு கலந்தாற் போன்ற.

55. கோட்டி - வாயில்.

56. குறிக்கோள் தகையது - குறிக்கொண்டு காக்கும் தன்மையுடையது.

58. கதிர் - சந்திர சூரியர்கள்.

59. முதிராது - அழியாது.

60. தெளித்தனை - தெளித்து; முற்றெச்சம். இனி - இப்பொழுது.

61. ஒளித்த பிறப்பு - அறிவிற்குவராத பழம் பிறப்பு.

64. விம்மிதம் - வியப்பு.

68. உருத்து - உருக் கொண்டு வந்து.

70. ஆரஞர் - அரிய துன்பம்.

71 பாடுகிடத்தல் - நோன்பிருத்தல்.

74 செல்லல்-துன்பம்.

77 தீவலம்செய்து - மணம் புரிந்து.

84. குறிக்கோள் - தந்ததன் கருத்து.

90. உற்றதை - உற்றது ; 'ஐ' சாரியை.

91-96. கண்ணகிக்குத் தாயாக இருந்தவள் அரற்றியது.

97-100. கோவலனுக்குத் தாயாக இருந்தவள் அரற்றியது.

101-104. மாதரியாய் இருந்தவள் அரற்றியது.

106. பொன்தாழ் அகலம் - திருமகள் தங்கியிருக்கும் மார்பு ; போர் வெய்யோன் - போரை விரும்புவோன், செங்குட்டுவன்.

107 குதலை - மழலைச் சொல்.

109. போந்தை - பனை.

113. மறையோன் - மாடலன்

115. பெற்றவன் - இதில் குறிக்கப்பட்டவன் கோவலன்.

116. காதலி - மனைவி, கண்ணகி; காதலர் - விருப்பம் உடையவர்.

118. தாவா - கெடாத ; தவா என்பது நீண்டது.

129. பொற்படி - பொன்னுலகம், சுவர்க்கம்.

130. பற்றுவழி - பற்றுவைத்த இடம்.

136. படிவம் - உருவம்.

142. கதழ் எரி - விரைந்து பற்றும் நெருப்பு.

144. படிப்புறம் - பூசைக்கு வேண்டிய முதற்பொருள்.

146. விரை - நறுமணக் கலவை.

156. வந்தீக - வருக ; வினைத்திரிச்சொல்.

167 நுந்தை - உன் தந்தை ; முன்னிலைக்குரிய பெயர் ; தாள் நிழல் - பக்கத்தில்; இலக்கணை.

168. திருப்பொறி - சிறந்த ஊழ். அல்லது வடிவிலக்கணம்

172. பகல் - சூரியன் ; பகல் செல்வாயில் - குணவாயில்; படிவோர் - விரத ஒழுக்கம் உடைய துறவியர்.

173. அகலிடப்பாரம் - உலகம் காக்கும் கருமம.

175. அந்தமில் இன்பம் - பேரின்பம்.

179. பரிவு - வருந்துதல் ; இடுக்கண் - துன்பமுறுதல்.

181. போற்றுமின் - நிகழாமல் காத்துக்கொள்ளுங்கள்.

189. அறமனை - அறவோர் இருக்கை.

191. வெள்ளைக் கோட்டி - புல்லறிவினர் கூட்டம்.

195. மல்லல் - வளப்பம் ; ஞாலத்து - பூமியில்.

# 5. கந்த புராணம்

## வள்ளியம்மை திருமணப் படலம்

அன்னையென வீன்ற வரிணமருண் டோடியபின்
றன்னிணையி லாத தலைவி தனித்தனளாய்க்
கின்னரநல் யாழொலியோ கேடில்சீர்ப் பாரதித
னின்னிசையோ வென்றயிர்க்க வேங்கியழு திட்டனளே 1

அந்த வளவைதனி லாறிரண்டு மொய்ம்புடைய
வெந்தையரு ளுய்ப்ப வெயினர்குலக் கொற்றவனும்
பைந்தொடிநல் லாளும் பரிசனங்கள் பாங்கெய்தச்
செந்தினையின் பைங்கூழ் செறிபுனத்துப் புக்கனரே. 2

வந்தான் முதலெடுத்த வள்ளிக்குழி யில்வைகும்
நந்தா விளக்கனைய நங்கை தனைநோக்கி
யிந்தா விஃதோ ரிளங்குழவி யென்றெடுத்துச்
சிந்தா குலந்தீரத் தேவிகையி லீந்தனனே. 3

கொற்றக் கொடிச்சி குழவியைத்தன் கைவாங்கி
மற்றப் பொழுதில் வயாவும் வருத்தமுமாய்ப்
பெற்றுக்கொள் வாள்போலப் பேணிப் பெரிதுமகிழ்
வுற்றுக் கனதனத்தி லூறுமமிர் தூட்டினளால். 4

நாத்தளர்ந்து சோர்ந்து நடுக்கமுற்றுப் பற்கழன்று
மூத்துநரை முதிர்ந்த மூதாளர் வந்தீண்டிப்
பாத்தி படுவள்ளிப் படுகுழியில் வந்திடலால்
வாய்த்த விவணுமம் வள்ளியெனக் கூறினரே. 5

முல்லைப் புறவ முதல்வன் றிருமடந்தை
கொல்லைக் குறிஞ்சிக் குறவன் மகளாகிச்
சில்லைப்புன் கூரைச் சிறுகுடிலிற் சேர்ந்தனளாற்
றொல்லைத் தனித்தந்தை தோன்றியமர் வுற்றதுபோல். 6

ஆன பருவங்கண் டம்மனையு மம்மனையிற்
கோனு மொருதங் குலத்தின் முறைநோக்கி
மானின் வயிற்றுதித்த வள்ளிதனைப் பைம்புனத்தில்
ஏனல் விளையு ளினிதளிக்க வைத்தனரே. 7

காட்டி லெளிதுற்ற கடவுண்மணி யைக்கொணர்ந்து
கூட்டி விருளோட்டக் குருகுய்த்த வாறன்றோ
தீட்டுசுடர் வேற்குமரன் றேவியாந் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனங்காப்ப வைத்ததுவே. 8

வேறு

சூரல் பம்பிய தணிகைமால் வரைதனிற் சுடர்வேல்
வீரன் வீற்றிருந் திடுதலும் வேலையங் கதனில்
வாரி யும்வடித் துந்தியும் வரிசையா னுறழ்ந்துஞ்
சீரி யாழ்வல்ல நாரதன் புவியினிற் சேர்ந்தான். 9

அன்னை யாகியிங் கிருப்பவர் பேரழ கனைத்து
முன்னி யான்புனைந் துரைக்கினு முலவுமோ வுலவா
வென்னை யாளுடை யறுமுகன் றுணைவியா யிருப்ப
முன்னர் மாதவம் புரிந்தவ ரிவரென மொழிந்தான். 10

வேறு

ஐய னேயவ ளாக நல்லெழில்
செய்ய பங்கயத் திருவிற் கும்மிலை
பொய்ய தன்றிது போந்து காண்டிநீ
கைய னேனிவண் கண்டு வந்தனன். 11

வேறு

மண்டலம் புகழுந் தொல்சீர் வள்ளியஞ் சிலம்பின் [மேல்போய்ப்
பிண்டியந் தினையின் பைங்கூழ்ப் பெரும்புனத் திறைவி [தன்னைக்
கண்டனன் குமர னம்மா கருதிய வெல்லை தன்னிற்
பண்டொரு புடையில் வைத்த பழம்பொருள் கிடைத்த [வாபோல். 12

உலைப்படு மெழுக தென்ன வுருகியே யொருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல வருந்தியே யிரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற் றோன்றி
யலைப்படு தன்மைத் தன்றோ வறுமுக னுட லெல்லாம். 13

செய்யவள் குமரி முன்னந் திருநெடுங் குமர னின்று
மையலின் மிகுதி காட்டி மற்றிவை பகரு மெல்லை
வெய்யுட னுளியம் வேழ மிரிதர விரலை யூத
வொய்யென வெயினர் சூழ வொருதனித் தாதை [வந்தான். 14

ஆங்கது காலே தன்னி னடிமுதன் மறைக ளாக
வோங்கிய நடுவ ணெல்லா முயர்சிவ நூல தாகப்
பாங்கமர் கவடு முற்றும் பல்கலே யாகத் தானோர்
வேங்கையி னுருவ மாகி வேற்படை வீர னின்றான். 15

தந்தையாங் குரைத்தல் கேளாத் தையலும் வெருவி யீது
வந்தவா றுணர்கி லேன்யான் மாயம்போற் றோன்றிற் றையா
முந்தைநா ளில்லா தொன்று புதுவதாய் முளைத்த தென்னுச்
சிந்தைமே னடுக்க மெய்தி யிருந்தனன் செயலி தென்றாள். 16

## வேறு

என்றிவை சொற்றபி னேந்திழை யஞ்சே
னன்றிவண் வைகுதி நாண்மலர் வேங்கை
யின்றுணை யாயிவ ணெய்திய தென்னுக்
குன்றுவன் வேடர் குழாத்தொடு போனான். 17

போனது கண்டு புனத்திடை வேங்கை
யானதொர் தன்மையை யைய னகன்று
கானவர் தம்மகள் காண்வகை தொல்லே
மானுட நல்வடி வங்கொடு நின்றான். 18

## வேறு

மாவியுல் கருங்கணுய் மற்று நின்றனேப்
பாவிய னீங்கியே படர வல்லனே
வாவியை யகன்றுமெய் யறிவு கொண்டெழீஇப்
போவது கொல்லிது புகல வேண்டுமே. 19

இலேமுதி ரேனல்காத் திருக்கும் பேதையா
னுலகரு ளிறைவர்நீ ருளம யங்கியென்
கலவியை விரும்புதல் கடன தன்றரோ
புலியது பசியுறிற் புல்லுந் துய்க்குமோ. 20

## வேறு

என்றிவை பலப்பலவு மேந்திழை யியம்பா
நின்றபொழு தத்திலவ ணெஞ்சம்வெருக் கொள்ள
வென்றிகெழு தொண்டகம் வியன்றுடி யியம்பக்
குன்றிறைவன் வேட்டுவர் குழாத்தினெடும் வந்தான். 21

வந்தபடி கண்டுமட மானடு நடுங்கிச்
சிந்தைவெரு விக்கடவுள் செய்யமுக நோக்கி
வெந்திறல்கொள் வேடுவர்கள் வெய்யரிவ ணில்லா
துய்ந்திட நினேந்துகடி தோடுமினி யென்றாள். 22

ஓடுமினி யென்றவ ளுரைத்தமொழி கேளா
நீடுமகிழ் வெய்தியவ ணின்றகும ரேசன்
நாடுபுகழ் சைவநெறி நற்றவ விருத்த
வேடமது கொண்டுவரும் வேடரெதிர் சென்ருன். 23

பூதியினை யன்பொடு புரிந்தகுர வன்றன்
பாதமலர் கைகொடு பணிந்துகுற மன்னன்
மேதகுமிவ் வெற்பினில் விருத்தரென வந்தீ
ரோதிடுதிர் வேண்டியதை யொல்லைதனி லென்ருன். 24

ஆண்டொழிலின் மேதகைய வண்ணலிது கேண்மோ
நீண்டதனி மூப்பகல நெஞ்சமரு ணீங்க
வீண்டுநும் வரைக்குமரி யெய்தியினி தாட
வேண்டிவரு கின்றனன் மெலிந்துகடி தென்ருன். 25

## வேறு

நற்றவன் மொழியைக் கேளா நன்றுநீர் நவின்ற தீர்த்த
நிற்றலு மாடியெங்க ணேரிழை தமிய ளாகி
யுற்றன ளவளுக் கெந்தை யொருதனித் துணைய தாகி
மற்றிவ ணிருத்தி ரென்ன வழகிதா மன்ன வென்ருன். 26

இனையதோர் பொழுதிற் றந்தை யேந்திழை தன்பா லேகித்
தினையொடு கிழங்கு மாவுந் தீங்கனி பிறவு நல்கி
யனையவ டுணைய தாக வருந்தவன் றன்னை வைத்து
வனைகழ லெயின ரோடும் வல்லையின் மீண்டு போனுன். 27

போனது முதியோன் கண்டு புனையிழை தன்னை நோக்கி
நானினிச் செய்வ தென்கொ னலிவது பசிநோ யென்னத்
தேனொடு கனியு மாவுஞ் செங்கையிற் கொடுப்பக் கொண்டு
வேனிலு முடுகிற் றுண்ணீர் விடாய்பெரி துடையே னென்ருன்.

முருகன துரையை யந்த மொய்குழல் வினவி யெந்தாய்
வருகென வழைத்து முன்போய் வரையெலாங் கடந்து சென்று
விரைகமழ் சுனைநீர் காட்ட வேனிலால் வெதும்பி னுன்போற்
பருகினன் பருகிப் பின்ன ரிஃதொன்று பகர்த லுற்ருன். 29

ஆகத்தை வருத்துகின்ற வரும்பசி யவித்தாய் தெண்ணீர்த்
தாகத்தை யவித்தா யின்னுந் தவிர்ந்தில தளர்ச்சி மன்னே
மேகத்தை யனைய கூந்தன் மெல்லியல் வினையேன் கொண்ட
மோகத்தைத் தணித்தி யாயின் முடிந்ததென் குறைய
[தென்ருன். 30

## வேறு

மேலா கியதவத்தோர் வேடந் தனைப்பூண்டிங்
கேலா தனவே யியற்றினீர் யார்விழிக்கும்
பாலா கித்தோன்றிப் பருகினு ராவிகொள்ளு
மாலால நீர்மைத்தோ வைய ரியற்கையதே. 31

பொன்னே யனையாண்முன் போகுந் திறனுேக்கி
யென்னே யினிச்செய்வ தென்றிரங்கி யெம்பெருமான்
றன்னே ரிலாதமருந் தந்திமுகத் தெந்தைதனை
முன்னே வருவாய் முதல்வா வெனநினைந்தான். 32

அந்தப் பொழுதி லறுமா முகற்கிரங்கி
முந்திப் படர்கின்ற மொய்குழலாண் முன்னுகத்
தந்திக் கடவுட் டனிவா ரணப்பொருப்பு
வந்துற்ற தம்மா மறிகடலே போன்முழங்கி. 33

அவ்வே லையில்வள்ளி யச்சமொடு மீண்டுதவப்
பொய்வேடங் கொண்டுநின்ற புங்கவன்றன் பாலணுகி
யிவ்வேழங் காத்தருள்க வெந்தைநீர் சொற்றபடி
செய்வே னெனவொருபாற் சேர்ந்துதழீஇக் கொண்
[டனளே. 34

கந்த முருகன் கடவுட் களிறுதனை
வந்தனைகள் செய்து வழுத்திநீ வந்திடலாற்
புந்தி மயறீர்ந்தேன் புனையிழையுஞ் சேர்ந்தனளா
லெந்தை பெருமா னெழுந்தருள்க மீண்டென்றான். 35

என்னு மளவி லினிதென் றியானைமுக
முன்னிளவ லேக முகமா றுடையபிரான்
கன்னி தனையோர் கடிகா வினிற்கலந்து
துன்னு கருணைசெய்து தொல்லுருவங் காட்டினனே. 36

முந்நான்கு தோளு முகங்களோர் மூவிரண்டுங்
கொன்னார்வை வேலுங் குலிசமுமே னைப்படையும்
பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்
மின்னாள் கண்காண வெளிநின் றனன்விறலோன். 37

மின்னே யனையசுடர் வேலவரே யிவ்வுருவ
முன்னேநீர் காட்டி முயங்காம லித்துணையுங்
கொன்னே கழித்தீர் கொடியேன்செய் குற்றமெலா
மின்னே தணித்தே யெனையாண்டு கொள்ளுமென்றாள். 38

உம்மை யதனி லுலகமுண்டோன் றன்மகணீ
நம்மை யணையும்வகை நற்றவஞ்செய் தாயதனு
லிம்மை தனிலுன்னை யெய்தினே மென்றெங்க
ளம்மை தனைத்தழுவி யைய னருள்புரிந்தான் 39

## வேறு

அன்னதோர் வேலை தன்னி லறுமுக முடைய வள்ள
றன்னுழை யிருந்த நங்கை தனையரு ளோடு நோக்கக்
கொன்னவில் குறவர் மாதர் குயிற்றிய கோல நீங்கி
முன்னுறு தெய்வக் கோல முழுதொருங் குற்ற தன்றே 40

கவலைதீர் தந்தை தானுங் கணிப்பிலாச் சுற்றத் தாருஞ்
செவிலியு மன்னை தானு மிகுளையுந் தெரிவை மாருந்
தவலருங் கற்பின் மிக்க தம்மகள் கோல நோக்கி
யிவளெம திடத்தில் வந்த தெம்பெருந் தவமே யென்றார் 41

அந்தநல் வேலை தன்னி லன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னிற் கன்னிகை கரத்தை நல்கி
நந்தவ மாகி வந்த நங்கையை நயப்பா லின்று
தந்தனன் கொள்க வென்று தண்புனற் றாரை யுய்த்தான் 42

அறுமுக முடைய வள்ள லன்னது நோக்கிச் சீறா
ரிறையது முணரா வண்ண மிமையமே லணங்கி னேடுங்
கறையமர் கண்டன் றன்னைக் கைதொழு தேனை யோர்க்கு
முறைமுறை யுவகை யோடு முழுதருள் புரிந்தா னன்றே. 43

## குறிப்புரை

கந்தனுகிய முருகப் பெருமானின் பெருமைகளைப் பேசுவது கந்த புராணம். இது பிற்காலக் காவியங்களுள் சிறப்புற்று விளங்குவது. முருகனடியார்கள் இதனை நாள்தோறும் பாராயணம் செய்து வருவதுண்டு. இஃது உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்ச காண்டம், உபதேச காண்டம் என ஏழு காண்டங்களைக் கொண்டுள்ளது.

இதனை ஆக்கியவர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாசாரியர் ஆவர். இவர் குமர கோட்டத்துப் பூசராகப் பணியாற்றியவர்; தமிழ் வடமொழிப் புலமை பெற்றவர். இவர் 11ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 12ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்பர்.

1. அரிணம் - மான்; தலைவி - வள்ளி; கின்னரம் - இசைபாடும் ஒருவகைப் பறவை; பாரதி - கலைமகள்; அயிர்க்க - ஐயம் உறும்படி; அழுதிட்டனள் - அழுதாள்; இடு - துணைவினை

2. அளவைதனில் - நேரத்தில் ; 'தன்' - அசை ; மொய்ம்பு - தோள் : எந்தை - எமக்குத் தந்தை ; முருகப்பெருமான். உய்ப்ப - செலுத்த : எயினர் - வேடர் ; கொற்றவன் - அரசன், நம்பிராசன் ; பைந்தொடி பசுமை + தொடி, பண்புத் தொகை ; நல்லாள் - பெண், நம்பிராசனுக்கு மனைவி ; பரிசனம் - ஏவலர், பைங்கூழ் - பசுமையான பயிர்.

3. முதல் - கிழங்கு; வைகும் - தங்கியிருக்கும்; நந்தா விளக்கு - கெடாத விளக்கு : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சிந்தாகுலம் - மன வருத்தம் ; சிந்தை + ஆகுலம் (பெண்மகவு இல்லையே என்னும் வருத்தம்.)

4. கொடிச்சி - எயினர் தலைவி ; வயா - மிக்க வேட்கை ; வருத்தம் - மகப்பேற்று நோவு.

5. ஈண்டி - கூடி ; படுகுழி - தோன்றுதற்கிடமான குழி ; வந்திடலால் - வருதலால்; இடு - துணைவினை.

6. முல்லைப் புறவம் - முல்லைக்கொடி நிறைந்த காட்டு நிலம் ; முதல்வன் – திருமால் ; திருமடந்தை - மகளாகிய வள்ளி ; (இவள் திருமாலின் மகளாகச் சுந்தரவல்லி என்னும் பெயருடையளாய் முருகனை அடையத் தவம் செய்தவள்.) சில்லை - வட்ட மாகிய; தொல்லை - பழைய; தனித்தந்தை - ஒப்பற்ற திருமால்; தோன்றி அமர்வுற்றது போல் - கண்ணனாக ஆயர்பாடியில் தோன்றித் தங்கி வளர்ந்தது போல்.

7 அம்மனை - தாய்; மனையிற்கோன் - வீட்டுத்தலைவன்;ஏனல் - தினை; விளையுள் - விளைவு; 'உள்' – தொழிற் பெயர் விகுதி. அளிக்க - காக்க.

8. கடவுள்மணி - தெய்வத்தன்மையுடைய மாணிக்கம் ; குருகு - பறவை; தேவியாம் - தேவியாதற்குரிய ; தெள்ளமுது - உருவகம்.

9. சூரல் - பிரப்பங்கொடி ; பம்பிய - நிறைந்த ; வேலையங்கதனில் - வேலையில்; அங்கு, அது, அன் - மூன்றும் சாரியை. வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல் - இவை யாழ்வாசித்தற்கிரியைகள் (சிலம்பு-கானல்வரி-12.) வார்தல் - சுட்டு விரலால் செய்யும் தொழில் ; வடித்தல் - சுட்டு விரலாலும் பெருவிரலாலும் நரம்பை ஆராய்தல் ; உந்தல் - நரம்புகளை வலிவு, மெலிவு, நிரல், நிரலிழிவுகளை ஆராய்தல் ; உறழ்தல் - ஒன்று இடையிட்டும் இரண்டு இடையிட்டும் ஆராய்தல்.

10. உன்னி - நினைத்து ; உலவுமோ - முடிவு பெறுமோ ; முடிவு பெறாது என்பது கருத்து. முன்னர் - முற்பிறப்பில்.

**11.** செய்ய பங்கயம் - செந்தாமரை ; குறிப்புப் பெயரெச்சத் தொடர். காண்டி-காண்க ; வியங்கோள். கையனேன் - சிறியேன்.

**12.** பிண்டியந்தினை - மாவு செய்தற்குரிய தினை ; அம்மா - வியப்பிடைச் சொல் ; புடை - இடம்.

**13.** மெழுகு அது . என்ன - மெழுகுபோல ; 'அது'-பகுதிப் பொருள் விகுதி. மதியப் புத்தேள் - சந்திரனாகிய தெய்வம். பாத்திரத்தில் உள்ள நீரில் தோன்றும் சந்திரனுடைய நிழல் நீரின் அலைவுக்கேற்ப அலைந்தாலும் அதனால் சந்திரனுக்குச் சிறிதும் அலைவு இல்லை. அதுபோல அடியவர்களை ஆட்கொள்ள வேண்டி இறைவன் கருணையால் திருமேனி தாங்கி வருந்துவான் போலவும் மகிழ்வான் போலவும் பலவேறு விகார மடைந்தாலும் இறைவனுக்கு இவற்றால் சிறிதும் விகாரம் இல்லை என்பதை இப்பாடல் விளக்குகிறது.

**14.** எய் - முள்ளம் பன்றி ; உளியம் - கரடி ; இரிதர - நீங்க ; இரலை - கொம்பு ; ஒய்யென - விரைவாக, குறிப்புச் சொல்.

**15.** ஆங்கு - அவ்விடத்து ; அதுகாலை - அச்சமயத்தில் ; அடிமுதல் - அடியும் முதலும் , உம்மைத் தொகை. முதல் - வேர் ; நடுவண் - நடுவிடம் ; சிவநூல் - சிவாகமங்கள் ; கவடு - கிளை.

**16.** கேளா - கேட்டு ; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் ; வெருவி - அஞ்சி.

**17.** சொற்றபின் - சொன்ன பிறகு ; ஏந்திழை - விளி ; வைகுதி - தங்கியிருப்பாயாக ; இன்துணை - இனிய துணை, (துணைவனாய் என்பதும் குறிப்பு) ; என்னா - என்று கூறி.

**19.** மா இயல் - மாவடுவின் தன்மையுடைய ; வல்லனோ - ஓகாரம் எதிர்மறை ; வலியில்லேன் என்பது கருத்து. ஆவி - உயிர்; மெய் - உடம்பு ; எழீஇ - எழுந்து ; குற்றெழுத்தளபெடை. கொல் - ஐயம் ; போகாது என்பது கருத்து. புகலவேண்டும் - சொல்லுதல் வேண்டும். வேண்டும் என்பது ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய்த் தேற்றப்பொருள் தந்துவிடும். ஈண்டு முன்னிலையில் வந்தது.

**20.** உலகு அருள் - உலகம் காக்கின்ற ; அரோ - அசை ; துய்க்குமோ - உண்ணுமோ ; ஓகாரம் எதிர்மறை; உண்ணாது என்பது கருத்து. வேற்றுப் பொருள் வைப்பணி ; அரசகுலத்திற் பிறந்த நீ வேடர்குலத்திற் பிறந்த என்னை விரும்புதல் தக்கதன்று என உணர்த்தத் தொடங்கி இதனை வற்புறுத்தற் பொருட்டாகப் புலி பசித்தால் புல்லைத் தின்னாது என உலகறிந்த கருத்தைக் கூறியிருப்பது அறிக.

22. கடிது - விரைந்து ; கடி என்னும் உரிச்சொல்லடியாக வந்த வினையெச்சம் ; தன்னை முடிக்கும் வினைக்கண் கிடந்த பண்பை உணர்ந்தி வந்தது. ஓடும் - ஓடுக. இனி - இப்பொழுது.

23. மகிழ்வு - நமக்குத் தீங்கு வந்துவிடுமே, என்று நம்மிடம் கொண்ட அன்பினாலேதான் நம்மை இங்கிருந்து ஓடச் சொல்கிறாள் என்று அறிந்ததனால் வந்த மகிழ்ச்சி. விருத்தன் - முதியவன்.

24. புரிந்த - அருளிய ; கைகொடு பணிந்து - கையால் வணங்கி ; 'கொடு' மூன்றாம் வேற்றுமைக் கருவிப் பொருளில் வந்த சொல்லுருபு. விருத்தர் என - (உண்மையில் நீர் விருத்தரல்லீர் என்பது குறிப்பு) ஒல்லைதனில் - விரைவில்.

25. கேண்மோ - கேள் ; மோ - முன்னிலை அசை ; மருள் - மயக்கம் ; ஈண்டு - இவ்விடத்து ; குமரி - தீர்த்தம்; (மகள் என்பது குறிப்பு). வேண்டி - விரும்பி.

26. கேளா - கேட்டு ; நிற்றலும் - நாள்தோறும் ; நித்தலும் என்பது எதுகை நோக்கி நிற்றலும் என வந்தது. நேர் இழை - பொருந்திய அணிகலன்கள் அணிந்த வள்ளியம்மை ; அன்மொழித் தொகை. தமியள் - தனித்திருப்பவள் ; ஒரு தனித் துணையதாகி என்பது குறிப்பு. மற்று - அசை ; ஆம் - அவ்வாறே ஆம். மன்ன - அண்மைவிளி.

28. நலிவது - வருத்தும். வேனில் - வெப்பம் ; முடுகுற்றது - மிகுதியாயிற்று ; விடாய் - நீர்வேட்கை.

29. மொய் குழல் - செறிந்த கூந்தல் ; அன்மொழித் தொகை. எந்தாய் - எந்தை என்னும் ஐகார ஈறு விளித்தற்கண் ஆய் எனத் திரிந்தது.

30. மன்னும் ஓவும் அசை ; மெல்லியல் - விளி ; தணித்தி - தணிப்பாயாக.

31. ஏலாதன - பொருந்தாதன ; ஆலாலம் - நஞ்சு ; நீர் மைத்து - தன்மையினை உடையது. குறிப்பு வினைமுற்று.

32. தந்தி - யானை ; எந்தை - விநாயகப் பெருமான்.

33. படர்கின்ற - செல்கின்ற ; வாரணப் பொருப்பு - யானையாகிய மலை ; உருவகம். அம்மா - வியப்பிடைச்சொல் ; மறிகடல் - மறிந்துவிழும் அலைகளை உடைய கடல்.

34. புங்கவன் - தேவன் ; சொற்றபடி - சொல்லியபடி ; தழீஇக் கொண்டாள் - தழுவிக்கொண்டாள்; குற்றெழுத்தளபெடை.

35. கந்த முருகன் - கந்தனாகிய முருகன் ; வந்தனை - வணக்கம் ; புந்தி - மனம்.

36. என்றியானை - புணர்ச்சிக்கண் வந்த குற்றியலிகரம். முன்னிளவல் - தமையனார்; சிவபெருமானுக்கு மூத்தபிள்ளையார் கடிகா - மணம் மிக்க சோலை.

37. கோன் - அச்சம்; இடைச்சொல். வை - கூர்மை; உரிச் சொல். குலிசம் - வச்சிராயுதம். பொன் - பொலிவு; மணிமயில் - நீலமணிபோலும் நிறம் உடைய மயில்; உவமத்தொகை.

38. கொன்னே - பயனின்றி; இடைச்சொல்.

39. உம்மை - முற்பிறப்பில்; உலக முண்டோன் - திருமால்; இம்மைதனில் - இப்பிறப்பில்.

40. தன் உழை இருந்த-தன்பக்கத்தில் இருந்த; கொல் நவில் - கொலைத் தொழிலிற் பழகிய. குயிற்றிய - செய்த.

41. கணிப்பிலா - கணக்கில்லாத; இருளை - தோழி; தெரிவைமார் - மற்றும் உள்ள மகளிர்; 'மார்' - பலர்பால் விகுதி. தவலரும் - கெடுதல் இல்லாத.

42. பாணி - கை; நயப்பால் - விருப்பத்தோடு.

43. அன்னது - அத்தகையதனை; (சிவபெருமானும் உமை யம்மையும் தேவர்புடைசூழ வானில் தோன்றிக் கருணை புரிந்ததனை). சீறும் இறை - நம்பிராசன்; இமயமேல் அணங்கு - உமையம்மை; கறையமர்கண்டன் - நஞ்சுக்கறை பொருந்திய கழுத்தை உடைய சிவபெருமான்.

# 6. திருவேங்கடத்தந்தாதி

### பாத வகுப்பு

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையாற்
றருவேங் கடத்துத் தரைமே னடந்தன தாழ்பிறப்பி
னுருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன வுற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றோடின மால்கழலே. 1

### பதி

மாலை மதிக்குஞ்சி யீசனும் போதனும் வாசவனும்
நூலை மதிக்கு முனிவருந் தேவரு நோக்கியந்தி
காலை மதிக்குள்வைத் தேத்துந் திருமலை கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமா னுறைதிரு வேங்கடமே. 2

### வேங்கட மால்

வேங்கட மாலை யவியா மதிவிளக் கேற்றியங்க
மாங்கட மாலைய மாக்கிவைத் தோமவன் சேவடிக்கே
தீங்கட மாலைக் கவிபுனைந் தோமிதிற் சீரியதே
யாங்கட மாலையி ராவத மேறி யிருக்குமதே. 3

இருக்கா ரணஞ்சொல்லு மெய்பொரு ளின்பமு மெப் [பொருட்குங்
கருக்கா ரணமுநற் றாயுநற் றந்தையுங் கஞ்சச்செல்வப்
பெருக்கா ரணங்கின் றலைவனு மாதிப் பெருந்தெய்வமு
மருக்கா ரணவும் பொழில்வட வேங்கட மாயவனே. 4

### வேங்கடத்தானிடம் அன்பு செய்தல்

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும் [விண்ணுந்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்றிரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே. 5

தூர விரும்புண் டரிக்குமிக் காயத்தைச் சூழ்பிணிகா
ணேர விரும்புண் டரர்க்கருள் வானெடு வேங்கடத்தா
வீர விரும்புண்ட ரீகப்பொற் பாதங்க ளென்னுயிரைத்
தீர விரும்புண்ட நீராக்கு மாறுள்ளஞ் சேர்ந்தனவே. 6

### வடமலையானின் அருள்வேண்டல்

சேர்ந்து கவிக்கும் முடிகவித் தாய்சிறி யேனிதயஞ்
சார்ந்து கவிக்கும் வரமளித் தாய்கொண்ட றண்டலையே
லூர்ந்து கவிக்கும் வடமலை யாய்பஞ் சொழுக்கியபால்
வார்ந்து கவிக்கும் பொழுதிலஞ் சேலென்று வந்தருளே. 7

வந்திக்க வந்தனை கொள்ளென்று கந்தனு மாதவருஞ்
சிந்திக்க வந்தனை வேங்கட நாதபல் சீவன்றின்னு
முந்திக்க வந்தனைச் செற்று யுனக்குரித் தாயபின்னும்
புந்திக்க வந்தனைச் செய்தைவர் வேட்கை பொரு
[மென்னையே. 8

### தலைவனைப் பிரிந்து வருந்தி ஆற்றாத தலைவிக்காகத் தோழி இரங்கல்

பொருதரங் கத்தும் வடத்து மனந்த புரத்துமன்பர்
கருதரங் கத்துந் துயில்வேங் கடவகண் பார்த்தருள்வாய்
நிருதரங் கத்து நிறம்போல் வருமந்தி நேரத்தன்றி
லொருதரங் கத்தும் பொழுதும் பொறுளென் னொரு
[வல்லியே. 9

### தலைவனைப் பிரிந்த தலைவி கடலொடு புலம்பல்

ஒருமா தவனி யொருமாது செல்வி யுடனுறைய
வருமா தவனின் மகுடம்வில் வீச வடமலைமேற்
கருமா தவன்கண்ண னின்பாற் றிருநெடுங் கண் வளர்கைக்
கருமா தவமென்ன செய்தாய் பணியெனக் கம்புதியே. 10

### நெஞ்சறிவுறுத்தல்

அம்பரந் தாமரை பூத்தலர்ந் தன்ன யாடகமாம்
அம்பரந் தாமரை யஞ்சன வெற்பரை யாடகமாம்
அம்பரந் தாமரை சூழ்ந்தாரை வாழ்த்தில ரைம்புலனும்
அம்பரந் தாமரை போற்றிரி வாரை யகனெஞ்சமே. 11

### தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

நெஞ்சுகந் தத்தை யுமக்குரைத் தேனிற்றை நீடிரவொன்
றஞ்சுகந் தத்தை விளக்குமென் னுசைய தாமிதழ்சொல்
கிஞ்சுகந் தத்தை யனையிரிங் கென்னைக் கெடாதுவிடுப்
விஞ்சுகந் தத்தை விளக்குந் துழாயண்ணல் வேங்கடத்தே. 12

## வேங்கடத்தாரை ஏத்துதிர்

வேங்கடத் தாரையு மீடேற்ற நின்றருள் வித்தகரைத்
திங்கடத் தாரைப் புனைந்தேத்தி லீர்சிறி யீர்பிறவி
தாங்கடத் தாரைக் கடத்துமென் றேத்துதிர் தாழ்கயத்து
ளாங்கடத் தாரை விலங்குமன் றேசொல்லிற் றையமற்றே. 13

## தீவிரமான பத்திநிலை

ஐயா துவந்தனை நாயேனை யஞ்சன வெற்ப வென்றுங்
கையா துவந்தனை நின்னையல் லாற்கண் ணுதன்முதலோர்
பொய்யா துவந்தனை யார்முகங் காட்டினும் போற்றியுரை
செய்யா துவந்தனை பண்ணுது வாக்குமென் சென்னியுமே. 14

## தலைவியின் ஆற்றுமை கண்ட செவிலித்தாய் இரங்கல்

சென்னி யிலங்கை குவிக்கு முயிர்க்குந் திகைக்கு நின்னை
யுன்னி யிலங்கையிற் கண்ணுறங் காளுயர் வீடணனை
மன்னி யிலங்கையில் வாழ்கென்ற வேங்கட வாணமற்றோர்
கன்னி யிலங்கைக்கி னின்பேர் கருணைக் கடலல்லவே. 15

## நெஞ்சிடமாகக் கொள்ள வேண்டுதல்

கடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவி நடத்தத்
தடமா மலைவற்ற வாளி தொட் டாய்க்கென் றனிநெஞ்சமே
வடமா மலையுந் திருப்பாற் கடலும்வை குந்தமும்போ
விடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே. 16

## திருவடிப் பற்று

இருப்ப தனந்தனி லெண்ணலில் வைகுந்தத் தென்பர்வெள்ளிப்
பருப்ப தன்அந்தண் மலரோ னறிகிலர் பாரளந்த
திருப்ப தன்நந்தன் மதலைநிற் குந்திரு வேங்கடமென்
பொருப்ப துஅனந்த றவிர்ந்துயிர் காடொழப் போதுமினே. 17

போதார் அவிந்த வரையும் புகாவண்ட புற்புதத்தின்
மீதார இந்த வினைதீர்க்க வேண்டும்விண் மண்ணுக்கெல்லா
மாதார இந்தளந் தேன்பாடும் வேங்கடத் தப்ப நின்பொற்
பாதார விந்தமல் லாலடி யேற்கொரு பற்றில்லையே. 18

### தலைவியின் வருத்தங் கண்டு ஆற்ருளான தோழி மதி நோக்கி இரங்கிக் கூறல்

பற்றி யிராமற் கலைபோய் வெளுத்துடல் பாதியிரா
வற்றி யிராப்பகல் நின்கண் பனிமல்கி மாசடைந்து
நிற்றி யிராக மொழிச்சியைப் போல்நெடு வேங்கடத்துள்
வெற்றி யிராமனை வேட்டாய்கொல் நீயுஞ்சொல் வெண்
[மதியே. 19

### மாயப்பிரான்கழல் தலையால் தாங்குக

மதியா தவன்கதிர் மின்மினி போலொளிர் வைகுந்தந்தா
மதியா தவன்றர வாழ்ந்திருப் பீர்வட வேங்கடவன்
மதியா தவன்கடத் துட்டயிர் வாய்வைத்த மாயப்பிரான்
மதியா தவனுரங் கீண்டான் கழல்சென்னி வைத்திருமே. 20

### உலகமும் உயிரும் தந்த மூர்த்தி

இருபது மந்தரத் தோளு மிலங்கைக்கிறை வன்சென்னி
யொருபதும் அந்தரத் தேயறுத் தோனப்ப னுந்திமுன்னுள்
தருபது மந்தர வந்தன நான்முகன் முன்முதலா
வருபது மந்தர மொத்தபல் சீவனும் வையமுமே. 21

### நரசிங்க மூர்த்தியின் பேருரு

வைய மடங்கலு மோர்துகள் வாரி யொருதிவலை
செய்ய மடங்கல் சிறுபொறி மாருதஞ் சிற்றுயிர்ப்பு
துய்ய மடங்கலி லாகாயந் தான்விரற் றேன்றும்வெளி
வெய்ய மடங்கல் வடிவான வேங்கட வேதியற்கே. 22

### பிறவியறுக்க வேண்டுதல்

வேதா வடமலை வெங்காலன் கையில் விடுவித்தென்னை
மாதா வடமலை சொங்கையுண் ணுதருண் மண்ணளந்த
பாதா வடமலை மேற்றுயின் றுய்கடற் பார்மகட்கு
நாதா வடமலை யாய்அலர் மேன்மங்கை நாயகனே. 23

### திருமாலே பரம்பொருள்

நாயக ராத்திரி யுஞ்சில தேவர்க்கு நாணிலைகொல்
தூயக ராத்திரி மூலமெ னுமுனந் துத்திப்பணிப்
பாயக ராத்திரி மேனியம் மான்பைம்பொன் வேங்கடவன்
தீயக ராத்திரி சக்கரத்தாற் கொன்ற சீர்கண்டுமே. 24

கண்ட வனந்தரங் காலெரி நீர்வையங் காத்துஅவைமீண்
டுண்ட வனந்தரங் கத்துறை வானுயர் தந்தைதமர்
விண்ட வனந்தர மேலவன் வேங்கட மாலடிமை
கொண்ட வனந்தரத் தும்பேர் நினைக்கவுங் கூற்றஞ்சுமே. 25

—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

## குறிப்புரை

திருவேங்கடத்து அந்தாதி திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடிய அட்டப் (எட்டுப்) பிரபந்தங்களுள் ஒன்றாகும். அந்தாதி என்பது ஒரு பாடலின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் முதலியவற்றை வரும் பாடலின் தொடக்கமாகக் கொண்டு பாடப்பெறும் பிரபந்த வகையாகும். வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் இருவகைப் பாவினாலும் இப் பிரபந்தம் பாடுவது மரபு. இந்நூல் கட்டளைக் கலித்துறைப் பாவால் அமைந்துள்ள கலித்துறையந்தாதி யாகும். திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கும் திருமாலைத் துதித்து அந்தாதி முறைப் பாடல்களினால் போற்றுவதால் இந்நூல் 'திருவேங்கடத்து அந்தாதி' என்னும் பெயர் பெறுவதாயிற்று.

இதன் ஆசிரியராகிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 'திவ்விய கவி' எனப் போற்றப்படுபவர். அழகிய மணவாளதாசர் என்பது இவருக்குரிய மற்றொரு பெயர். இவர் திருமங்கையில் பிறந்தவர். இவர் தமது வாழ்வின் பெரும்பகுதியையும் திருவரங்கத்தில் கழித்தவர். பட்டர் என்பவரிடம் அருங்கலை பயின்றார். இவர் தென்மொழி, வடமொழிகளில் பெரும்புலவராவார். இவர் காலம் 12 ஆம் நூற்றாண்டாகும் என்பர்.

## அருஞ்சொற்பொருள்

1. திருவேங்கடம் - திருப்பதி மலை, சிற்றன்னை - சிறியதாய், கைகேயி; தரு வேம் கடம் - மரங்களெல்லாம் வேகும்படியான காடு; வேம் - வேகும் என்னும் செய்யுமென்னெச்சத்து ஈற்று உயிர்மெய் கெட்டது. உருவேங்கள் தத்துக்கு - உருவுடையேமாகிய எங்கள் ஆபத்துக்கு; உருவேங்கள் - தன்மைப் பன்மை வினையாலணையும் பெயர்; கள் - விகுதிமேல் விகுதியாய் வந்தது; உற்று - முதலையால் துன்பம் உற்று; வருவேம் - வருவோம்; உயர்வுத் தன்மைப் பன்மை முற்று. கடத்தும்பி - மதம் ஒழுகுகின்ற யானையே, விளி. கடம் - கன்னம் - ஆகுபெயராய் மதத்தைக் குறித்தது. அஞ்சல் - எதிர்மறை வியங்கோள் முற்று. கழல் - திருவடி, ஆகு பெயர்; ஓடினகழல் - பெயரெச்சம்.

இப் பாட்டு கடைநிலைத் தீவக அணி. தீவகம் - ஒரு சொல் செய்யுளில் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ நின்று ஏனையிடத்தும் சென்று பொருள்படுதல். ஓடினகழல் நின்றன, நடந்தன, இருந்தன என்றது நயம்.

2. மாலைமதி - பிறை; குஞ்சி - தலைமயிர்; போதன் - பிரம்மா; வாசவன் - இந்திரன்; அந்தி காலை - மாலை நேரத்திலும் காலை நேரத்திலும், உம்மைத் தொகை. கைம்மலை - கையாகிய மலை, உருவகம்; வேலை - கடல்; மதிக்கும் - கடையும்.

3. அவியா மதி விளக்கு - கெடாத ஞானமாகிய விளக்கு ; அங்கம் - உறுப்பு ; கடம் - பாத்திரம்; இங்கு உடம்பைக் குறித்தது; உவம ஆகுபெயர். தீங்கு அட - தீமைகளை அழிக்கும்படி; இதில் - இதைக்காட்டிலும் ; சீரியதே - சீர்மையுடையதோ ; அன்று. ஏகாரம் எதிர்மறை. கட மால் ஐயிராவதம் - மத மயக்கம் உடைய வெள்ளையானை ; ஐராவதம் ஏறி இருத்தல் - இந்திர பதவியைப் பெற்று இன்புறுதல். ஆலயம், அயிராவதம் என்னும் சொற்கள் திரிபுநயத்திற்காக ஆலையம், ஐயிராவதம் என வந்தன. இறைவனை மனத்திற்கொண்டு தோத்திரம் செய்வதே இன்பம் ; இந்திர போகம் இன்பமன்று என்பது கருத்து.

4. ஆரணம் - வேதம் ; கஞ்சம் - தாமரை ; செல்வப் பெருக்கு ஆரணங்கு - செல்வ மிகுதிக்குக் காரணமாகிய தெய்வம், திருமகள்; மரு - வாசனை; கார் - மேகம் ; அணவும் - மேல்நோக்கிச் சென்று தீண்டுதல்.

5. தாயவன் - தாவி அளந்தவன் ; தாவியவன் என்பது தாயவன் என வந்தது ; வினையாலணையும் பெயர்; இதில் வினையை உணர்த்தும் தாவியென்னும் செய்தென்னெச்சம் தாய் என ஈறு திரிந்து நின்றது. கண் நன் கமலம் ஒப்பான் - நல்ல தாமரை மலரைப் போலும் கண்ணுடையவன் ; சரம் - அம்பு ; தீய வன் கண்ணன் - கொடுமையும் அஞ்சாமையும் உடையவன் - இராவணன் ; தூயவன் கண் அன்பு உடையார்க்கு எனப் பிரிக்க.

6. தூர இரும் - தூரத்தே விலக்கியிருப்பீராக. இரும் - பன்மை ஏவல் ; புண் தூரிக்கும் - புண்ணைச் சுமந்திருக்கும் ; நேர் அவிரும் புண்டரர் - மேல்நோக்கி விளங்கும் மூன்று கீற்றுக இடப் படும் திருமண்காப்பு (நாமம்) உடையவர். ஈர இரும் புண்டரீகம் - குளிர்ந்த பெரிய தாமரை ; தீர - முழுவதும்.

7. சேர்ந்து - நட்பாகி ; கவி - குரங்கு (சுக்கிரீவன்); உகவிக்கும் - மகிழ்விக்கும் ; தண்டலை - சோலை ; பஞ்சொழுக்கிய பால் - உயிர் போங்காலத்துப் பஞ்சில் தோய்த்து வாயில் ஒழுக விட்ட பால் ; உக விக்கும் பொழுது - கடைவாயில் வழிந்தொழுகும்படி விக்கல் எடுக்கும் நேரம்.

8. வந்தனை - வணக்கம் ; வந்தனை - வந்தாய் ; ஐகார ஈற்று முன்னிலை வினைச்சொல் ; உந்தி - கொப்பூழ், இங்கு வயிற்றினை உணர்த்திற்று. கவந்தன் - கவந்தன் என்னும் பெயருடைய அசுரன் ; புந்திக்கு - புத்திக்கு ; அவம் - பயனற்ற செயல் ; ஐவர் - மெய் வாய் கண் மூக்குச் செவி ; பொரும் - போர் செய்யும்.

9. பொரு தரங்கம் - கரையில் வந்து மோதுகின்ற அலை ; வடம் - ஆலமரம். இங்கு அதன் இலையை யுணர்த்திற்று ; அனந்த புரம் - திருவனந்தபுரம் என்னும் தலம். கருது அரங்கம் - தியானிக்கின்ற திருவரங்கம் என்னும் தலம் ; நிருதர் - அசுரர் ; அங்கம் - உடம்பு ; அன்றில் - ஒரு பறவை ; பிரிவுத் துன்பத்தைத் தாங்காது. வல்லி - கொடி, உவம ஆகுபெயராய்ப் பெண்ணை உணர்த்திற்று. இப் பாடல் தோழி கூற்று. மாலைப் பொழுதுக்கும் அன்றில் குரலுக்கும் ஆற்ருது வருந்தும் தலைவியின்பொருட்டுக் கூறியது.

10. அவனி - நிலமகள் ; செல்வி - திருமகள் ; வரும் ஆதவனின் - எழுகின்ற சூரியனைப்போல ; வில் - ஒளி ; கண்வளர்கை - துயிலுதல் ; கை - தொழிற் பெயர் விகுதி. பணி - சொல்வாய் ; முதனிலை ஏவல் ; அம்புதி - கடல்.

11. அம்பரம் - கடல் ; அவயவர் - உறுப்பு உடையவர் ; அம் பரந்தாமரை - அழகிய பரமபதத்துக்கு உரியவரை ஆடகம் - பொன்; அம்பரம் - ஆடை ; அரை - இடுப்பு. அம்பரம் தாம் மரை போல் - வெட்டவெளியில் தாவும் மான்களைப்போல் ; தாம் - தாவும் என்னும் செய்யுமென்னெச்ச ஈற்று உயிர் மெய் கெட்டுத் தாம் என வந்தது.

12. உகந்தத்தை - விரும்பியதனை ; அஞ்சு உகம் தத்தை விளைக்கும் - ஐந்து யுகம் போல நீண்டு துன்பத்தை விளைவிக்கும் ; இதழ் செல் கிஞ்சுகம் தத்தையனையீர் - நிரனிறை உவமம்; கிஞ்சுகம் - முருக்க மலர் ; தத்தை - கிளி; இங்கு அதன் சொல்லைக் குறித்தது. விஞ்சு கந்தம் - மிகுந்த வாசனை ; துழாய் - துளசி ; இது தலைவி தலைமகனுடைய ஊர்க்குச் செல்ல ஒருப்படுதல் என்னும் அகப் பொருள் துறை. வரைதல் வேட்கை மிகுதியால் கூறப்படுவது.

13. தீங்கு அட தாரைப் புனைந்து ஏத்தலிர் - துன்பங்களை அழிக்கும்படி மாலையைச் சாத்தித் துதிக்க மாட்டீர். கடத்தாரை - கடத்த இயலாத தெய்வங்களை ; கடத்தும் - கடத்தி விடுங்கள். பன்மை - வியங்கோள் ; கட தாரை விலங்கு - மததாரை ஒழுகுகின்ற யானை ; விலங்கும்-இழிவுசிறப்பும்மை.

14. துவந்தனை - இருவினைத் தொடர்பு ; கையாது - வெறுக்காமல் ; உவந்தனை - மகிழ்ந்து அடியவனுகை ஏற்றுக் கொண்டாய் ; ஐகார ஈற்று முன்னிலை வினைச்சொல். கண்ணுதல் - நெற்றிக் கண் உடைய சிவபெருமான் ; போற்றியுரை செய்யாது வந்தனை பண்ணுது வாக்கும் என்சென்னியும் - நிரனிறைப் பொருள்கோள்.

**15.** அங்கை - அழகிய கை ; உயிர்க்கும் - பெருமூச்செறிவாள் ; செய்யும் என்னும் வினைமுற்று ; இலங்கு அயில்கண் - விளங்குகின்ற வேல்போலும் கண் ; அயிற்கண் என்னும் சொல் திரிவுநயத்துக்காக ஐயிற்கண் என வந்தது. இலம் - உடையோமல்லோம். கைக்கின்- வெறுத்து ஒதுக்கினுல்.

**16.** கடமாமலை - மதம் ஒழுகுகின்ற பெரிய மலைபோலும் யானை ; ஒசித்தாய்க்கு - ஒடித்த உனக்கு ; கவி - குரங்குச் சேனை ; தடமாம் அலை - பெரியகடல் ; வாளி - அம்பு ; அலைவு அற்று - அலைதல் இல்லாமல் ; வடமாமலையும் திருப்பாற்கடலும் வைகுந்தமும்போல் இடமாம் அலைவற்று நின்றும் கிடந்தும் இருப்பதற்கே - நிரனிறைப் பொருள்கோள்.

**17.** அனந்தனில் - ஆதிசேடனுகிய ஆசனத்தில் ; வெள்ளிப் பருப்பதன் - வெள்ளிமலையை இடமாக உடைய சிவபெருமான்; மலரோன் - பிரம்மா ; திருப்பதன் - அழகிய திருவடிகளை உடையவன் ; நந்தன்மதலை - நந்தகோபனுடைய மகன் ; அனந்தல் - சோம்பல்.

**18.** போதார் - பிரமாக்கள் ; அவிந்தவரையும் - அழியும் அளவும் ; புற்புதம் - நீர்க்குமிழி ; தோன்றி நிலையில்லாது அழிதலின் அண்டங்களுக்கு நீர்க் குமிழி உவமை மீது - மேலேயுள்ள பரமபதத்தில்; ஆர - பொருந்தும்படியாக ; ஆதார - ஆதாரமாக இருப்பவனே, விளி. இந்தளம் - பண்களுள் ஒருவகை ; தேன் - வண்டு.

**19.** இச்செய்யுள் தன்னுட் கையாறு எய்திடு கிளவி என்னும் அகப்பொருள் துறை. தோழி கூற்று. பிரிவாற்ருமையால் துன்பமுறும் தலைமகள் பிறபொருள்களும் தன் போல் துன்பம் உறுவதாகக் கூறுதல். தலைமகளுக்கும் சந்திரனுக்கும் சிலேடை கலை - ஆடை, நாள்தோறும் வளரும் கூறு , கண் பனி மல்கி - கண் நீர் நிறைந்து, இடத்தே குளிர்ச்சி மிகப் பெற்று ; மாசு - அழுக்கு, களங்கம் ; நிற்றி - நிற்கின்ருய் ; இகர ஈற்று முன்னிலை வினைமுற்று. இராகம் - இசை ; வேட்கையும் ஆம். மொழிச்சி - சொல்லை உடையவள் ; வேட்டாய்கொல் - விரும்பினுய் போலும்.

**20.** மதி ஆதவன் கதிர் - சந்திர சூரியர்களுடைய ஒளி ; மின்மினி - மின்மினிப்பூச்சியின் ஒளி ; தாமதியாது அவன் தர - காலந் தாழ்த்தாமல் இறைவன் கொடுக்க ; மதியாத - கடையப்படாத ; வன் கடம் - வலிய யானை ; மதியாதவன் - தன்னை மதிக்காத இரணியன் ; இரும் - இருப்பீராக.

21. மந்தரத்தோள் - மந்தரமலை போன்ற தோள், உவமைத் தொகை ; உந்தி - கொப்பூழ் ; பதுமம் - தாமரை ; தர - படைக்க ; வந்தன - தோன்றின. பதுமம் தரம் - பதுமம் என்னும் பேரெண்ணின் அளவினை ஒத்த.

22. அடங்கலும் - முழுவதும் ; வாரி - கடல் ; திவலை - துளி; செய்யமடங்கல் - நெருப்பு ; மாருதம் - காற்று ; மடங்கல் இல் ஆகாயம் - தான் பிற பூதங்களில் ஒடுங்காமல் ஏனை நான்கு பூதங்களும் தன்கண் ஒடுங்குதற்கு இடங்கொடுத்து நிற்கும் ஆகாயம். விரல் தோன்றும் வெளி - விரற்கிடை தூரம் ; நரசிங்க அவதாரத்தின் பேருருவத்தின் முன் ஐம்பூதங்களும் மிகச்சிறியனவாய்த் தோன்றுகின்றன என்பது கருத்து.

23. வேத்ா - பிரம்மா ; வடம் - பாசக்கயிறு ; வடம் அலை கொங்கை - முத்துவடம் புரளும் தனம் ; பிரமன், இயமன் என்னும் இருவர் கையிலும் பட்டுப் பிறந்து இறந்து உழலாமல் விடுவித்தருள்க என்பது கருத்து. பாதா - திருவடியை உடையவனே ; விளி. வடம் - ஆல்இலை ; அலை - கடல்.

24. நாயகராத் திரி - தம்மைத் தலைவர் என்று வீணில் சொல்லிக் கொண்டு திரியும்; கராத்திரி - யானை (கர+அத்திரி); கையையுடையமலை; வடமொழிப் புணர்ச்சி ; தீர்க்க சந்தி. துத்தி - புள்ளி, பணிப்பாயகம் - பாம்பாகிய பாயலை இடமாக உடைய; ராத்திரி மேனி - இருள்போலும் நிறம் ; உவமத்தொகை. தீயகரா - கொடிய முதலை.

25. கண்டவன் - படைத்தவன் ; அந்தரங்கத்து உறைவான் - அழகிய கடலில் உறைபவன் ; தரங்கம் - அலை ; இங்குக் கடலை உணர்த்திற்று ; ஆகுபெயர். விண்டவன் - இல்லாதவன் ; அந்தரம் மேலவன் - பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன் ; அனந்தரத்து - பின்னர்.

# 7. பாஞ்சாலி சபதம்

## சபதச் சருக்கம்

### துச்சாதனன் திரௌபதியைச் சபைக்குக் கொணர்தல்

இவ்வுரை கேட்டதுச் சாதனன் — அண்ணன்
இச்சையை மெச்சி எழுந்தனன் — இவன்
செவ்வி சிறிது புகலுவோம்; — இவன்
தீமையில் அண்ணனை வென்றவன் ; — கல்வி
எள்ளள வேனுமி லாதவன் ; — கள்ளும்
ஈரக் கறியும் விரும்புவோன் ; — பிற
தெவ்வர் இவன்றனை அஞ்சுவார் ; — தன்னைச்
சேர்ந்தவர் பேயென் றொதுங்கு வார் ; 1

புத்தி விவேக மில்லாதவன் , — புலி
போல உடல்வலி கொண்டவன் ; — கரை
தத்தி வழியுஞ் செருக்கினால் — கள்ளின்
சார்பின் றியேவெறி சான்றவன் ; — அவ
சக்தி வழிபற்றி நின்றவன் , — சிவ
சக்தி நெறிஉண ராதவன் ; — இன்பம்
நத்தி மறங்கள் இழைப்பவன் ; — என்றும்
நல்லவர் கேண்மை விலக்கினோன் ; 2

அண்ண னொருவனை யன்றியே — புவி
அத்தனைக் குந்தலை யாயினோம் — என்னும்
எண்ணந் தனதிடைக் கொண்டவன் ; — அண்ணன்
ஏது சொன்னாலும் மறுத்தி டான் ; — அருட்
கண்ணழி வெய்திய பாதகன் , — 'அந்தக்
காரிகை தன்னை அழைத்துவா' — என்றவ
வண்ண னுரைத்திடல் கேட்டனன் ; — நல்ல
தாமென் றுறுமி எழுந்த னன். 3

பாண்டவர் தேவி யிருந்த தோர் — மணிப்
பைங்கதிர் மாளிகை சார்ந்தனன் — அங்கு
நீண்ட துயரில் குலைந்துபோய் — நின்ற
நேரிழை மாதினைக் கண்டனன் ; — அவள்

நீண்டலே யெண்ணி ஒதுங்கிளுள் ; — 'அடி!
  செல்வ தெங்கே ?' யென்றிரைந்திட்டான்; — 'இவன்
ஆண்டகை யற்ற புலேய' னென்று — அவள்
  அச்ச மிலாதெ திர்நோக் கியே. 6

## திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் வாக்குவாதம்

"தேவர் புவிமிசைப் பாண்டவர்; — அவர்
  தேவி, துருபதன் கன்னி நான்; — இதை,
யாவரும் இற்றை வரையினும் — தம்பி
  என்முன் மறந்தவரில்லே காண்; — தம்பி
காவ லிழந்த மதிகொண் டாய் — இங்குக்
  கட்டுத் தவறி மொழிகிருய் ; — தம்பி
நீவந்த செய்தி விரைவிலே — சொல்லி
  நீங்குக' என்ற னள்பெண் கொடி. 7

'பாண்டவர் தேவியு மல்லநீ; — புகழ்ப்
  பாஞ்சாலத் தான்மக ளல்லே நீ;— புவி
யாண்டருள் வேந்தர் தலேவனும் — எங்கள்
  அண்ணனுக் கேயடி மைச்சி நீ; — மன்னர்
நீண்ட சபைதனிற் சூதிலே — எங்கள்
  நேசர் சகுனியோ டாடியங்கு — உன்னேத்
தூண்டும் பணய மெனவைத் தான் — இன்று
  தோற்று விட்டான் தருமேந்திரன். 8

'ஆடி விலேப்பட்ட தாதி நீ—உன்னே
  ஆள்பவன் அண்ணன் சுயோதனன்; — "மன்னர்
கூடி யிருக்குஞ் சபையிலே — உன்னேக்
  கூட்டி வரு''கென்று மன்னவன் — சொல்ல
ஓடி வந்தேனிது செய்திகாண்! — இனி
  ஒன்றுஞ் சொலா தென்னே டேகுவாய் — அந்தப்
பேடி மகனெரு பாகன்பாற் — சொன்ன
  பேச்சுக்கள் வேண்டிலன் கேட்கவே.' 9

(வேறு)

துச்சா தனனிதனேச் சொல்லினன், பாஞ்சாலி —
"அச்சா ! கேள் மாதவிலக் காதலா லோராடை
தன்னி லிருக்கின்றேன் தார்வேந்தர் பொற்சபைமுன்
என்னே யழைத்தல் இயல்பில்லே ; அன்றியுமே
சோதரர்தந் தேவிதனேச் சூதில் வசமாக்கி,

ஆதரவு நீக்கி, அருமை குலைத்திடுதல்,
மன்னர் குலத்து மரபோகாண்? அண்ணன்பால்
என்னிலைமை கூறிடுவாய், ஏகுகநீ'' என்றிட்டாள்.
கக்கக் கவென்று கனைத்தே பெருமூடன்
பக்கத்தில் வந்தேயப் பாஞ்சாலி கூந்தலினைக்
கையினாற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்.
'ஐயகோ' வென்றே யலறி யுணர்வற்றுப்
பாண்டவர்தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான், வழிநெடுக மொய்த்தவராய்,
'என்ன கொடுமையிது' வென்று பார்த்திருந்தார்;
ஊரவர்தங் கீழ்மை உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?
பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்க்
கேடுற்ற மன்னரறங் கெட்ட சபைதனிலே
கூடுதலும் அங்கேபோய்க் 'கோ'வென்றலறினாள்.

## சபையில் திரௌபதி நீதி கேட்டழுதல்

விம்மி யழுதாள்—'விதியோ கணவரே!
அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை
வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து
பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ?'
என்றாள். விஜயனுடன் ஏறுதிறல் வீமனுமே
குன்றா மணித்தோள் குறிப்புடனே நோக்கினார்;
தருமனுமற் றாங்கே தலைகுனிந்து நின்றிட்டான்.
பொருமி யவள்பின்னும் புலம்புவாள் :— 'வான்சபையில்
கேள்விபல வுடையோர், கேடிலா நல்லிசையோர்,
வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள்,
மேலோ ரிருக்கின்றார் வெஞ்சினமேன் கொள்கிலரோ?
வேலோ ரெனையுடைய வேந்தர் பிணிப்புண்டார்,
இங்கிவர்மேற் குற்றம் இயம்ப வழியில்லை.
மங்கியதோர் புன்மதியாய்! மன்னர் சபைதனிலே
என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள் சொல்கிறாய்;
நின்னை யெவரும் "நிறுத்தடா" என்பதிலர்.

என்செய்கேன் ?' என்றே இரைந்தழுதாள், பாண்டவரை
மின்செய் கதிர்விழியால் வெந்நோக்கு நோக்கினாள்.
மற்றவர் தாம்முன்போல் வாயிழந்து சீர்குன்றிப்
பற்றைகள்போல் நிற்பதனைப் பார்த்து, வெறிகொண்டு,
'தாதியடி தாதி' யெனத் துச்சாதனன் அவளைத்
தீதுரைகள் கூறினான், கர்ணன் சிரித்திட்டான்;
சகுனி புகழ்ந்தான் ; சபையினோர் வீற்றிருந்தார்!
தகுதியுயர் வீட்டுமனுஞ் சொல்லுகிறான் 'தையலே!

## வீட்டுமாசாரியன் சொல்வது

சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்,
சூதிலே வல்லான் சகுனி தொழில்வலியால்,
மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்திட்டான்
மற்றிதனி லுன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய், கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படி, நீ சொல்லுவது
நீதமெனக் கூடும் ; நெடுங்காலச் செய்தியது!
ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணிவந்தார். பின்னாளில் இஃது பெயர்ந்துபோய்
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர், ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம் , தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை.
தன்னை யடிமையென விற்றபின் னுந்தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.
செல்லு நெறியறியார் செய்கையிங்குப் பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும், விலங்குகளும் கண்புதைக்கும்
செய்கை அநீதியென்று தேர்ந்தாலும் சாத்திரந்தான்
வைக்கும் நெறியும் வழக்கமுங் நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பி லாகா வகையுரைத்தேன்;
தீங்கு தடுக்குந் திறமிலேன்' என்றந்த
மேலோன் தலைகவிழ்ந்தான். மெல்லியளுஞ் சொல்லு
[கிறாள் :

## திரௌபதி சொல்வது

'சாலநன்கு கூறினீர் ! ஐயா ! தருமநெறி ;
பண்டோர் இராவணனும் சீதைதன்னைப் பாதகத்தால்

கொண்டோர் வனத்திடையே வைத்துப்பின் கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே
செந்திருவைப் பற்றிவந்த செய்தி யுரைத்திடுங்கால்,
"தக்கதுநீர் செய்தீர்; தருமத்துக் கிச்செய்கை
ஒக்கும்" என்று கூறி, உகந்தனராம் சாத்திரிமார்!
பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்!
மாய முணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ! நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ?
மண்டபம்நீர் கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமையுடையீர் பெண்களுடன்பிறந்தீர்?
பெண்பாவ மன்றோ பெரியவசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்!' என்று கையெடுத்துக் கும்பிட்டாள்;
அம்புபட்ட மான்போல் அழுதுதுடி துடித்தாள்;
வம்புமலர்க் கூந்தல் மண்மேற் புரண்டுவிழத்
தேவி கரைந்திடுதல் கண்டேசில மொழிகள்
பாவிதுச் சாதனனும் பாங்கிழந்து கூறினான். 8

(வேறு)

ஆடை குலைவுற்று நிற்கிறாள்! — அவள்
ஆவென் றழுது துடிக்கிறாள் — வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன் — அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிறான் — இந்தப்
பீடையை நோக்கினான் வீமனும் — கரை
மீறி எழுந்தது வெஞ்சினம் — துயர்
கூடித் தருமனை நோக்கியே, — அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டிரோ? 9

### வீமன் சொல்வது

(வேறு)

'சூதர் மனைகளி லே — அண்ணே
தொண்டு மகளி ருண்டு;
சூதிற் பணயமென்றே — அங்கோர்
தொண்டச்சி போவ தில்லை. 10

'ஏது கருதி வைத்தாய்? அண்ணே
யாரைப் பணயம் வைத்தாய்?
மாதர் குல விளக்கை — அன்பே
வாய்ந்த வடி வழகை. 11

'பூமி யரச ரெல்லாங் — கண்டே
போற்ற விளங்கு கின்றான்
சாமி, புகழினுக்கே — வெம்போர்ச்
சண்டனப் பாஞ்சாலன். 12

'அவன் சுடர் மகளை — அண்ணே!
ஆடி யிழந்து விட்டாய்!
தவறு செய்து விட்டாய் — அண்ணே!
தருமங் கொன்று விட்டாய். 13

'சோரத்திற் கொண்டதில்லை ; — அண்ணே!
சூதிற் படைத்த தில்லை ;
வீரத்தினாற் படைத்தோம் — வெம்போர்
வெற்றியினாற் படைத்தோம். 14

'சக்கரவர்த்தி யென்றே — மேலாந்
தன்மை படைத் திருந்தோம் ;
பொக்கென ஓர் கணத்தே — எல்லாம்
போகத் தொலைத்து விட்டாய். 15

'நாட்டை யெல்லாந் தொலைத்தாய்! — அண்ணே
நாங்கள் பொறுத் திருந்தோம்
மீட்டும் எமை யடிமை — செய்தாய்
மேலும் பொறுத் திருந்தோம். 16

துருபதன் மகளைத் — திட்ட
துய்ம னுடற் பிறப்பை,
இரு பகடை யென்றாய் — ஐயோ!
இவர்க் கடிமை யென்றாய்! 17

'இது பொறுப்ப தில்லை, — தம்பி!
எரிதழல் கொண்டு வா ;
கதிரை வைத்திழந்தான் — அண்ணன்
கையை எரித்திடுவோம்!' 18

## அர்ஜுனன் சொல்வது

(வேறு)

எனவீமன் சகதேவ னிடத்தே சொன்னான் ;
இதைக்கேட்டு வில்விஜயன் எதிர்த்துச் சொல்வான்.
'மனமாரச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்? எங்கு சொன்னாய்? யாவர்
[முன்னே

கனமாருந் துருபதனுர் மகளைச் சூதுக்
களியிலே இழந்திடுதல் குற்ற மென்றாய் ;
சினமான தீஅறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய். 19

தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும் எனு மியற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்,
கருமத்தை மென்மேலுங் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம் ; காலம் மாறும் ;
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம் ;
தனுஉண்டு காண்டீவம் அதன்பேர்' என்றான். 20

## விகர்ணன் சொல்வது

அண்ணனுக்குத் திறல்வீமன் வணங்கி நின்றான் ;
அப்போது, விகர்ணனெழுந் தவைமுன் சொல்வான்
"பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான்கொள்ளேன் ; பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவ ரெண்ணி
ஏதெனிலுஞ் செய்திடலாம் என்றான் பாட்டன்.
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறிஎன்றான் ; வழுவே சொன்னான். 21

"எந்தையர் தம் மனைவியரை விற்பதுண்டோ ?
இதுகாறும் அரசியரைச் சூதில் தோற்ற
விந்தையைநீர் கேட்ட துண்டோ ? விலைமாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக் காரர்
சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்தி விட்டார் !
சொல்லளவே தானாலும் வழக்கந் தன்னில்
இந்தவிதஞ் செய்வதில்லை ; சூதர் வீட்டில்
ஏவற்பெண் பணயமில்லை என்றுங் கேட்டோம். 22

" தன்னையிவன் இழந்தடிமை யான பின்னர்த்
தாரமெது ? வீடேது ? தாத னான
பின்னையுமோர் உடைமை உண்டோ ?" என்றுநம்மைப்
பெண்ணரசு கேட்கின்றார் பெண்மை வாயால்

மன்னர்களே ! களிப்பதுதான் சூதென் றாலும்
    மனுநீதி துறந்திங்கே வலிய பாவந்
தன்னைஇரு விழிபார்க்க வாய்பே சீரோ ?
    தாத்தனே ! நீதிஇது தகுமோ ? என்றான். 23

இவ்வாறு விகர்ணனும் உரைத்தல் கேட்டார் :
    எழுந்திட்டார் சிலவேந்தர் ; இரைச்ச லிட்டார் ;
'ஒவ்வாது சகுனிசெயுங் கொடுமை' என்பார் ;
    'ஒருநாளும் உலகிதனை மறக்கா' தென்பார் ;
'எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர் ;
    ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா ;
செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்
    செருக்களத்தே தீருமடா பழியிஃ' தென்பார். 24

### கர்ணன் பதில்

(வேறு)

விகருணன் சொல்லைக் கேட்டு
    வில்லிசைக் கர்ணன் சொல்வான் :
'தகுமடா சிறியாய் நின்சொல் ;
    தாரணி வேந்தர் யாரும்
புகுவது நன்றன் றெண்ணி
    வாய்புதைத் திருந்தார் ; நீதான்
மிகுமுறை சொல்லி விட்டாய்,
    விரகிலாய் ! புலனு மில்லாய் ! 25

பெண்ணிவள் தூண்ட லெண்ணிப்
    பசுமையால் பிதற்று கின்றாய் ;
எண்ணிலா துரைக்க லுற்றாய் ;
    இவளைநாம் வென்ற தாலே
நண்ணிடும் பாவ மென்றாய்
    நாணிலாய் ! பொறையு மில்லாய் !
கண்ணிய நிலைமை யோராய் ;
    நீதிநீ காண்ப துண்டோ ? 26

'மார்பிலே துணியைத் தாங்கும்
    வழக்கங்கீ ழடியார்க் கில்லை.
சீரிய மகளு மல்லள்,
    ஐவரைக் கலந்த தேவி !

யாரடா, பணியாள்! வாராய்;
பாண்டவர் மார்பி லேந்தும்
சீரையுங் களைவாய்; தையல்
சேலையுங் களைவாய்' என்றான். 27

இவ்வுரை கேட்டா ரைவர்;
பணிமக்க ளேவா முன்னந்
தெவ்வர்கண் டஞ்சு மார்பைத்
திறந்தனர், துணியைப் போட்டார்.
நவ்வியைப் போன்ற கண்ணாள்,
ஞான சுந்தரி பாஞ்சாலி,
'எவ்வழி உய்வோ' மென்றே
தியங்கினாள், இணைக்கை கோத்தாள். 28

### திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை

(வேறு)

துச்சா தனன் எழுந்தே — அன்னை
துகிலினை மன்றிடை யுரித லுற்றான்;
'அச்சோ தேவர்களே!' — என்று
அலறி அவ்விதுரனுந் தரைசாய்ந் தான்.
பிச்சே றியவனைப் போல் — அந்தப்
பேயனுந் துகிலினை உரிகை யிலே
உட்சோ தியிற் கலந்தாள்; — அன்னை
உலகத்தை மறந்தாள், ஒருமை யுற்றாள். 9

'ஹரி, ஹரி, ஹரி' என்றாள்; — 'கண்ணா!
அபய மபய முனக் கபய' மென்றாள்.
'கரியினுக் கருள்புரிந் தே — அன்று
கயத்திடை முதலையின் உயிர்மடித் தாய்!
கரிய நன்னிற முடையாய்! — அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந் தாய்!
பெரியதோர் பொருளா வாய்! — கண்ணா
பேசரும் பழமறைப் பொருளா வாய்! 30

'சக்கர மேந்தி நின்றாய்! — கண்ணா!
சார்ங்கமென் றொருவில்லைக் கரத்துடை யாய்!
அட்சரப் பொருளா வாய்! — கண்ணா!
அக்கார அமுதுண்ணும் பசுங் குழந்தாய்!

துக்கங்கள் அழித்திடு வாய்! — கண்ணா!
　　தொண்டர்கண் ணீர்களைத் துடைத்திடு வாய்!
தக்கவர் தமைக்காப் பாய் — அந்தச்
　　சதுர்முக வேதனைப் படைத்து விட்டாய். 31

‘வானத்துள் வானா வாய், — தீ,
　　மண், நீர், காற்றினில் அவையா வாய்;
மோனத்துள் விழ்ந்திருப்பார் — தவ
　　முனிவர்தம் அகத்தினி லொளிர்தரு வாய்;
கானத்துப் பொய்கை யிலே — தனிக்
　　கமலமென் பூமிசை வீற்றிருப் பாள்,
தானத்து ஸ்ரீதேவி, அவள்
　　தாளிணை கைக்கொண்டு — மகிழ்ந்திருப் பாய்! 32

‘ஆதியி லாதி யப்பா, — கண்ணா !
　　அறிவினைக் கடந்தவிண் ணகப்பொ ருளே !
சோதிக்குஞ் சோதியப்பா ! — என்றன்
　　சொல்லினைக் கேட்டருள் செய்திடு வாய் !
மாதிக்கு வெளியினிலே — நடு
　　வானத்திற் பறந்திடும் கருடன் மிசை
சோதிக்குள் ஊர்ந்திடு வாய், — கண்ணா !
　　சுடர்ப் பொருளே, பேரடற்பொ ருளே ! 33

‘கம்பத்தி லுள்ளா னோ ? — அடா !
　　காட்டுன்றன் கடவுளைத் தூணிடத் தே !
வம்புரை செய்யுமூ டா ” — என்று
　　மகன் மிசை யுறுமித் தூணுதைத் தான்,
செம்பவிர் குழலுடையான் ; — அந்தத்
　　தீயவல் லிரணிய னுடல் பிளந்தாய் !
நம்பிநின் னடிதொழு தேன் ; — என்னை
　　நாணழி யாதிங்குக் காத்தருள் வாய் ! 34

‘வாக்கினுக் கீச னையும் — நின்றன்
　　வாக்கினி லசைத்திடும் வலிமையி னாய்,
ஆக்கினை கரத்துடை யாய் — என்றன்
　　அன்புடை எந்தை ! என் னருட்கட லே,
நோக்கினிற் கதிருடை யாய் ! — இங்கு
　　நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்தருள் வாய் !
தேக்குநல் வானமு தே ! — இங்கு
　　சிற்றிடை யாய்ச்சியில் வெண்ணெ யுண்டாய்! 35

வையகம் காத்திடு வாய் — கண்ணா !
மணிவண்ணா, என்றன் மனச் சுடரே !
ஐய, நின் பதம லரே — சரண்,
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி!' — என்றாள்.
பொய்யர் தந் துயரினைப் போல், — நல்ல
புண்ணிய வாணர்தம் புகழினைப் போல்,
தையலர் கருணையைப் போல் — கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப் போல், 36

பெண்ணொளி வாழ்த்திடு வார் — அந்தப்
பெருமக்கள் செல்வத்திற் பெருகுதல் போல்
கண்ண பிரானரு ளால், — தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதி தாய்
வண்ணப்பொற் சேலைக ளாம் — அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தன வே!
எண்ணத்தி லடங்கா வே ; — அவை
எத்தனை எத்தனை நிறத்தன வோ ! 37

பொன்னிழை பட்டிழையும் — பல
புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைக ளாய்
சென்னியிற் கைகுவித் தாள் — அவள்
செவ்விய மேனியைச் சார்ந்து நின்றே,
முன்னிய ஹரிநா மம் — தன்னில்
மூளுநற் பயனுல கறிந்திடவே,
துன்னிய துகிற் கூட்டம் — கண்டு
தொழும்பத் துச்சாதனன் வீழ்ந்து விட்டான். 38

தேவர்கள் பூச்சொரிந் தார் — 'ஓம்
ஜெய ஜெய பாரத சக்தி' என்றே;
ஆவலோ டெழுந்து நின்று — முன்னை
ஆரிய வீட்டுமன் கைதொழு தான்.
சாவடி மறவரெல்லாம்—'ஓம்
சக்தி சக்தி சக்தி' என்று கரங்குவித்தார்.
காவலின் நெறிபிழைத் தான் — கொடி
கடியர வுடையவன் தலைகவிழ்ந் தான். 39

## வீமன் செய்த சபதம்

(வேறு)

வீம னெழுந் துரைசெய் வான் : —'இங்கு
விண்ணவ ராணை, பராசக்தி யாணை,
தாமரைப் பூவினில் வந்தான் — மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை,
மாமகளைக் கொண்ட தேவன் — எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன் பதத்தாணை ;
காமனைக் கண்ணழலாலே — சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில், 40

ஆணையிட் டிஃதுரை செய்வேன் — இந்த
ஆண்மை யிலாத்துரி யோதனன் றன்னை,
பேணும் பெருங்கன லொத்தாள் - எங்கள்
பெண்டு திரௌபதியைத் தொடைமீதில்
நாணின்றி 'வந்திரு ' என்றான் — இந்த
நாய்மக னாந் துரியோ தனன் றன்னை,
மாணற்ற மன்னர்கண் முன்னே — என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே, 41

'தொடையைப் பிளந் துயிர் மாய்ப்பேன் — தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன் ; — அங்கு
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்,
நடை பெறுங் காண்பி ருலகீர் ! — இது
நான் சொல்லும் வார்த்தைஎன் றெண்ணிடல் வேண்டா !
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை — இது
சாதனை செய்க, பராசக்தி!' என்றான். 42

## அர்ஜுனன் சபதம்

பார்த்த னெழுந்துரை செய்வான் : — 'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்,
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு — எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழலாணை ,
கார்த்தடங் கண்ணி எந்தேவி — அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை ;
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய், — ஹே !
பூதலமே ! அந்தப் போதினில் !' என்றான். 43

## பாஞ்சாலி சபதம்

தேவி திரௌபதி சொல்வாள்: — 'ஓம்
    தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன் ;
பாவி துச்சாதனன் செந்நீர் — அந்தப்
    பாழ்த் துரியோ தனன் ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து — குழல்
    மீதினிற் பூசி நறுநெய் குளித்தே,
சீவிக் குழல் முடிப்பேன் யான் — இது
    செய்யு முன்னே முடியே' னென் றுரைத்தாள். 44

ஓமென் றுரைத்தனர் தேவர் — ஓம்
    ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமியதிர்ச்சி உண்டாச்சு — விண்ணைப்
    பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று,
சாமி தருமன் புவிக்கே — என்று
    சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும்!
நாமுங் கதையை முடித்தோம் — இந்த
    நானில முற்றும் நல்லின்பத்தில் வாழ்க. 45

## குறிப்புரை

'பாஞ்சாலி சபதம்' என்பது பஞ்சபாண்டவரின் மனைவியான பாஞ்சாலி எனப்படும் திரௌபதி, தன்னைத் துரியோதன் அரசவையிலே தகாத முறையில் கொண்டுவந்து துச்சாதனன் ஆடையைப் பிடித்திழுத்து அவமானப்படுத்தியபோது, சொன்ன சூளுரையைப் பொருளாகக் கொண்டுள்ளது. மகாபாரதத்தில் வரும் இந் நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு சிந்துநடைப் பாடலில் தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் புதுமைக் காப்பியம் படைத்துள்ளார். அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம், சபதச் சருக்கம் என ஐந்து சருக்கங்கள் இதில் உள்ளன.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882-1921) இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் சிறந்து விளங்கிய மக்கள்-கவிஞர், தாய் நாட்டுப்பற்றும், தாய்மொழிப்பற்றும், விடுதலையார்வமும் மக்களுக்குத் தோன்றுமாறு அருமையான கவிதைகளை இவர் படைத்தளித்துள்ளார். இவருடைய பாடல்கள் எளிய இனிய தெள்ளிய நடையில் அமைந்துள்ளன. இவர் உரை நடையில் எழுதிய கட்டுரை, கதை முதலியனவும் பலவாகும்.

## அருஞ்சொற்பொருள்

1. இவ்வுரை - துரியோதனன் கூறிய, "தம்பி போகக்கடவை நீ இப்போது அங்கு; இங்கு அப்பொற்றொடியொடும் வருக'' என்ற சொற்கள். செவ்வி - இயல்பு; வென்றவன் - மிக்கவன்; தெவ்வர் - பகைவர்.

2. புத்தி - நிச்சயித்து உணரும் அறிவு; விவேகம் - பகுத்து உணரும் அறிவு; தத்தி - கடந்து; சான்றவன் - மிக்கவன்; சால் என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினைச் சொல்; அவசத்தி; வீணான பயனற்ற சக்தி; வழிபற்றி - பின்பற்றி; நத்தி - விரும்பி - கேண்மை - நட்புரிமை.

3. அருட்கண் - அருளாகிய கண்; உருவகம், பைங்கதிர் பசுமை + கதிர். பசுமை குளிர்ச்சியை உணர்த்திற்று.

4. நேரிழை மாது - திரௌபதி; தீண்டல் - மாதவிடாயால் வரும் தீட்டு; புலையன் - இழிந்தவன்.

5. துருபதன் - திரௌபதியின் தந்தை, பாஞ்சால நாட்டரசன் இற்றை - இன்று என்பது இற்றை என வன்றொடராய ஐகாரமும் பெற்றது. ஐயீற்றுடைக் குற்றுகரம் என்பர். காவல் இழந்த மதி - வேண்டியவாறு செல்லும் அறிவு.

6. அல்லை - குறிப்பு வினைமுற்று, முன்னிலை; பணயம் - சூதாட்டத்தில் வைக்கப்பட்ட பொருள்.

7. சுயோதனன் - துரியோதனனுக்குரிய பெயர்களுள் ஒன்று.

8. அச்சா - குறிப்புச் சொல்; காண் - ஆராய்ந்துபார். இளவரசன் தன்னை - 'தன்' அசை. பெட்டைப் புலம்பல் - பெண்பாலார் போல் பயனின்றி அழுதல்; பிறர் - துன்ப முற்றோர்; துணை - துன்பத்தை நீக்கும் துணை; தராதலத்தின் - உலகிலிருந்து; 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு; நீக்கப்பொருள். பற்றைகள் - சிறு தூறுகள், புதர்கள்; வசை - பழி; கண்பார்த்தல் - அருள் செய்தல்; வம்பு - மணம்; கரைந்திடுதல் - சொல்லுதல்.

12. சண்டன் - சூரன்.

15. பொக்கென - விரைவுக் குறிப்புச் சொல்;

17. திட்டத்துய்மன் - திரௌபதியின் தமையன்.

19. கனம் - பெருமை.

20. மருமம் - மறை பொருள்.

21. விகருணன் - துரியோதனனுடைய தம்பியர்களுள் இளைய வன்.

25. மிகுமுறை சொல்லிவிட்டாய் - இகழ்ச்சிக் குறிப்பு; விரகு - வாழ்தற்குரிய உபாயம்.

26. பசுமை - இளமை.

27. சீரை - ஆடை.

29. பிச்சு – பித்து; போலி.

30. கயம் - குளம், காளிங்கன் - கண்ணனால் அடக்கப்பட்ட ஒரு பாம்பின் பெயர்; பெரியதோர் பொருள் - பிரமம்.

31. சார்ங்கம் - திருமால் ஏந்திய வில்லின் பெயர்; அக்கார அமுது - சர்க்கரைப் பொங்கல்; சதுர்முக வேதன் - நான்கு முகம் உடைய பிரமன்.

32. வீழ்ந்திருப்பார் - விரும்பித் தங்கியிருப்பவர்.

33. மாதிக்கு - பெருந்திசை; வெளி - ஆகாயம்.

34. மகன் - பிரகலாதன்; தூண் உதைத்தான் - இரணியன், வினையாலணையும் பெயர்; செம்பு அவிர் குழல் - செம்பு போல விளங்கும் கூந்தல்.

35. வாக்கு - வேதம், ஈசன் - தலைவன் - பிரமன்; ஆக்கினை - ஆணை; ஆய்ச்சி - இடைச்சி; இல் - வீடு.

38. தொழும்பன் - குற்றேவல் செய்யும் அடிமை.

39. சாவடி - பொதுமண்டபம்; கடிஅரவு - அச்சந்தரும் பாம்பு, கடி என்னும் உரிச்சொல் அச்சம் என்னும் பொருளில் வந்தது.

40 மாமகள் - திருமகள்

41. யுத்த ரங்கம் - போர்க்களம்.

43. காண்டிவம் - அர்ச்சுனன் ஏந்திய வில்லின் பெயர்; 'காண்டீவம்' என்பது செய்யுளோசை கருதிக் 'காண்டிவம்' எனக் குறுகி வந்தது.

44. செந்நீர் - இரத்தம்; ஆக்கை - உடம்பு.

45. பூழி - புழுதி; புவி - உலகம்; பூதங்கள் ஐந்து - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்; நானிலம் - உலகம்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு பெரும் பகுதிகளாய் அமைந்தது என்றபடி.

# 8. வாழுநர் கவிதைகள்

## 1. வரதராசர் தமிழ் விடுதூது

உலகம் உவந்தேத்தும் ஒண்டமிழே உச்சித்
திலகம் எனவிளங்கும் திருவே — நலந்திகழ் 1

முத்தமிழாய் நீபிறந்தாய் மூவேந்தர் தாம்வளர்க்க
இத்தரையில் நீசிறந்தே ஏற்றமுற்ருய் — நித்தலுமே 2

பாவேந்தர் பாடுகின்ற பாட்டுருவில் நீநிறைந்தாய்
நாவேந்தர் நெஞ்சில் நயந்துயர்ந்தாய் — தேவே நீ 3

பாடல் வகையாலே பாங்குறவே — நீமிளிர்ந்தாய்
ஆடல் வகையாலே ஆன்றுயர்ந்தாய் — தேடரிய 4

சித்திரமும் நீயாவாய் சிற்பவகை தாமாவாய
புத்தம் புதுக்கலையாய்ப் பூத்தமைவாய் — முத்தமிழே! 5

கூடல் நகரத்தில் கூடிப் புலவரெலாம்
நாடி யமர்ந்திருந்து நாட்டமுடன் — ஏடுகளில் 6

எண்ணற்ற உன்பெருமை எல்லாம் எழுதிட்டுக்
கண்ணிமைபோல் உன்றனையே காத்தளித்தார் —
[தண்ணளியே ! 7

பல்லா யிரங்காலப் பைந்தமிழின் மாண்புரைக்கும்
தொல்காப் பியமென்னும் தொன்னூலும் — பல்லுலகும் 8

ஏற்றம் எடுத்துரைக்கும் ஈடில் திருக்குறளும்
ஊற்றும் காப்பியங்கள் ஓரைந்தும் — சாற்றுபுகழ 9

எட்டுத் தொகைநூலும் எண்ணமிகும் பாட்டுமெனச்
சுட்டும் இவையணியாச் சூடிட்டாய் — பெட்டகமே ! 10

பிள்ளைத் தமிழ்முதலா பேசிடுந்தொண் ணூற்றுறு
கொள்ளும் வகைநூல்கள் கோலமுற்ருய் —
[தெள்ளமுதத் 11

தாயாய் விளங்குமெழில் தண்டமிழே நின்பாலே
சேயாய் மொழிபலவும் சேர்த்தனகாண் — ஓயாதே 12

நின்பெருமை சீர்வளமை நீணிலத்தே தாம்விரித்து
மன்பதைக்குச் சொல்லினர்காண் மாப்புலவர் —
[அன்னவர்தாம் 13

முன்னூறுதொல் காப்பியரே மூவாத நூலளித்த
தன்னிகரில் வள்ளுவரும் தாரணியில் — துன்னுபுலம் 14

நற்கபிலர் வன்பரணர் நாவலிமை நக்கீரர்
கற்கனியப் பாடுகின்ற கோவூரார் — சொற்பெருக்கும் 15

செப்புபெருஞ் சித்திரனார் சீரார் பெருங்கடுங்கோ
ஒப்பில் உயர்மோசி கீரனுமே — முப்புலத்துச் 16

சாத்தர் இளங்கோவும் சால்பார் திருத்தக்கர்
ஏத்திடும் கொங்குவேள் என்பாரும் — மூத்துரைசெய் 17

சீரிளம் பூரணனார் சேனா வரையருடன்
பேரா சிரியரெனும் பேரவரும் — கூரறிவு 18

செய்யபரி மேலழகர் சீர்த்திநச்சி னார்க்கினியர்
தெய்வச் சிலையார்பேர் தேர்ந்தவரும் — தெய்வமொழி 19

நாவுக் கரசரொடு ஞானப்பால் உண்டபிள்ளை
நாவலூரர் வந்ததிரு நம்பியுமே — பாவினிக்கும் 20

வாதவூர் வேந்தாக வந்தபெரும் மாதவராம்
வேத மொழிகாட்டும் வித்தகரும் — ஓதுமொழி 21

கம்பர் புகழேந்தி காளமே கப்புலவர்
உம்பர் புகழொட்டக் கூத்தரொடு — செம்புலமைச் 22

சேக்கிழார் சோதிமுனி சீர்வில்லி கச்சியப்பர்
வாக்கார் குமரகுரு வாய்மையரும் — வாக்கினிய 23

செம்மல் சிவப்பிர காசரெனும் சீர்மையரும்
மம்மரறு சீர்தாயு மானவரும் — செம்மனத்தால் 24

தேனார் அருட்பாக்கள் தித்திக்கப் பாடிநின்ற
வானார் வடலூரின் வள்ளலுமே — ஆனதமிழ்ப் 25

பாடி வளர்த்திட்ட பாவையருள் முன்னவராய்க்
கூடும் புகழவ்வைக் கோமாட்டி — நாடுபுலம் 26

பொன்முடியார் நப்பசலை பூதப் பாண்டிதேவி
நன்முல்லை வெண்குயத்தி நக்கண்ணை — இன்காக்கை 27

பாடினியார் மாசாத்தி பாரிமகள் ஆதிமந்தி
பீடுறுமிப் பெண்புலவர் தம்முடனே — பாடிநின்ற 28

இன்னவகை நற்கவிஞர் எண்ணற்ற பேர்பலர்நின்
பொன்னடிக்குப் பாமாலை போற்றிட்டார் —
[தொன்மொழியே! 29

— புலவர் ப. அரங்கசாமி

### 2. பாரதத்தாய்

மாமேவு கடல்சூழ்ந்த மாநிலத்தின்
திலகமென மகிழ்ந்து போற்றும்
பூமேவு கன்னியர்கள் பொதுவெனவே
ஒன்றிநிறை புதுமை நாடாம்
காமேவு பலதலங்கள் காணரிய
அற்புதங்கள் கலந்து நின்ற
நாமேவு பாரதத்தாய் நன்னாடு
இதன்பெருமை நவிலற் பாற்றோ!

— பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

### 3. வாயில் திறக்கட்டும்

கால முற்றினும் தாழ்திற வாதஎம்
கதவு தட்டுதல் யாரெனக் கேட்கிறாய்,
ஞால மென்றுரை கோன்தனில் வாழுநர்
நாளு முன்னெழில் நாடி நடந்தவர்
தூல மெய்யுடல் மண்ணிடை நிற்பினும்
தொலையும் நாளும் கடந்தெழு சிந்தையர்
நீல வெண்வெளி நீந்தி யதன்கரை
நீக்கி மேற்செலும் மாந்தர்யாம் தேவியே!

அறிவி யற்கலை யாவும் படைத்ததும்
அயர்தல் உண்ணல் மறந்தங் குழைத்ததும்
பொறியி யற்கலை ஊர்தி சமைத்ததும்
புறங்கள் ஊடறுத் தெங்கும் பறந்திடும்
நெறிமு யன்றதும் ஒன்றுபின் ஒன்றென
நிறைந்த பல்திரை நீக்கிமுன் னேறிடும்
வெறியி லின்பம் விழைந்ததும் எம்மினம்;
வீட்டின் வாயில் திறக்கட்டும் தேவியே!

— குலோத்துங்கன்
(வா. செ. குழந்தைசாமி)

### 4. மலையின் சிறப்பு

இருந்த இடத்தில் இருந்தென்றும்
எல்லா வுயிர்க்கும் இன்பூட்டும்
மருந்தும் மழையும் தந்தருளும்
மலைகள் இந்த மண்ணுலகில்

பொருந்தி யிருக்கும் பேரழகும்
பொன்னும் பொருளும் தருமழகும்
அருந்தி மகிழ அறியாதார்
அறியார் ! அறியார் ! அறியாரே !

—க. பெருமாள்

## 5 வாடிய மலர்

சோலையில் பூத்தாய் ! கண்டு
சொக்கினர் வளர்த்தா ரெல்லாம் !
வேலிக்குள் இருந்த போதும்
விழிக்குநீ விருந்தே யானாய் !
கோலஞ் செய் மலரே ! உள்ளக்
குளிர்மையே ! உனது வாழ்வு
மாலையின் அளவே ! வாழும்
மக்களேன் நினைப்ப தில்லை ? 1

கசங்கிய மலரே ! உன்னைக்
கண்டதும் இந்த நாட்டில்
கசங்கிய மலர்கள் சிந்தும்
கண்ணீரென் கண்முன் தோன்றும் !
கசங்கிய தெதனால் என்று
கருத்தூன்றிப் பாரா மக்கள்
கசங்கியே வாழ்த லன்றிக்
களிப்போடு வாழ்த லுண்டோ ? 2

—வாணிதாசன்

## 6. இயற்கைத் தாய்

தென்றலெனும் தொட்டிலிலே எனைக்கிடத்தித்
தேன்நுகர மலர்கள் தோறும்
சென்றிருந்து தமிழ் பாடும் வண்டொலியால்
செவிகுளிரத் 'தாலே தாலோ !'
என்றினிய தாலாட்டித் துயிற்றிடுவாள் ;
எழுந்தழுதால் ஆறு காட்டிக்
குன்றிருந்து வீழருவி கடல்காட்டிக்
கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி ! 1

### ஆறு

ஊர் மக்கள் வெறுத்தொதுக்கும் கழுநீர் எல்லாம்
ஓடிவந்து கலந்தாலும் மாசு நீங்கி
ஊர் விட்டு நீங்குகையில் தூய்மையாகி
ஊர்ந்து செலும் ஆறுகண்டு தமிழைக்
[காண்பாய் !
சார்பற்றுத் தனித்தியங்க வல்ல என்றன்
தமிழ்மொழியில் பிறமொழிகள் கலந்த போதும்
நேர்வுற்று மாசின்றி யியங்கும் பண்பை
நினைப்பூட்டும் ஆற்றுக்கு வாழ்த்துக் கூறு.

### இளந்தென்றல்

இதழ் விரித்து நகைகாட்டல் எனத் தென்றல்
இனிதாகச் செடிகள் மீது
மெதுவாகத் தடவஇதழ் விரித்தரும்பு
பல்காட்டும் ; மேலும் வண்டு
பதம்பாடச் செடிகொடிகள் நடமாடப்
பரிந்தவற்றை மணக்கும் தென்றல் ;
இது பிறந்த மலையெங்கள் தமிழகமே
எனும்போது சிலிர்க்கும் உள்ளம். 3

—முடியரசன்

### 7. நான்

சிந்தனை யென்ற கலப்பை கொண்டு
செய்ய தமிழாம் நிலமதனை
வந்தனை செய்தே உழுதுழுது,
வார்த்தைகளென்ற எருவுமிட்டு,
நிந்தனை யேன்ற வெதுகை மோனை
நீண்டவரம்பும் எடுத்துக்கட்டி
அந்தம் மிகுந்த கவிதைப் பயிர்
ஆக்கும் ஏழைப் பாட்டாளி நான்!

—கவி கா. மு. செரீப்பு

### குறிப்புரை

இந் நாளில் நம்மிடையே வாழ்ந்துவரும் கவிஞர் சிலருடைய பாடல்கள் 'வாழுநர் கவிதைகள்' என்னும் இப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. இவர்கள் ஆசிரியராயும், பேராசிரியராயும், புலவராயும், கவிஞராயும் விளங்கி வருபவராவர்.

## அருஞ்சொற்பொருள்

**(1) வரதராசர் தமிழ்விடு தூது:** 1. உவந்தேத்தும் - மகிழ்ந்து புகழும்; திலகம் - நெற்றிப் பொட்டு; 2. முத்தமிழ் - இயல், இசை, நாடகம்; மூவேந்தர் - சேர சோழ பாண்டியர்; 6. கூடல் - மதுரை; 8. தொன்னூல் - பழைய நூல், 9. காப்பியங்கள் ஓரைந்து - ஐம்பெருங் காப்பியங்கள் : சிலப்பதிகாரம், மணிமேகலை சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி. 10. பாட்டு - பத்துப் பாட்டு; 11 பிள்ளைத் தமிழ் - தெய்வத்தையோ மக்களையோ குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெறும் பிரபந்தவகை; இது போன்ற சிறு பிரபந்தங்கள் 96 வகை என்பது ஒரு வழக்கு. கோலம் - அழகு; 12. சேய் - குழந்தை; கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிறந்தவை என்பர். 13. மன்பதை - உலக மக்கள்; 14. தாரணி - உலகம்; 15. கோவூரார் - கோவூர் கிழார்; இதிலும் அடுத்த கண்ணியிலும் கூறப்படுபவர்; சங்கப்புலவர் ஆவர். 17. சாத்தர் - மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர்; இதில் காப்பியப் புலவர்கள் குறிக்கப்படுகின்றனர். கொங்குவேள் - பெருங்கதை என்னும் காவியம் பாடியவர்; 18-19. இக் கண்ணிகளில் இளம் பூரணர் முதலிய உரையாசிரியர்கள் குறிக்கப்பட்டுள்ளார்கள். சீர்த்தி - மிகு புகழ். 20-21. சைவ சமயாச்சாரியர் நால்வரும் குறிப்பிடப் படுகின்றனர். ஞானப்பால் உண்ட பிள்ளை - திருஞான சம்பந்தர், நம்பி - சுந்தரர்; வேதமொழி காட்டும் வித்தகர் - மாணிக்கவாசகர். 22 - 25. இராமாயணம் பாடிய கம்பர் முதல் திருவருட்பா வழங்கிய இராமலிங்க சுவாமிகள் வரையில் பிற்காலப் புலவர் பலர் குறிக்கப்படுகின்றுர்கள். உம்பர் - தேவர்; சோதிமணி - திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர்; வில்லி - பாரதம் பாடிய வில்லிபுத்தூரர்; மம்மர் - மயக்கம்; வடலூரின் வள்ளல் - இராமலிங்க சுவாமிகள். 26 - 28. அவ்வையார் முதலிய பெண்பாற் புலவர்கள் குறிக்கப்பட்டுள்ளார்கள்; 29. தொன்மொழி - பழமையான மொழி, தமிழ்.

**(2) பாரதத் தாய்:** மாநிலம் - உலகம்; கா - சோலை; நா - நாக்கு; நவிலற்பாற்றோ - சொல்லும் தன்மையதோ; 'ஓ' வினு.

**(3) வாயில் திறக்கட்டும்:** 1. தாழ் - தாழ்ப்பாள்; ஞாலம் - உலகம்; கோள் - கோளம்; 2. யாவும் - எல்லாம்; பொறியியற்கலை - யந்திர நுட்பம் உணர்த்தும் சாத்திரம்; ஊர்தி - வாகனம்; சமைத்தது - செய்தது; ஊடறுத்து - இடையே பிளந்து; வெறி - விரைவினுல் உண்டாகும் மயக்கம்; விழைந்தது - விரும்பியது.

**(4) மலையின் சிறப்பு :** இன்பூட்டும் - இன்பம் செய்யும் ; மருந்து - மருந்திற்குப் பயன்படும் பச்சிலை, வேர் முதலியன. அருந்தி - உண்டு ; இங்கே அனுபவித்தலைக் குறிக்கும்.

**(5) வாடிய மலர் :** 1. சொக்கினர் - ஈடுபட்டு வியந்து நின்றார்; கோலம் - அழகு; மாலை - மாலைக்காலம். 2. கசங்கிய மலர்கள் - துன்பத்தால் வருந்திய மக்கள்; உருவகம்; களிப்பு - மகிழ்ச்சி.

**(6) இயற்கைத்தாய் :** 1. தாலே தாலோ - தாலாட்டுப் பாடல் இசைப்பார் கூறும் சொல்லடுக்கு; துயிற்றுடுவாள் - தூங்கவைப் பாள். 2. கழுநீர் - சாக்கடைநீர்; மாசு - அழுக்கு; சார்பற்று - பிற மொழிகளின் தொடர்பு இன்றி. 3. பதம் - இசைப்பாடல்; பரிந்து - அன்பு கொண்டு; இது பிறந்த மலை - தென்றல் தோன்றிய மலை; பொதிய மலை.

**(7) நான் :** வந்தனை செய்து - வணங்கி; வரம்பு - எல்லை; பாட்டாளி - தொழிலாளி, பாடுபவன் என்னும் இருபொருளும் இங்கு அமையும்.

# உரைநடைப் பகுதி

## 1. கடல் கடந்த தமிழ்

[மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்]

சீவக சிந்தாமணியை நான் பதிப்பித்த பின்னர்த் தமிழிலக்கியங்களில் அன்புடையவர்கள் பலருடைய அன்பும் ஆதரவும் எனக்குக் கிடைக்கலாயின. எதிர் பாராத இடங்களிலிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்தன. அதனால் எனக்குத் தமிழ் நூலாராய்ச்சியில் தீவிரமான ஊக்கம் உண்டாயிற்று.

சிந்தாமணியின் முதற்பதிப்பு 1887-ஆம் வருஷம் வெளிவந்தது. தமிழுலகத்தில் அந்த நூல் உண்டாக்கிய இன்பக்கிளர்ச்சிக்கு அடையாளமாகப் பல கடிதங்கள் என்பால் உள்ளன.

1891 - ஆம் வருஷம் ஏப்ரில் மாதம் அயல் நாட்டிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் பாரிஸ் நகர முத்திரையிருந்தது. அதன் மேல்விலாஸம் தமிழிலும் இங்கிலீஷிலும் எழுதப்பட்டிருந்தது. பாரிஸிலிருந்து தமிழெழுத்து வந்ததென்றால் யார் வியப்பை யடையாமல் இருப்பார்கள்? அந்தக் கடிதத்தை ஆவலுடன் திறந்து பார்த்தேன். கடிதம் முழுவதும் தமிழாக இருந்தது; எனக்கு மேலும் ஆச்சரியமுண்டாயிற்று. அந்தக் கடிதத்தின் தலைப்பில் ஒரு புதிய செய்யுள் இருந்தது; அதைப் பார்த்தபோது எனக்கு அளவற்ற ஆச்சரியம் உண்டாயிற்று. அந்தக் கடிதம் வருமாறு:

Societe Historique

Cercle St. Simon

Paris la April 3d 1891.

ம- ள - ஸ - ஸ்ரீ சாமிநாதையரென்னும் பெரும்புகழ் பொருந்திய தமிழாசிரியராம் மகா சிறப்பிற் புலவர்தமக்கு நாம் பாரிசு மாநகரத்தில் தமிழாசிரியர் எழுதுமவை யாவன :

**வெண்பா**

*சிந்தா மணியாஞ் சிறப்புடைய காப்பியமே*
*பொன்ருதின் மாலே பொருந்திவரக் — கண்டேன்*
*சிலப்பதி காரமுதற் சீர்நூல்கள் நான்கு*
*மளித்தலா மென்மி ரறைந்து.*

நீர் 1887 ஆண்டி லச்சிற் பதிப்பித்த சிந்தாமணியைக் கண்டு மிகவு மதிசயமாயிருந்தோமென்றும் நீர் செய்தவுலகோர்க்குப் பெரியவுபகார மறிந்தோமென்றும் இன்னம் பழைய புத்தகங்க ளச்சிற் பதிப்பித்தற் குரியவா யுண்டென்றும் உமக்கு நாமெழுத வேண்டுமென் றெண்ணிக் கொண்டு வருகிறேமாதலால் மிகவுங் களிகூர்ந்து வாழ்வோ மெப்போதென்ருல் சிலப்பதிகாரம் மணி மேகலே குண்டலகேசி வளேயாபதியென்னும் வேறு நாற்பெருங் காப்பியங்கள் பரிசோதித்துக் கொடுத்த வப்போதே சொல்லு வோம்.

சிலப்பதிகாரமோ வென்ருல் சென்னப்பட்டணத்தில் முன் 1885 லூத்தில் அதின் முதற் காண்டம் உரையின்றிக் கொடுத் தார்களென் றறிகின்றே மாஞு லிரண்டாமும் மூன்றுமும் தருக வென்று பல விசேடமா யறவிய மனத்த ரெல்லோருங் கேட்போம்.

மணிமேகலேயோவென்ருல் நங்கட்கண் ஒரு கையெழுத்துப் பிரதியுண்டு. ஆஞு லந்தப் பிரதியெழுதியவன் பழையவெழுத்துக்க ளறியாதபடியினுலே சில கவிகளும் வார்த்தைகளு மெழுதாமல் விட்டான். ஆதலினுலந்தப் பிரதி படித்தற்குரியதல்லது.

சிறப்புப் பொருந்திய நூலவைக ளச்சிற் பதிப்பித்தலின்றி விட்டாற் கையெழுத்துப் பிரதிக ளடைக்கலாமோவென்று கேட்கிறேம். இங்குதான் பர்ரிசு மாநகரத்தில் printing type உண்டு. இதுவுமல்லாமல் French பாடைக்குத்திருப்பி யாவர்க்கும் பயன்செய்ய அளிக்கக் கூடுமென்று முமக்கு நாமெழுதுகின்றேம்.

எம்முடைய புன்றமிழை உம்முடைய தயையினுலே வாசித் துக் கொண்டால் ஒரு காகித மெமக்கு மறுபடி யனுப்பினுல் மிகவுஞ் சந்தோடமா யிருப்போம்.

சுவாமியுடைய கிருபையெல்லா மும்மேல் வருகவென்று உங்கள் colleague and servant ஆயிருக்கிறேம்.

Prof. J. Vinson.

பிரெஞ்சு தேசத்தில் உள்ள ஒருவரிடம் தமிழன்பு எவ்வளவு ஊறியிருக்கின்ற தென்பதை இக்கடிதம் நன்ருக வெளிக்காட்டியது. அவர் சீவக சிந்தாமணியைப் படித்து மிக்க இன்பத்தை அடைந்திருந்தார். அதனேடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்னும் நான்கும் வெளிவந்தால்தான் பூரணத்திருப்தி உண்டாகுமென்று இக்கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார்.

இதனை எழுதிய ஜூலியன் வின்ஸோனென்பவரை முன்பு நான் அறியேன். அவராக வலிந்து பாராட்டி எழுதினர். அவருடைய கடிதத்தில் உள்ள அன்புரைகள் என் உள்ளத்தைக் குளிர்வித்தன. பாரிஸிலும் தமிழ்ச் சுவடிகள் உள்ளன என்பதை அதிற் கண்டேன். உடனே அவருடைய கடிதத்திற்குப் பதில் எழுதினேன். அந்நகரத்தில் என்ன என்ன ஏட்டுச்சுவடிகள் உண்டென்று விசாரித்திருந்தேன். அவர் எவ்வாறு தமிழ் படித்தாரென்பதையும் எழுதும்படி வேண்டினேன்.

அவர் எழுதிய மற்ரெரு கடிதத்தால் பாரிஸ் நகரத்திலுள்ள பெரிய புத்தகசாலையில் ஆயிரம் தமிழ்க் கையெழுத்துப்பிரதிகள் இருப்பதாகத் தெரிய வந்தது. தமிழ், கடல் கடந்து சென்று அங்கும் அன்பர்களைப் பெற்றிருப்பதை நினைந்து மகிழ்ச்சியுற்றேன்.

ஜூலியன் வின்ஸோனுடைய தந்தையார் காரைக்காலில் ஜட்ஜாக இருந்தாரென்றும் அக்காலத்தில் வின்ஸோன் தமிழ் படித்தாரென்றும் தெரிய வந்தது. வின்ஸோன் பாரிஸ் ஸர்வகலா சாலையில் கீழ்நாட்டுப் பாஷைகளுக்கு ஆசிரியராக இருந்து விளங்கினர்.

நான் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் அச்சிடும் பொருட்டு ஆராய்ச்சி செய்துவந்தேன். அந்நூல்களின் உரைச் சுவடிகள் பாரிஸில் கிடைக்குமாவென்று கேட்டிருந்தேன். அதற்கு அவர் எழுதிய பதில் வருமாறு :

Paris la May 7th 1891.

எனதன்பிற்குரிய மகா சாஸ்திரிகளே,

நாம் போன மாச முமக் கெழுதின காகிதம் உங்கிட்ட வந்ததுக்குமுன்னே நீர் எமக்கனுப்பிய காகித மடைந்தது—அதில் நீர் சிலப்பதிகார மச்சிற் பதிப்பித்தற்குரிய தென்றும், அதைப் பரிசோதித்துக் கொண்டு வருகிறே னென்றும், கண்ட பிரதிகளி லுரை தப்பியிருக்கிற தென்றும் இங்கு பெரிய புத்தகசாலையிற் சிலப்பதிகாரத்தொரு கையெழுத்துப் பிரதியுண்டோ வென்றும் கேட்கிறீர்

அதுக் குத்தரங் கொடுக்க வருகிறோம்.

Bibliothique Nationale என்கிற பெரிய புத்தகசாலையி லிருக்கின்ற ஓராயிரந் தமிழ்க்கையெழுத்துப் புத்தகங்களெமக்கு நன்றாய்த் தெரியும். அவைகளின் list or catalogue பண்ணினோ மானால் அவற்றுள் சிலப்பதிகாரம் இல்லை.

பழைய புத்தகங்களோ வென்றால் அந்த சாலையிலே மணி மேகலை ஒரு கையெழுத்துப் பிரதியுண்டு. ஆனால் நாம் போன மாசம் எழுதிய காகிதத்திற் சொன்னபடி அந்தப் பிரதியில் பற்பல கவியும் வார்த்தையு மெழுதாமல் விட்டிருக்கின்றது. அந்தப் பிரதியிலு மூலமாத்திர முறையின்றி வருகின்றது. அது ஓலைப்பிரதி யாகும். நாம் அதைக் கடுதாசியிலெழுதினோம், நங்கட் சிறு புத்தக சாலையிலே வைக்க. ஆதலால் நீரதைப் பார்க்க வேண்டுமேல் அந்தக் கடுதாசிப்பிரதி யனுப்புவோம். நீரதைக் கண்டு மில்லாத கவிகளும் வார்த்தைகளும் போட்டுத் திருப்பியனுப்பலாம்.

நாமிங்குத் தமிழைப் படித்தோ மல்ல. நாம் பிள்ளையா யிருக்கும் போது எங்கடகப்பனார் காரைக்காலிலே French Judge ஆயிருந்தா ரப்போதே தமிழைப் பேசவு மெழுதவும் படித் தோம் இங்கு நாம் செய்த சில கவிகளுமக்கு அனுப்புகின்றோம்.

இங்ஙனம்,

அன்புடையவன்

Julien Vinson

உரை குறையதாயினுஞ் சிலப்பதிகார மச்சிற் பதிக்கவேண்டும்!!

இக்கடிதத்தைக் கண்டவுடன் மணிமேகலையிற் சில பகுதிகள் எழுதியனுப்பவேண்டுமென்று அவருக்கு எழுதினேன். அவர் மிகவும் சிரத்தையோடு அந்நூலிலுள்ள பதிகத்தை மாத்திரம் எழுதியனுப்பினார். முற்றும் எழுதி அனுப்ப ஸித்தராக இருந்தார். பார்த்தவரையில் அந்தப் பிரதி என் ஆராய்ச்சிக்கு உதவியாக இராதென்று தோற்றியதால் அவரை மேலும் சிரமப்படுத்துவதை நிறுத்திக்கொண்டேன். அவர் அனுப்பிய பாட்டுகள் இலக்கணப் பிழையின்றி இருந்தன.

அப்பால் அவர் எனக்கு எழுதிய கடிதங்கள் பல. ஒவ்வொரு கடிதத்திலும் பழைய தமிழ் நூல்கள் வெளிவர வேண்டுமென்பதில் அவருக்கிருந்த ஆவலைப் புலப்படுத்துவார். பிரெஞ்சு பாஷையில் அவைகளை மொழிபெயர்க்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம்.

சிந்தாமணியின் சுருக்கமொன்றைப் பிரெஞ்சு பாஷையில் எழுதியிருந்தார். அப்புத்தகத்தை அவர் எனக்கு அனுப்பினார். அதை நான் இங்கிலீஷ்ப் புத்தகமென்றெண்ணிக் காலேஜ் ஆசிரியராக இருந்த ஸ்ரீ ஸாது சேஷையரிடம் காட்டினேன். அவர் அது பிரெஞ்சு பாஷையென்றும் பிரின்ஸிபாலுக்குக் காட்டினால் படித்துச் சொல்வாரென்றும் கூறினார்.

உடனே அதைப் பிரின்ஸிபாலாக இருந்த பில்டர்பெக் துரை அவர்களிடம் காட்டினேன். அவர் அதில் என்னைப் பாராட்டி எழுதியிருப்பதை எடுத்துக்கூறி, "உங்களால் இந்தக் காலேஜுக்கு ஒரு கௌரவம்" என்றார். தமிழ்நாட்டிலே பிறந்து தமிழ்க் கல்வி யுடையாரோடு பழகித் தமிழாராய்ச்சி செய்து வருவதில் எனக்கு ஆச்சரியம் ஒன்றும் புலப்படவில்லை. அயல் தேசத்தில் ஒரு துணையு மின்றித் தமிழ் ஆராய்ச்சி செய்து வரும் ஜூலியன் வின்ஸோ னுடைய தமிழன்புதான் எனக்கு மிகச் சிறந்ததாகத் தோற்றியது.

என்னுடைய நூற்பதிப்புக்களை மிக்க அன்போடு வின்ஸோன் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார். அடிக்கடி என்ன என்ன வேலை நடந்து வருகிறதென்று விசாரித்து எழுதுவார். நான் அனுப்பும் புதிய புத்தகங்களை உடனே ஆழ்ந்து படித்து மகிழ்ந்து என் முயற்சியைப் பாராட்டி வரைவார். இன்ன இன்ன விஷயங் களை நூதனமாக அறிந்துகொண்டேனென்று தெரிவிப்பார்.

சிலப்பதிகாரப் புத்தகம் எப்பொழுது வெளிவருமென்று அடிக்கடி கேட்டுவந்தார். அது வெளி வந்தவுடன் அவருக்கு அனுப்பினேன். அதைக் கண்டு அவர் அடைந்த இன்பத்துக்கு எல்லையில்லை. என்னைப் பாராட்டி அகவலாக ஒரு கடிதம் எழுதினார். அது வருமாறு :

உ

குருவே துணை

(ஆசிரியப்பா)

இளங்கதிர் ஞாயி றிருடொறு நீக்கியபின்
விளங்கிடைச் சங்கெறி வெண்டிரைக் கடல்சூழ்
மாநில மதனில்வாழ் மறைமிகு சோழப்
பூநிலத் தலர்ந்த புகார்நக ரத்துக்
கோவலன் கண்ணகிதங் கூறரு மன்பொடு
பாவல முடையாட்குப் பற்பொருட் பரத்தலு
மாங்கவன் றுயரமு மணிகிளர் சிலம்பு
வாங்குபு போயது மதுரை யிற்கொலைப்

படலு முதலிய பன்றதருஞ் சரிதை
யடல்வினைப் பயனெறி யமைபொரு ளின்பம்
வீடெனயாந் தெளிவுற வின்மொழிக் காப்பியஞ்
சிலப்பதி காரஞ் சிறந்த பெயரா
லுலகெலா மறிய வொளிதரு சென்னைக்கண்
ணச்சிட வளர்த்தீ ரடைந்த பெரும்புகழ்
மாசிலா நாமகண் மதிதெரிந் திசைக்கு
மொருபே ரகத்திய னுருக்கொண்டு
மருளுடை மண்மிசை வந்துதோன் றினனென.

புறநானூற்றைப் பார்த்து, அதன் முகவுரையில் எட்டுத் தொகைகளைப்பற்றி நான் கொடுத்திருந்த செய்திகளைப் படித்து வியப்புற்றார். அதுகாறும் எட்டுத்தொகை நூல்களைப்பற்றிய செய்தி விளக்கமாகத் தெரியாமல் இருந்தது. அவற்றில் ஒன்றாகிய பரிபாடலைப் பதிப்பிக்கும் செலவைத் தாமே ஏற்றுக் கொள்வதாக வின்ஸோன்துரை எழுதினார்

கடல் கடந்து சென்ற தமிழ்ச் சுவடிகளில் அரிய நூல்கள் எவையேனும் இருக்குமென்பது என் கருத்து. ஆயிரம் பிரதிகளில் என்ன என்ன நூல்கள் உள்ளனவோவென்று சிந்தித்தேன். என் பிரெஞ்சு நண்பர் சில நூல்களின் பெயர்களை எழுதி அனுப்பினார். வில்லைப்புராணம் என்று ஒன்று இருப்பதாக ஒருமுறை எழுதினார். நான் அதைப்பற்றிப் பின்னும் விசாரித்தேன். அவர் அது 494 செய்யுட்களை யுடையதென்றும் இன்ன இன்ன சருக்கங்களையுடைய தென்றும் எழுதியிருந்தார். அதுமட்டுமா ? அந்தப் புத்தகத்தைப் பற்றி நான் கேட்டு எழுதியிருந்த வாக்கியங்களால் எனக்கிருந்த ஆர்வத்தை அறிந்து தம் கைப்பட அந்நூல் முழுவதையும் எழுதி அனுப்பினார்.

ஏட்டுச்சுவடியைப் பார்த்து எழுதுவது எவ்வளவு சிரமமென்பது எனக்கு நன்றாகத் தெரியும். தமிழ்நாட்டில் அங்ஙனம் எழுதக் கூடியவர்கள் மிகச் சிலரே. தமிழ் நூல்களைச் சிரத்தையோடு படிபபவர்களே அதிகமாக இல்லாதபோது ஏட்டுச் சுவடியைப் படிப்பதாவது ! பார்த்து எழுதுவதாவது!

இந்த நிலையில் பாரிஸிலிருந்து கடல் கடந்து வந்த வில்லைப் புராணத்தை நான் புதையலெடுத்த தனம் போலவே கருதினேன். என் நண்பர் அதை எத்தனை சிரத்தையோடு எழுதியிருந்தார்! அதன் தலைப்பில் சிவலிங்கத்தின் உருவமும் நந்தியுருவமும் வரைந் திருந்தார். அப்பால் அந்தப் பிரதியைக் கொண்டு வேறொரு பிரதி எழுதச் செய்து, வின்ஸோன் துரைக்கே அவரது பிரதியை அனுபபி விட்டேன்

வில்லைப்புராணத்தை அதுகாறும் நான் படித்ததில்லை; கேட்டதுமில்லை. அப்புராண ஏடுகளும் எனக்குக் கிடைக்கவில்லை. அதைப் படித்துப் பார்த்தபோது வில்வ வனமென்னும் தலத்தின் புராணமாகக் காணப்பட்டது. வில்வமென்பது வில்லமென வழங்கும். வில்வ வனமென்பது வில்லவனமென மாறி அது மருவி வில்லையாயிற்றென்று தேர்ந்தேன். தமிழ் நாட்டில் எவ்வளவோ வில்வ வன ஸ்தலங்கள் இருக்கின்றன. எந்த வில்வவனத்தைப் பற்றிப் பாராட்டுவது அந்நூலென்று எனக்கு விளங்கவில்லை. மேலும் மேலும் விசாரித்துக்கொண்டே இருந்தேன்

அப்புராணத்திலுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றிலிருந்து (பாயிரம். 10) அங்கே எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமம் குயிலம்மையென்று தெரிய வந்தது. அப்போது,

"பக்குவ மாகக் கவிநூறு செய்து பரிசுபெற
முக்கர ணம்மெதிர் பல்காலும் போட்டு முயன்றிடினும்
அக்கட போவெனும் லோபரைப் பாடி யலுத்துவந்த
குக்கலை யாண்டருள் வில்வ வனத்துக் குயிலம்மையே"

என்ற தனிப்பாடலும் ஞாபகத்துக்கு வந்தது. அந்தத் தனிப் பாடல் வில்லைப் புராணத்திற்குரிய தலத்தைப் பற்றியதென்று நிச்சயித்தேன். அப்பால் என்னுடைய நண்பர்கள் மூலமாக விசாரித்து வந்தேன். புதுச்சேரிக்கு அருகில் உள்ள வில்வநல்லூர் அம்பிகையின் பெயர் கோகிலாம்பிகையென்று தெரியவந்தது. அவ்வூர்ப் புராணம் கிடைக்குமாவென்று தேடச்செய்தேன். நல்ல காலமாகச் சில பிரதிகள் கிடைத்தன; அவற்றைக் கொண்டு, கடல் கடந்து வந்த பிரதியைச் செப்பஞ் செய்து கொண்டேன்.

அந்தப் புராணம் கவி வீரராகவ ரென்பவரால் இயற்றப் பெற்றது. நல்ல வாக்காக இருந்தது. ஒருமுறை புதுச்சேரிக்குச் சென்றபோது, அதனருகில் வில்வநல்லூர் இருப்பதை அறிந்து அங்கே சென்று ஆலயதரிசனம் செய்தேன். அது மிகப் பழைய தலமாக இருக்கவேண்டுமென்று தோற்றியது. அந்தத் தலத்தைப் பற்றி ஏதேனும் தெரியுமாவென்று பலரை விசாரித்தேன். ஒரு மூதிய வீரசைவர், "இது மிகப் பழைய தலம். தேவாரத்தில் வரும் வில்வேச்சரமென்னும் வைப்புஸ்தலம் இதுதான்" என்றார் நான் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன்.

வில்வவனத்தைப் பற்றி நான் அறிந்த விஷயங்களை வின்ஸோன் துரைக்குப் பிறகு எழுதினேன் அவர் மகிழ்ச்சியடைந்தார். அவர் தமிழ் இலக்கணமொன்று (Tamil Manual) எழுதினார். அதை எனக்கு அனுப்பினார்.

ஒரு முறை அவர் திருக்குறள், காமத்துப்பாலின் பிரெஞ்சு மொழி பெயர்ப்புப் புத்தகமொன்றை அனுப்பி, 'இதனை என் மாணவர் ஒருவர் மொழி பெயர்த்தார் நான் முகவுரை எழுதி யிருக்கிறேன்' என்று எழுதினர். தமிழாராய்ச்சியாளராக இருப்ப தோடு தமிழ்ப் போதகாசிரியராகவும் அவர் இருப்பதை அப்போது உணர்ந்தேன். அவருடைய மாணுக்கர் புதுச்சேரிக்கு வந்திருக்கிறு ரென்றும் என்னைப் பார்க்க வருவாரென்றும் எழுதினர். அம் மாணுக்கர் பெயர் பொண்டெனூ (Marquis De Barrique Fontai-nieu) என்பது.

1902-ஆம் வருஷம் அம்மாணுக்கர் இந்நாட்டில் நடைபெற்ற கீழ்நாட்டுக் கலைஞர் மகாசபையின் பொருட்டு (Orientalists' Congress) வந்திருந்தார். அப்பொழுது கும்பகோணத்துக்கு வந்தார். அவர் கும்பகோணத்தில் என் வீடடை விசாரித்துக் கொண்டு வரும்போது போலீஸார் அவரை வேற்றுநாட்டு ஒற்ற ரென்றெண்ணிப் பிடித்துப் பாதுகாப்பில் வைத்து விட்டார்கள் அது போயர் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம். சிறைப்பட்ட பிரெஞ்சுக்காரர் அக்காலத்தில் கும்பகோணத்தில் ஸப்கலெக்டராக இருந்த வைபர்ட் துரை யென்பவருக்கு ஒரு கடிதமெழுதித் தாம் இன்னரென்பதையும் தாம் வந்த காரியம் இன்னதென்பதையும் தெரிவித்தார். அவர் பிரெஞ்சு பாஷை தெரிந்தவர் கடிதம் கண்ட உடனே அவரே நேரில் வந்து பிரெஞ்சுக் கனவானை விடுவித்துத் தம் விருந்தினராக இருக்கச் செய்தார்.

அப்பால் பொண்டெனூ சிலருடன் என்னுடைய வீட்டிற்கு வந்தார். ஜூலியன் வின்ஸோனைப் பற்றி அவர் மிகவும் மதிப் பாகப் பேசினர். என்னிடம் அவ்விருவர்களுக்கும் உள்ள பேரன்பு அவருடைய சம்பாஷணையால் விளங்கியது.

நான் ஒரு வீட்டின் முன்புறத்தில் ஒரு கொட்டகை அமைத்துக் கொண்டு அங்கே என் ஆராய்ச்சிகளை நடத்தி வந்தேன். பொண் டெனூ வந்தபோது என்மேல் வெயில் அடித்தது; அவர்மேலும் அடித்தது. அவர், "இந்தமாதிரி இடத்தில் இருக்கிறீர்களே! வேறு நல்ல இடத்தில் இருந்து வேலை செய்யக்கூடாதா?" என்று கேட்டார். நான், "என்னுடைய நிலைக்கு இதுதான் முடியும். இந்தத் தேசத்தில் இந்த நிழல் கூட இல்லாமல் அவஸ்தைப்படும் வித்துவான்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். என் இளமையில் மரத்தடியிலும் வீட்டுத்திண்ணையிலும் இருந்து படித்துவந்த மகா வித்வான்களைப் பார்த்திருக்கிறேன்" என்றேன். இவ்விஷயம் அவருக்கு மிகவும் புதுமையாக இருந்தது. அவரோடு நெடு நேரம்

பேசினேன். தாம் போகும் மகாசபையில் ஏதேனும் ஒரு பழைய தமிழ் நூலைப்பற்றிய கட்டுரை ஒன்றைத் தாம் வாசிக்க விரும்புவதாகவும், அதற்கேற்ற பழைய நூற்பிரதி ஒன்று உதவினால் நலமாக இருக்குமென்றும் கூறினார். நான், வெளிப்படாமலிருந்த பழைய காஞ்சிப் புராணத்தைத் தருவதாக வாக்களித்தேன். அவர் தம் செலவில் அதன் பிரதி ஒன்று எழுதச்செய்து கொடுத்தால் அநுகூலமாக இருக்குமென்று சொன்னார். அப்படியே செய்வதாக நான் கூறினேன். அப்பால் அவர் தஞ்சை சென்று அங்கிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அது வருமாறு :

தஞ்சாவூர்

6 அக்டோபர், '02

ம-௱-௱ ஸ்ரீ சாமிநாதய்யரவர்களுக்கு அனேக வந்தனம்.

நான் கும்பகோணத்தை விட்டுப் புறப்படும் போது உங்களுக்கு விடுமுறை நாள் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் தங்களைச் சிரமப்படுத்த எனக்கு மனதில்லை.

ம-௱-௱-ஸ்ரீ கலெக்டர் வீட்டில் நான் விருந்துண்ணும்போது உங்களைக் கீர்த்தியால் அறிந்து அதிக மதிப்பு வைத்திருக்கும் கலெக்டர் துரையவர்களைத் தாங்கள் எனக்குக் காட்டிய பழைய காஞ்சிப் புராணத்தை என்னுடைய செலவில் காபியெடுக்கத் தங்களைக் கேட்கும்படி பிரார்த்தித்துக்கொண்டேன். நான் அந்தப் புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த மாட்டேனென்கிற நம்பிக்கை தங்களுக்கு இருக்கலாம்.

அதின் சாராம்சத்தை அறிந்து கீழ்நாட்டுப பாஷைகளை ஆதரிக்கும் சங்கத்துக்கு (Orientalists' Congress) எழுத எண்ணமே தவிர வேறு எண்ணங்கிடையாது. இந்த அருமையான அச்சிடாத புஸ்தகத்தை தாங்கள் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்தீர்களென்றும் அதின் அசல் தங்களிடத்தில் இருக்கிறதாகவும் வெளிப்படுத்துவேன்.

நான் தங்களை சிநேகிதரும் என் உபாத்தியாயருமாகிய ம-௱-௱ ஸ்ரீ வின்சோன் துரை (J. Vinson) பேரைச் சொல்லித் தங்களைப் பார்க்க வந்தபோது என்னை எவ்வளவு அன்பாய் அங்கீகரித்தீர்கள்! என்றால் தங்களை யான் கேட்கும் புராணத்தின் காபியைத் தருவீர்களென்று நம்புகிறேன்.

சாஸ்திரங்களை ஓங்கச் செய்யவும் அழகிய தமிழ்ப்பாஷையின் பெருமையை வெளிப்படுத்தவுமே இந்த உபகாரத்தைத் தங்களிடம் கேட்கிறேன்

தங்களுடைய அபிமானத்தை எதிர்பார்க்கும்,
(Marquis De Barrique Fontainieu)

நான் மதுரை இராமேசுவரம் போய்த் திரும்புகையில் கும்பகோணம் வருகிறேன் தாங்கள் எனக்கு எழுதவேண்டுமானல் புதுச்சேரிக்குக் கடிதம் எழுதவும். அங்கிருந்து எனக்கு வந்து சேரும்.

அவர் விரும்பியபடி பழைய காஞ்சிப்புராணத்தைப் பிரதி செய்ய இயலவில்லையாதலின் என்னிடமுள்ள காகிதப்பிரதியையே அனுப்பினேன். அவர் அதனை உபயோகித்துக் கொண்டு எனக்குத் திருப்பியனுப்பிவிட்டார்.

என்னை வந்து பார்த்ததையும் காஞ்சிப்புராணம் பெற்றது முதலியவற்றையும் தம்முடைய ஆசிரியராகிய வின்ஸோன் துரைக்கு அவர் எழுதியிருந்தார். அவற்றை அறிந்த அவ்வாசிரியர் எனக்குத் தம் மாணக்கரைப்பற்றி எழுதினர்.

ஸ்ரீ பொண்டெனூ தம் கடிதத்தில், 'உங்களைக் கீர்த்தியால் அறிந்து மதிப்புவைத்திருக்கும் கலெக்டர் துரையவர்கள்' என்று குறிப்பித்திருக்கிறர். அதை நான் முதலில் நன்ருகக் கவனிக்கவில்லை. ஆனல் இரண்டு மாதங்களுக்குப் பிறகு 1903-ஆம் ௵ ஜனவரி மாதம் தஞ்சாவூர்க் கலெக்டரிடமிருந்து, பட்டங்கள் கொடுக்கும் தர்பாருக்கு வரும்படி எனக்கு அழைப்புக் கடிதம் வந்தது. நான் போனேன். நான் எதிர்பாராதபடி அரசாங்கத்தார், நான் பழைய ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து வருவதை நன்கு மதித்து ஒரு நன்மதிப்புப்பத்திரம் (Certificate of merit in recognition of researches and work in connection with ancient Tamil manuscripts) அளித்தனர். அதனைக் கலெக்டர் துரை வழங்கினர். பொண்டெனூ என்னைப்பற்றிச் சிறப்பித்துப் பேசியதன் விளைவென்றே நான் அதனைக் கருதினேன். எனக்கு அரசாங்கத்தார் முதன் முறையாகத் தந்த அந்தச் சிறப்பை நன்றியறிவுடன் ஏற்றுக் கொண்டேன்.

எதிர்பாராதபடி இவ்விரண்டு பிரெஞ்சு நண்பர்களுடைய நட்பு எனக்குக் கிடைத்தது. அவர்களிடமிருந்து 1910-ஆம் வருஷத்திற்குப்பின் எனக்குக் கடிதம் கிடைக்கவில்லை. அவர்களைப்

பற்றி அறிந்துகொள்ளவும் இயலவில்லை. ஆனாலும் வில்லைப் புராணத்தையும், பழைய காஞ்சிப் புராணத்தையும் பார்க்கும் போதெல்லாம் பிரெஞ்சு தேசத்துத் தமிழாசிரியரையும் தமிழ் மாணவரையும் நினைக்கிறேன். இரண்டு நூல்களும் இன்னும் வெளிப்படவில்லை. நாற்பது வருஷங்களாக அவை என்பால் உள்ளன.

ஜூலியன் வின்ஸோன் இப்பொழுது இருந்தால் அவற்றை வெளிப்படுத்த வேண்டுமென்று நூறு கடிதங்களாவது எழுதியிருப்பார். அவர் இல்லை. ஆனால் அவர் அன்போடு எழுதிய கடிதங்கள் இருக்கின்றன. அவர் பழைய அன்பை நினைவூட்டும் வில்லைப் புராணம், வில்வனப் பெருமையைக் காட்டிலும் அதிகமாக வின்ஸோன் துரையின் பெருமையை அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது.

# 2. சமரசம்

[திரு. வி. கலியாணசுந்தரனார்]

சமரச சன்மார்க்க சங்கம் என்னும் பொருளில் முதலாவது சமரசத்தை எடுத்துக் கொள்வோம். சகோதரிகளே! சகோதரர்களே! சமரசத்தைப்பற்றி இதுகாறும் எழுந்த பேச்சுகள் எத்துணை! எழுத்துகள் எத்துணை! அவைகட்கோர் அளவுமுண்டோ? சமரசத்தைப்பற்றி எழுந்த பேச்சுகளும் எழுத்துகளும் மலையெனவுங் கடலெனவும் நிற்கின்றன; முழங்குகின்றன. உலகிடைத் தோன்றிய அறிஞர் அனைவருஞ் சமரசத்தையே அறிவுறுத்திச் சென்றனர். இப்பெரல்லாத உலகம் சமரசத்துக்குச் செவி சாய்க்கிறதா? அதை நடையில் கொணர வேட்கையாதல் கொள்கிறதா? இல்லையே. சமரசம், வாழ்வில் நுழைந்து ஆட்சி புரியின், உலகில் போர் ஏது? பூசல் ஏது? புரட்சி ஏது? சமரசம் பரவின் அரசு எற்றுக்கு? சட்டம் எற்றுக்கு? நீதிமன்றம் எற்றுக்கு? இவையாவும் உலகில் சமரசம் பரவாமையை யல்லவோ விளக்குகின்றன!

இத்துணைநாள் உலகிடைச் சமரசம் பரவாதிருந்ததற்குக் காரணம் யாது? காரணம் பலபடக் கூறலாம். மனிதன் பாலுள்ள அழுக்காறு அவா வெகுளி முதலியன அவனைச் சமரச ஞானியாக்குவதில்லை என்று சுருங்கச் சொல்லலாம். மனிதன் அழுக்காறு முதலிய பேய்களான் தொடக்குண்டு இடர்ப்படும் வரை அவன் சமரச ஞானியாதல் அரிது; அரிது.

சமரசத்தைப்பற்றிப் பேசுதல் எளிது ; எழுதுதல் எளிது. அதை நடையில் கொணர்வதோ அரிது. மனிதன் சமரசத்தைப் பற்றிப் பேசுவதினும், எழுதுவதினும் அதை நடையில் கொணர முயல்வதே அறிவுடைமை. அதற்கு மனிதன் என்செய்தல் வேண்டும்?

மனிதன், அழுக்காறு முதலியவற்றைப் போக்கவல்ல வாழ்வில் தலைப்படல் வேண்டும். அவ்வாழ்விற்கு இடையூறாக உள்ள கொடுமைகளைக் களைய முயலல் வேண்டும். அக்கொடுமைகள் யாவை? அவை பலப்பல. ஈண்டுப் புற உலகியல் வழி நின்று சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். இச் சிலவற்றைக் களையும் ஆண்மையை மனிதன் பெறுவானாயின், அவன் அழுக்காறு முதலிய வற்றைப் படிப்படியாக நாளடைவில் களையும் ஆற்றலுடைய வனாவன். அச்சில யாவை? நாடு, மொழி, சமயநெறி, சாதி முதலியன.

**நாடு** : ஒருவன் தான் பிறந்த நாட்டைத் தாய்போல் நேசிக்க லாம். ஆனால் அந்நேசத்தை மற்ற நாடுகளின் துன்பத்துக்குப் பயன்படுத்தலாகாது. இப்பொழுது நாட்டுப்பற்று அல்லது தேச பக்தி என்பது பிற நாட்டைத் துன்புறுத்தும் வழி நிகழ்ந்துவரல் கண்கூடு.

கடல்களும், மலைகளும், காடுகளும் பிறவும் நாடுகளைப் பிரிக்கின்றன. இப்பிரிவு கொண்டு ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை ஏன் வருத்தல் வேண்டும்? வாழ்வுக்கேற்ற பொருள் களை இயற்கை உதவுகிறது. அப்பொருள்களைப் பெற்றும் மாறியும் மனிதன் இன்பவாழ்வு நடத்தலாமன்றோ? மனிதன் அப்பொருளள வில் உள்ள நிறைவு கொள்கிறானோ? அவன்பாலுள்ள ஆசைப்பேய் வாளா கிடக்கிறதோ? இப்பொழுது ஒரு நாட்டார் இன்னொரு நாட்டைப் பற்றி அதன் வளத்தைக் கவருவதிலேயே கருத்துக் கொண்டு வாழ்கிறார். இஃதோர் அறமாகவுங் கருதபபடுகிறது. இம் மறத்தை அறமாகக் கருதுவது மடமை.

இம்மடமைக்குப் பிறப்பிடம் மேல்நாடு என்று கூறல் மிகை யாகாது. மேல் நாட்டார் தாம் பிறந்த நாடடின்பொருட்டுப் பிறநாடுகளைப் பற்றுவதில் திறமை வாய்ந்தவர் அதற்கென அன்னார் செய்யும் முயற்சிக்கு ஓர் எல்லையில்லை. ஆகாய விமானங் களும், நீர் மூழ்கிகளும், நச்சுக் காற்றும், பிறவும் காணபபடுகின் றன. இவ்வளவும் எற்றுக்கு? பிற நாட்டாரை வருத்துதற்கன்றோ? என்ன அறியாமை! இம்மக்கள் தங்கள் நாட்டையே கடவுளாகக் கருதுகிறார்கள். மற்ற நாட்டாரிடமும் கடவுளிருத்தல் இவர்க்குப்

புலனுவதில்லைபோலும் ! இவர்க்குத்தான் பசி முதலியன உண்டு போலும் ! மற்றவர்க்கு அவை இல்லை போலும் ! இக்கருத்துடையார்க்குச் சமரச உணர்வு யாண்டிருந்து பிறக்கும் ? எல்லா நாட்டாரும் சகோதரர் என்பதை இவர் எந்த நாளில் உணரப் போகிறார் ? இவ்வாறு பலர் நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழக்கிறார்.

மொழி : சிலர் மொழியை முற்கொண்டு சமரசத்துக்குக் கேடு சூழ்கிறார். மொழிகள் அவ்வந்நாட்டின் இயல்புக்கேற்ற வண்ணம் பலவாய்த் தோன்றியிருக்கின்றன. அவரவர் தத்தம் தாய்மொழியைப் போற்றி வரலாம். ஒருவன் தன் தாய்மொழியின் பொருட்டு மற்ற மொழியை ஏன் குறை கூறல் வேண்டும் ? ஏன் தூற்றுதல் வேண்டும் ! உலகில் சில பகுதிகளில் மொழி காரணமாகவும் மக்களுக்குள் போர் நிகழ்கிறது. ஒரு மொழியினர் இன்னொரு மொழியினரைப் பகைவராகக் கருதுவது சமரச உணர்வைக் குலைப்பதாகும்.

எல்லா மொழிகட்கும் அடிப்படை ஒன்றே. அஃது ஒலி அல்லது நாதம். அவ்வொலியினின்றும் பிறந்த மொழிகளில் ஏற்றத் தாழ்வு கற்பித்துப் போரிடல் அநாகரிகம். மொழி காரணமாகவும் சிலர் சமரசப்பேறெய்தா தொழிகிறார்.

சமய வெறி : சமயவெறி கடவுள் அன்பைக் கெடுக்கிறது. ஒருவன் வெறியால் தன் சமயத்தின்மாட்டுப் பற்றுக்கொண்டு மற்றச் சமயத்தாரை நிந்திக்கிறான். இஃதென்ன அறியாமை! சமயமென்பது ஒன்றே. அதுவே சமரசம் என்பது. சமய வெறியர்க்குப் பல சமய உணர்வு தோன்றும் போலும். பல சமய உணர்வும், தன் சமயப்பற்றும் சமரசத்தை அழித்துவிடுகின்றன. ஆதலால் சமய வெறி கூடாதென்க.

சாதி : பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் தவறு. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பெருங்குற்றம் நமது நாட்டுக்கே சிறப்பாக உண்டு. எல்லாக் கொடுமைகளினும் தலையாயது இக்கொடுமை. பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் உள்ளத்தில் சமரசச் சாயலும் படராது.

நமது நாட்டிலுள்ள சாதிக்குறைபாட்டைக் களைய அவ்வப்போது தோன்றிய பெரியோர் பெருமுயற்சி செய்தார். அம்முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீராயின.

நமது நாட்டில் ஒரு பெருங்கொலை நீண்டகாலமாக நிகழ்ந்து வருகிறது. அக்கொலை உலகிற்குப் புலனாவதில்லை. அதாவது பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைக் குழி வெட்டிப் புதைத்து, அவர்தம் உருவத்துக்குமட்டும் வந்தனை வழிபாடு செய்வது. இப்படிற்றொழுக்கம் நீண்ட நாள் வழக்கிலிருந்து வருகிறது.

'சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள் கோத்திர முங்குல முங் கொண் டென்செய்வீர்' என்றும், 'சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிபட்டுத் தடுமாறும்' என்றும் அருளிய பெரியோரை வழிபடுவோர் சாதியைப் பாராட்டுகிறாரா இல்லையா என்பது கவனிக்கத் தக்கது. இம்மக்கள் சாதியையே கடவுளாகவுஞ் சமயமாகவுங் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. இவர், சாதியை மறுத்துச் சமரசத்தில் திளைத்த பெரியோரை வழிபடுவதற்கு ஏதாயினும் பொருளுண்டோ? வெறும் உருவத்தை மட்டும் வழிபடுவது வழிபாடாகுமா? பெரியோர் அறிவுறுத்திய நெறி நின்றொழுகுவதன்றோ அவரை உண்மையில் வழிபடுவதாகும்? நம் நாட்டார், முன்னோர் அறிவுறுத்திய கொள்கைக்குக் கல்லறையிட்டுப் புதைத்து, அவரின் உருவங்களை மட்டும் வழிபடுவதில் பேர் பெற்றவர். இக் கரவும் வஞ்சனையும் வளர்ந்துவரும் நாட்டுக்கு உய்வுண்டோ? உரிமையுண்டோ?

இற்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ் நாட்டில் வதிந்து மறைந்த நம் இராமலிங்க சுவாமிகள், சாதிமத வேறுபாடுகளைப் பலவுரையால் மறுத்துச் சமரச ஞானத்தை அறிவுறுத்திக் கோயில்களெல்லாஞ் சாதிக் கோயில்களாக மாறியது கண்டு, எல்லாரும் போந்து வழிபடுவதற்கெனச் சமரசக் கோயிலை (வடலூர் சபை) அமைத்துச் சென்றார் இங்கேயாதல் சுவாமிகள் கொள்கை ஆட்சியிலிருக்கிறதா? ஈங்கும் சாதிப்பேய் புகுந்து தன்னாட்சி செலுத்துகிறது. இந்தக் கொள்ளைக்கு — இந்தக் கொலைக்கு என் செய்வது?

'எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் சோதி' என்று சுவாமிகள் அருளிச் செய்துள்ளார். இச்சபை அந்நோக்குடன் சுவாமிகளால் நிறுவப்பட்டது. இஃது இப்பொழுது எல்லா நாட்டினர்க்கும், எல்லா மொழியினர்க்கும், எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லாச் சாதியார்க்கும் பொதுவாகப் பயன்படுகிறதா?

'எச்சமயத் தவரும்வந் திறைஞ்சா நிற்பர்' என்று தாயுமான சுவாமிகள் சிதம்பரத்தின் பொதுமை தெரித்துப் போந்தார்.

இப்பொழுது சிதம்பரத்தில் எல்லார்க்கும் இடமுண்டோ? தாயுமானார் காலத்தில் பொதுவுடைமையாகக் கருதப்பட்ட சிதம்பரம், இப்பொழுது சிலருடைமையாகவே கருதப்படுகிறது.

இக் கொடுமை கண்டே இராமலிங்க சுவாமிகள் இங்கு இச் சபைக் கோயிலை நிறுவினர். இதுவும் தன் பொதுமையை இழந்து நிற்கிறது. பெரியோர் கொள்கையை வீழ்த்தி அவர் தம் உருவத்துக்கு மட்டும் நம்மவர் விழாக் கொண்டாடுகின்றனர். இக்கொடுமையை யாண்டுச் சென்று முறையிடுவது? ஆண்டவனே! உன்னிடத்திலேயே முறையிடுகிறேன். வேறு களைகணில்லை. என் நாட்டார்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவாயாக.

சமரசம் என்பது நாடு, மொழி, சமயநெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்பது. எல்லா நாட்டார், எல்லா மொழியினர், எல்லாச் சமயத்தார், எல்லாச் சாதியாரிடத்திலும் புகுந்து நிற்பது சமரச ஞானம். நாடு மொழி சமயம் சாதி முதலியவற்றைக் கொண்டு, சமரச உணர்வை இழப்பது அறியாமை. இப் பன்மைகளினூடே படர்ந்து நிற்கும் ஒருமையே சமரசம். அச்சமரசமே கடவுட் காட்சியை நல்கும். அதையே இயற்கை யன்னை மக்களிடை ஓம்ப முனைந்து நிற்கிறாள். அவள் முயற்சிக்கு எவருங் குறுக்கே நிற்கலாகாது. இதுகாறும் மனிதன் அறியாமையால் இயற்கை அன்னையை மறந்து இடர்ப்பட்டது போதும்! போதும்! இனியாதல் சமரசத்திற்கு மனிதன் இடந்தந்து வாழ்வானாக.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே, இனிவரும் உலகிற்கு வேண்டற்பாலதாய சமரசத்தை இராமலிங்க சுவாமிகள் அறிவுறுத்திச் சென்றார். அவர் அருளிய சமரசப்பாக்கள் ஒன்றா? இரண்டா? ஆயிரம்; ஆயிரம். அவற்றை அருட்பாவில் பார்க்க. தாலிபுலாக நியாயம் பற்றிச் சில பாக்களை மட்டும் ஈண்டுத் தருகிறேன்.

'சாதியும் மதமுஞ் சமயமுங் காணா
 ஆதி அநாதியாம் அருட்பெருஞ் சோதி
சாதியும் மதமுஞ் சமயமும் பொய்யென
 ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி
சமயங் குலமுதல் சார்பெலாம் விடுத்த
 அமயந் தோன்றிய அருட்பெருஞ் சோதி
சமரச சத்தியச் சபையில் நடம்புரி
 சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே!'

" சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையுந் தணந்தேன்
நீதியும் நிலையுஞ் சத்தியப் பொருளும்
நித்திய வாழ்க்கையுஞ் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் எல்லாம்
அருட்பெருஞ் சோதியென் றறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீயறிந் ததுநான்
உரைப்பதென் னடிக்கடி யுனக்கே !

" குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்துவீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கியே மாந்து
நிற்கின்றார் நிற்கநா னுவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன்.
மகிழ்ந்துநீ யென்னுள மெனுமம்
பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே.'

'எல்லாமுடைய அருட்பெருஞ் சோதி அற்புதக் கடவுளே ! இது தொடங்கி, எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய நடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றுவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும் எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ் சோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட்பெருங் கருணைக்கு வந்தனம் ! வந்தனம் !'

என்னருமைச் சகோதரிகளே ! சகோதரர்களே ! இவ் வருட்பாடல்களையும், இப் பொன்னுரைகளையும் உற்று நோக்குங்கள் ; சாதி, மதம் முதலிய வேற்றுமைகளைச் சுவாமிகள் எவ்வாறு கடிந்துள்ளார் என்பதை உணருங்கள் ; வேற்றுமை உணர்வு உள்ளவரை சமரச ஞானம் பெறல் இயலாது என்பதைத் தெளியுங்கள். சாதி மதம் முதலிய வேற்றுமைகளால் விளைந்துள்ள தீமைகளைக் கண்டே அவைகளைக் களைந்து, சமரசத்தை நிறுவச் சுவாமிகள் முயன்றார்.

சுவாமிகள் அம்முயற்சியில் தலைப்பட்டது உண்மை. எவ்வழி நின்று அவர் அம்முயற்சியில் தலைப்பட்டார்? முனைப்பை அடிப்படையாகக் கொண்டா? காழ்ப்பை அடிப்படையாகக் கொண்டா? பகைமையை அடிப்படையாகக் கொண்டா? இல்லை; இல்லை. முனைப்பும் காழ்ப்பும் பகைமையுங் கடந்த ஒரு நிலையில் நின்றே சுவாமிகள் அப்பெருமுயற்சியில் தலைப்பட்டார்.

சாதி, மதம் முதலிய வேற்றுமைகளால் உலகம் இடர்ப்படுவதைக் கண்ட சுவாமிகள், அவற்றைக் களைந்து சுத்த சன்மார்க்கத்தை அறிவுறுத்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளைக் கொழுகொம்பாகப் பற்றினர். ஆண்டவன் திருவருட்டுணை கொண்ட சுவாமிகள் சீர்திருத்தத் தொண்டில் இறங்கினர். திருவருளில் கருத்துச் செலுத்தாது முனைப்பால் - காழ்ப்பால் - பகைமையால் - சீர்த்திருத்தத் துறை நண்ணுதல் மடமை, மடமை.

இக் காலத்தில் சிலர் 'சீர்திருத்தம்' என்னும் பெயரால், ஆண்டவன் உண்மையை மறுத்தும், அவன் அருள் பெற்ற அடியாரை நிந்தித்தும், ஆன்மநேயத்தைக் குலைத்தும் வருவது உங்கட்குத் தெரியும். அவர் வினையால் உலகம் செம்மையுறுங் கொல்? செம்மைக்குக் கேடு நிகழும். நாத்திகச் சீர்திருத்தத்தால் பிளவும் பிணக்கும் போருமே விளையும். நம் இராமலிங்க சுவாமிகள் நாத்திகத்தைக் கனவிலுங் கருதாது, ஆண்டவனுண்மையில் உறுதி கொண்டு, முனைப்பு, காழ்ப்பு, பகைமை முதலிய பேய்களுக்கு இரையாகாது, ஆண்டவன் அருள்வழி நின்று, அவனருள் பெற்ற அடியாரைப் போற்றி, சாதி மதம் முதலிய வேற்றுமைகளைக் களைந்து, ஆன்ம நேயத்துக்குரிய சமரச ஞானத்தை ஓம்பப் புகுந்தார். சீர்திருத்தக்காரர் என்று வெளிவருவோர் இச்செந்நெறி பற்றி நடப்பாராக.

'இறைவா நின்னைக் கனவிலேனும் யான்மறப்பனோ
எந்தா யுலகத் தவர்கள்போல்நா னினியிறப்பனோ
மறைவா சகமும் பொருளும்பயனு மதிக்குமதியிலே
வாய்க்கக் கருணை புரிந்துவைத்தாய் உயர்ந்தபதியிலே.'

'அம்பலத்தி லெங்களைய ராடியநல் லாட்டம்
அன்பொடு துதித்தவருக் கானதுசொல் லாட்டம்
வம்புசொன்ன பேர்களுக்கு வந்ததுமல் லாட்டம்
வந்ததலை யாட்டமின்றி வந்ததுபல் லாட்டம்.'

'நாத்திகஞ்சொல் கின்றவர்தம் நாக்குமுடை நாக்கு
நாக்குருசி கொள்ளுவது நாறியபிண் ணாக்கு
சீர்த்திபெறு மம்பலவர் சீர்புகன்ற வாக்கு
செல்வாக்கு நல்வாக்கு தேவர்திரு வாக்கு.'

இப் பாக்களால் சுவாமிகள் நாத்திகத்தைக் கனவிலுங் கருதாமை பெறப்படுகிறது.

சுவாமிகள் ஆண்டவன் உண்மையையும், அவனருட்டிறத்தையும் விளக்கிப் பாடிய பா ஒன்ரு ? இரண்டா ! அன்பர்களே! அப்பாகள் ஆயிரம்; ஆயிரம். அவர் எண்ணமெலாம் ஆண்டவன் எண்ணம்; அவர் சொல்லெலாம் ஆண்டவன் சொல்; அவர் செயலெலாம் ஆண்டவன் செயல்; உடல் பொருள் ஆவி மூன்றையும் ஆண்டவன் திருவடிக்கு அர்ப்பணஞ் செய்து, ஆண்டவன் அருள் வழி நின்று வாழ்வு நடாத்தியவர் நம் இராமலிங்க அடிகள். சீர் திருத்தக்காரர்களே ! சுவாமிகள் நிலையோர்ந்து சுவாமிகள் வழி நிற்க முயலுங்கள்.

# 3. கவிதை

[பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை]

கவிதை என்பது யாது ? உலகத்தில் இலக்கியம் தோன்றிய காலந்தொட்டே, இக் கேள்வியும் தோன்றியுள்ளது. இக் கேள்விக்குரிய விடைகளும் பலபடியாய்த் தரப்பட்டுள்ளன. நமது தேசத்தில் கவிதையின் உயிர்நிலையைக் குறித்துப் பல அறிஞர்களும் ஆராய்ந்து உள்ளனர். சிலர் அது பொருட் சிறப்பே என்றனர். வேறு சிலர் பொருள் பொதிந்துள்ள சொற்சிறப்பும், செய்யுள் வகைச் சிறப்பும் என்று கொண்டனர். மற்றும் சிலர் ஒன்பது வகைப்பட்ட சுவையே உயிர் - நிலை என்றனர். இன்னும் சிலர், தொனியே உயிர் நிலையாகும் என்று துணிந்தனர். இவையெல்லாம் கவிதையின் தோற்றுவாய், வரலாறு முதலியவற்றைக் கருத்துட் கொள்ளாதன. மேலைநாட்டில் ஜான்ஸனிடத்தில் பாஸ்வெல் இந்தக் கேள்வியைக் கேட்டார். "ஒளியை நாம் அறிவோம். ஆனல், அது இன்னதென்று சொல்வது எளிதல்ல. இதுபோலவே தான் கவிதையும். "கவிதை இது அல்ல, இது அல்ல, என எளிதில் கூறிவிடலாம். ஆனல், இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல" என்று ஜான்ஸன் பதில் கூறினராம்.

கோலரிட்ஜ் என்பவர் வசனத்திற்கும் கவிதைக்கும் ஓர் இலக்கணம் வகுத்தனர். 'சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம் என்றும், சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை' என்றும் இவர் முடிவு செய்தனர். இவ் விடையும் கொள்ளத் தக்கதன்று. சிறந்த முறையில் சொற்கள் அமையாத

போதிலும், அங்கே வசனம் உள்ளது என்று கூறுகிறோம். மேலும், சிறந்த முறை என்பது யாது? என்ற கேள்வியும் எழுகின்றது. ஒவ்வொரு நோக்கத்திற்கு, ஒவ்வொரு முறை சிறந்ததாக ஏற்படுதல் கூடும். அப்போது சிறந்த முறை என்று கூறுவது பயனற்றதாம்.

கோலரிட்ஜின் நண்பர் வோர்ட்ஸ்வொர்த் இதுபற்றி எழுதியுள்ளது உலகப் பிரசித்தம். 'ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை' என்று இவர் துணிந்தனர். கோபம் எப்படி உண்டாகிறது? ஆற்றல் நிரம்பிய உணர்ச்சி தானாகப் பொங்கிவருவதனால்; இது கவிதையாகுமா? இதனை விளக்கி 'முன்பு கிளர்ந்த ஓர் உணர்ச்சிப் பெருக்கை மீண்டும் சாந்த நிலையிலிருந்து நினைவிற்குக் கொண்டுவரும்போது தான் கவிதை தோன்றுகிறது' என்றனர். வோர்ட்ஸ்வொர்த் கூறியது ஒரு பொதுப்பட்ட வருணனையே யன்றி உண்மை இலக்கணத்தை வரையறுத்ததாகாது. அன்றியும், கவிதையின் தோற்றம் வோர்ட்ஸ்வொர்த் கொண்டுள்ளபடியே எல்லா இடங்களிலும் நிகழும் என்று கூறமுடியாது. ஆகவே, இங்ஙனம் கூறியதும் போதியதன்று; இக் கொள்கையும் பொருந்துவதன்று.

கீத்ஸ் என்ற கவிஞர், 'கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை' என்றனர். 'ஆற்றலின் சிகரம்' என்றும், 'ஆற்றல் தனது வலது புயத்தில் தலை சாய்த்துப் பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலை' என்றும் கவிதையை இவர் கூறினர். இவையெல்லாம் கவிதையைப்பற்றிய கவிதையே யன்றி அதன் உண்மையியல்பை அறிந்து கொள்வதற்குப் பயன்படமாட்டா

கோலரிட்ஜ் முதலானவர்களெல்லாரும் கவிஞர்கள் கவிதையைப்பற்றி விசாரணை செய்த மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள், யாது கூறுகிறார்கள்? ஜான் ரஸ்கின் 'கவிதையாவது யாது? 'சீரிய உணர்ச்சிக்குரிய காரணங்களைப் பாவனாசக்தியால் குறிப்பிடுவதே கவிதையாகும்' என்று விடை தந்தனர். இதுவும் திருப்திகரமானது என்று சொல்ல முடியாது. உலகத்திலுள்ள சிறந்த இலக்கியங்களிற் பல இந்த இலக்கணத்தோடு மாறுபட்ட இயல்பு உடையன.

இவைகளையெல்லாம் நோக்குமிடத்து, இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் உண்மையுள்ளதாகத் தோன்றுகிறது. இந்த உண்மைகளையெல்லாம் நாம் ஒரு சேரத் திரட்டுவோமானால் கவிதை என்பது இன்னதென்று ஒருவாறு புலனாகும்.

செய்யுள் நெறியில் இயற்றப்படுவதே கவிதை என்று நூதன ஆங்கிலப் பேரகராதி கூறுகிறது. பவணந்தி என்ற ஆசிரியர்,

> பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
> சொல்லால் பொருட்கிட னாக உணர்வின்
> வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

என்று கூறிய இலக்கணம் அகராதி கூறுவதனோடு ஒத்திருப்பது காணலாம். ஆகவே, கவிதையின் முதலாவது இயல்பு அது செய்யுள் வடிவில் அமைந்திருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக, அது உலக உண்மைகளைக் காட்டிலும், பாவனா சக்தியின் இயல்புகளையே பெரும்பாலும் மேற்கொள்ள வேண்டும். அது பூமியில் காலை ஒற்றி ஒற்றி நடவாதபடி, மேலாகப் பறந்து செல்லுதல் வேண்டும். பொருளை வியாக்கியானம் செய்யாதபடி தெய்வ ஆவேசத்தால் குறி சொல்வது போல் அமைந்திருத்தல் வேண்டும். பொருள்களை விளக்குவதைக் காட்டிலும், அவற்றின் மீது ஒளி பரவவிட்டு, அவை தாமாகவே விளக்கமுறச் செய்தல் வேண்டும். புறவுலகத்தில் வெளிப்படையாகவுள்ள பொருள்களோடு அமையாதபடி, ஆன்ம உலகில் அது சஞ்சரித்தல் வேண்டும். நிலையற்ற பொருள்களோடு நின்றுவிடாதபடி, நிலையாயுள்ள பொருள்களைப்பற்றியும் அது நிகழ்தல் வேண்டும்.

இங்ஙனம் கூறிய அளவில், இதுவும் கவிதையைப்பற்றிய கவிதையல்லவா என்று தோன்றும். அறிவு நெறியினின்றும் விலகிப் பைத்திய நெறியில் நின்றதன் விளைவு என்றும் இது தோன்றலாம். கம்பன்,

> பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
> பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ ?

என்று கூறியது நமது நினைவிற்கு வரலாம். மேனாட்டிலும் முற்காலத்தில் பிளேட்டோ முதலிய சில அறிஞர்கள் கவிஞர்களைப் புறக்கணித்தும், இகழ்ந்தும் வெறுத்தும் வந்தனர். சமீப காலத்தில் இராபர்ட் பட்டன் என்பவர், எல்லாக் கவிஞர்களும் பைத்தியக் காரர்களே என்ற விநோத முடிவிற்கு வந்தார். கவிதை இயற்கைக்கு முரணானது என்பதற்கும், சாதாரண அறிவிற்குப் புலப்படாத ஓர் அற்புத சக்தியால் அது விளைவது என்பதற்கும், அறிவை வசீகரித்து மக்களை ஆட்டுவிக்கும் ஆற்றலில் அஃது இணையற்றது என்பதற்கும் இக்கூற்றுகள் முதலியன சான்றாகும்.

கவிதை ஒரு கலை. கலை என்று கூறிய அளவில், இன்பம் விளைத்தலே அதன் தலையாய நோக்கம் என்பது வெளிப்படை. இது மூன்றாவதாக உணரத்தக்கது.

நான்காவது : கவிஞன் தன் உள்ளத்தில் எழும் கவிதைக் கருத்துக்களைச் செய்யுள் வடிவில் வெளியிடுவதிலேயே முனைந்து நிற்பான். இக் கருத்துக்களில் ஒரு சிலவே அவனது ஆன்மாவினது உண்மையியல்பை வெளியிடுவனவாம். இங்ஙனமாக, ஆன்மாவின் இயல்புகளை வெளியிடும் கவிதைகளே சிறந்த கவிதைகள் ஆகும். இக் கவிதைகளில் பொதுப்படையான மக்கள் உள்ளத்தில் பொதுப்படத் தோன்றும் உணர்ச்சிகளும் கருத்துக்களும் ஒருபுறம் வெளியாகும் என்பது உறுதி இதனாலே தனிப்பட்ட ஆன்ம இயல்பும் பொதுப்பட்ட மக்கள்-இயல்பும் சிறந்த கவிதைகளில் விளங்கி நிற்கும். இது பற்றியே ஒரு கவிஞன் தன் காலத்து இயற்கையை வெளிப்படுத்தும் வியாக்கியான கர்த்தா என்று கூறப் படுகிறான்

ஆன்ம-இயல்பை வெளியிடுபவன் கவிஞன் என்று கூறுவதனால், கவிதைக்கு வேண்டும் இயல்புகள் சில நமக்குப் புலனாகின்றன. முதற்படியாக, அவன் கூறுவனவற்றில் உண்மையின் முத்திரை பதிந்திருத்தல் வேண்டும். உண்மையில்லாமற்போனால் சிறந்த கவிதை தோன்றமாட்டாது. ஒருவன் நாடகாசிரியனாக இருக்கலாம். பிற பாத்திரங்களின் குணங்களைத் தானே மேற்கொண்டு அவற்றிற்கேற்பச் சொல்லாடலாம் ; தொழில் புரியலாம். அப்பொழுதும் அவன் உண்மையாகவே பாத்திரங்களின் குணங்களில் பிரவேசித்தல் வேண்டும். உண்மையாகவே பாத்திரங்களை அவன் சிருஷ்டித்தல் வேண்டும். போலி என்பது சிறிதும் தகாது. ஒருவன் அழகான சிறு செய்யுட்களை இயற்றலாம் சுவையுள்ள கருத்துககளை அவற்றில் அமைக்கலாம். ஆனால். இக் கருத்துக்களின் அடிபபடையில் உண்மையிருத்தல் வேண்டும்; உணர்ச்சியிருத்தல் வேண்டும் அப்பொழுதுதான் இச் செய்யுட்கள் கவிதை என்று சொல்லக்கூடிய தகுதியை அடையும்.

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்'

என்று பாரதி கூறியது இதனை உறுதிப்படுத்தும்.

அடுத்து இங்கே கூறிய உண்மையோடு தெளிவு என்ற இயல்பும் அவன் கவிதைகளிலே காணுதல் வேண்டும். ஓடுகின்ற தன்னீர் தெளிவாயிருப்பது போல, கவிதையும் தெளிவாய் இருத்தல்வேண்டும். இங்ஙனம் தெளிவின்றிச் சேறு முதலியவற்றால் கலங்கி ஓடும் ஓடை நீர் பருகுவதற்குத் தகுதியற்றது. இது போலவே தெளிவின்றி எங்கும் கருகலாய், எவ்வளவு முயன்றாலும் ஐயப்பாட்டின் நீங்காததாய் உள்ள செய்யுட்கள் நாம் கற்று இன்புறுதற்குரிய கவிதைகள் ஆகமாட்டா.

கவிதைக்குரிய வேறோர் இயல்பும் அடுத்தபடி இங்கு மனங் கொள்ளத்தக்கது. அது எளிமையாகும். எப்பொழுதும் எளிய தோற்றத்தோடு அமைதல் மிக அரியதொரு காரியமாகும். கம்ப னுடைய கவிதைகள் எளியவாய் வெள்ளையாய் உள்ளன என்று பலரும் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், இவ்வாறிருத்தல் அவன் கவிதையின் சிறப்பை உணர்த்துகின்றதேயன்றி உள்ளத்தின் வறுமையை உணர்த்துவதாகாது. கடினமான அகராதிப் பதங்களை எடுத்து வழங்கிச் செய்யுட் பொருளைக் கருகலாக்கி அமைக்கும் கவிஞர்கள் சிறந்த கவிஞர்களாக மாட்டார்கள்.

கவிதைக்குரிய நல்லியல்புகள் பலவற்றை உணர்ந்து ஓர் அழகிய செய்யுளில் கம்பன் வெளியிட்டிருக்கிறான்.

புவியினுக் கணியாய் ஆன்ற
 பொருள் தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி
 ஐந்திணை நெறிய ளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென்
 றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
 விரியினை வீரர் கண்டார்.

இங்கே குறிக்கப்பட்ட நல்லியல்புகளோடு செய்யுட் பொருளும் யாப்பும் உடலும் உயிரும் போல ஒன்றியமைதல் வேண்டும். கருத்துக்குப் பொருத்தமற்ற யாப்புகளை இயற்றுவது சிறிதும் இன்பந்தரமாட்டாது. இன்ன கருத்துக்கு இன்ன செய்யுள் வகைதான் பொருத்தம் என்பது சிறந்த கவிஞர்களிடமிருந்தே நாம் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். திருமணத்தை வருணிக்கும் இடங்களில் மிடுக்கும் அழகும் இன்ப உணர்ச்சியும் தரக்கூடிய செய்யுள் வகையே கையாளப் படுதல் வேண்டும். இது போன்றே அவலச் சுவையைக் கூறுமிடங்களில் அதற்கேற்ற செய்யுள் வகையைக் கையாளுதல் வேண்டும். கம்பனைப் போன்ற பெருங் கவிஞர்களை அடிக்கடி கற்று, நல்ல பயிற்சி பெறுவது கவிதையின் உண்மை இயல்புகளை நாம் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணை புரிவதாகும்.

கம்பனைக் கற்கக் கற்க, அவனது கவிதை தமிழர்கள் கொண்ட கவிதை இலட்சியத்தை உணர்த்தி, அவர்களது பண்பாட்டின் உச்ச நிலையையும் தொட்டுவிடுதல் நமக்குப் புலனாகின்றது.

# 4. விவேகாநந்தர் திருமுகம்

[சுவாமி விவேகாநந்தர்]

நியூயார்க்கு

தைரியம் மிகுந்த என் இளைஞர்காள் ! நவம்பர், 19, 1894

அன்பு, கள்ளமற்ற தன்மை, பொறுமை வளர்ச்சி இவை மூன்றிருந்தால் போதும் வாழ்க்கை என்பது இவையன்றி வேறு ஏதுமில்லையே! எனவே, அன்புடைமையே வாழ்வு ஆகும். அன்பே வாழ்வு சம்பந்தப்பட்ட ஒரே விதியாகும்; சுயநலம் மரணத்திற் கொப்பானதாகின்றது. இகத்திலும் சரி, பரத்திலும் சரி; இது பொருத்தமான உண்மையாகின்றது. நலம் புரிவது வாழ்வதாகும் ; பிறருக்கு நலம் புரியாமல் இருப்பது சாவது ஆகும். நமது பார்வைக்குட்படும் மனிதரெனப்படும் மிருகங்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் செத்தவரேயாவர் ; வெறும் பிணங்களேயாவர்; ஏன் என்றால், அன்புடையவன் ஒருவனைத் தவிர மற்றவரை உயிர் வாழ்பவர் எனக் கொள்ள இயலாது.

என் குழந்தைகாள் உணர்ச்சி கொள்ளுங்கள் ! உணர்ச்சி, கொள்ளுங்கள் !! ஏழைகளுக்காக, அறிவிலிகளுக்காக, ஒதுக்கப்பட்டோருக்காக உணர்ச்சி கொள்ளுங்கள். உணர்ச்சியைப் பெருக்கிக் கொண்டே செல்லுங்கள். இதயமே துடியாமல் நின்றுபோகு மூளையே குழம்பிச் சுற்றுவதாக, உமக்குப் பித்தே பிடித்துவிடு மெனத் தோன்றும் வரையிலும் உணர்ச்சியைப் பெருக்குவீராக. பின்னர், இறைவரின் திருவடிகளிலே உமது அந்தராத்துமாவையே கொட்டி அளந்து விடுங்கள். அப்பொழுது உமக்குச் சக்தியும், உதவியும், குன்றாத ஊக்கமும் உதயமாகும். போராடி முன் செல்க. சென்ற பத்தாண்டுகளாக இதுவே எனது ஒழுக்கக் கூற்றாய் இருந்து வந்துள்ளது.

போராடி முன் செல்க ! இதையே இன்னும் நான்கூறி வருகின்றேன். போராடி முன் செல்க! என்னைச் சுற்றிலும் ஒரே இருள்மயமாய் இருந்த பொழுது நான், 'போராடி முன் செல்க!' என்றுதான் கூறி வந்தேன். இப்பொழுது ஒளி வந்துறுகின்ற சமயத்தும் நான் இன்னும் அதையே கூறுகின்றேன்—போராடி முன் செல்க! அச்சம் தவிர்ப்பீராக ; என் குழந்தைகளே! அந்த அகண்டாகாரமான நட்சத்திர வானத்தை, அந்த அச்சம் மிகுந்த பாங்கிலே மேல் நோக்கியவராய் நின்று கொண்டிருக்க வேண்டா. கொஞ்சம் பொறுங்கள் ; இன்னும் ஒரு சில மணி நேரத்தில் அந்த வானம் முழுவதும் உம் பாதங்களின் கீழ்க் கிடப்ப

தாய் விடும். பொறுங்கள்! பணம் பலனளியாது; பெயரும் அளியாது; புகழ் பலனளியாது; கல்வியறிவும் அளியாது. அன்புடைமை ஒன்றுதான் பலனளிக்கும்; கஷ்டங்களான, உட்புக முடியாதவாறு கடினமாயுள்ள சுவர்களையெல்லாம் துளைத்துக் கொண்டு வழி செய்து முன்னேற வல்லது ஒழுக்கமுடைமை ஒன்று தான்.

இப்பொழுது நமக்கு முன் உள்ள பிரச்சினை இதுதான. சுதந்தரம் இன்றி எவ்வித வளர்ச்சியும் ஏற்பட இயலாது. நம் முன்னோர்கள் சமய சம்பந்தமான சிந்தனைக்குச் சுதந்தரம் அளித்தார்கள். அதன் பலனாக நாம் ஆச்சரியமானதொரு சமய தர்மத்தைப் பெற்றுள்ளோம்; ஆனால், சமுதாயத்தின் கால்களிலே அவர்கள் ஒரு கனத்த சங்கிலியைக் கட்டிவைத்தனர். அதன் பலனாக நமது சமூகம்—சுருங்கச் சொல்லி விடுகிறேன்—அதிபயங்கர நிலையில், பிசாசு வயப்பட்ட நிலையில் உள்ளது. மேனாட்டிலோ சமூகத்திற்கு என்றும் சுதந்தரம் இருந்துவந்தது; அதன் பலனாக அவர்களுடைய சமூக நிலைமையைப் பாருங்கள். எவ்வளவு சிறப்பாய் உள்ளது! ஆனாலோ, அதற்கு மாறாக, அவர்களுடைய சமய தருமத்தைத்தான் பாருங்கள்!

வளர்ச்சிக்கு முதலாவது நிபந்தனையாவது சுதந்தரம்தான். எண்ணவும் மொழியவும் மனிதனுக்குச் சுதந்தரம் வேண்டியிருப்பது அவசியமானது போலவே, உணவு முறையிலும் உடை முறையிலும் திருமண விஷயத்திலும் வேறு ஒவ்வொரு விஷயத்திலும் மனிதன் சுதந்தரம் பெற்று இருக்க வேண்டும்; பிறருக்கு அவன் தீங்கிழைக்காமல் இருக்கும்வரை அவனுக்கிந்தச் சுதந்தரம் வேண்டுவதேயாம்.

உலகாயத நாகரிகத்தை எதிர்த்துரைத்து நாம் முட்டாள் தனமாகப் பேசிவருகின்றோம். "சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்," என்ற கதைதான் இது. அந்த முட்டாள்தனமான பேச்சையெல்லாம் உண்மையே எனக் கொண்டாலும், இந்தியா முழுவதிலும் உண்மையான அத்தியாத்துமப் பற்றுடைய ஆடவ மகளிர் சுமார் ஓரிரு இலட்சம் பேர் இருக்கலாம்; அவ்வளவுதான் சரி; இந்த இலட்சம் பேரை அத்தியாத்தும மயமாக்குவதற்காக முப்பது கோடி மக்கள் அநாகரிகத்திலும் சோறும் தண்ணீரும் இல்லாத நிலையிலும் மூழ்கிக் கிடக்க வேண்டுமா என்ன? தனியொருவனும் ஏன் பசியால் வாடவேண்டும்? உலகாயத நாகரிகம், ஏன் போகப் பொருள்களைப் பெற்றிருப்பதும் கூட, ஏழை மக்களுக்கு வேலை ஏற்படுத்தித் தருவதற்கு அவசியமானதுதான். சோறு வேண்டும்! உண்ணச் சோறு வேண்டும்! இகத்தில் எனக்குச்

சோறு கொடுக்கமுடியாத ஒரு தெய்வம் பரலோகத்தில் எனக்கு நித்தியானந்தத்தைத் தந்தருளும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை! ஆஹா! இந்தியாவைத் தூக்கி உயர்த்த வேண்டும்; ஏழை மக்களுக்குச் சோறுபோட வேண்டும்; கல்வியைப் பரப்ப வேண்டும்; சமுதாயக் கொடுமை வேண்டா! உண்ணச் சோறு இன்னும் அதிகமாக வேண்டும்; ஒவ்வொருவருக்கும் இன்னும் அதிகமான சந்தர்ப்பங்கள் வேண்டும்.

நம் நாட்டில் உள்ள இளைஞர்கள் ஆன முட்டாள்கள் ஆங்கிலேயரிடமிருந்து அதிக அதிகாரம் பெறுதற் பொருட்டுக் கூட்டங்களைக் கூட்டுகின்றார்கள். அது கண்டு ஆங்கிலேயர் நகைக்கின்றனர்; அவ்வளவுதான். எவன் சுதந்தரத்தை மற்றவர்களுக்கு அளிப்பதற்கு ஆயத்தமாக இல்லையோ, அவன் சுதந்தரத்தைப்பெற யோக்கியதை உடையவனுகான் அதிகாரம் யாவையும் ஆங்கிலேயர் உங்களுக்கே தந்து விடுவதாக வைத்துக் கொள்வோம்; என்ன ஆகும் தெரியுமா? அப்போது ஆதிக்கம் வகிப்போர் மக்களை அமுக்கி வைத்து அந்த அதிகாரத்தை மக்கள் பெறுமல் செய்து விடுவார்கள். அடிமைகள் அதிகாரம் கோருவது பிறரை அடிமைப் படுத்தவேயாம்

மெல்ல மெல்லக் காரியத்தைச் சாதித்தாக வேண்டும்; நமது சமய தருமத்தை மட்டிலும் வற்புறுத்துவதாலும் சமுதாயத்திற்குச் சுதந்தரம் தந்துவிடுவதாலும் இதைச் செய்து முடிக்க வேண்டும் இந்தியாவின் சமய தர்மத்துடன் பிணைந்துள்ளதாகி, ஐரோப்பியப் பாங்கில் இயங்கும் சமூகம் ஒன்றை நீவிர் ஆக்க இயலுமா? இது சாத்தியமாகுமா? சாத்தியமாகத்தான் இருக்க வேண்டுமென்பது என் நம்பிக்கையாகும். எனது பெரிய திட்டம் இதுதான். மத்திய பாரதத்தில் குடியேற்ற ஊர் ஒன்றை ஆரம்பிப்போம். அங்கு அவரவர் தம்தம் சொந்தக் கருத்துக்களைத் தனிச் சுதந்தரத்துடன் பின்பற்றி வரலாம். பின்னர், இச் சிறு முயற்சி பல பக்கங்களிலும் பரவி யாவற்றையும் மாற்றி அமைத்து விடும். இதற்கிடையில் மத்திய சங்கம் ஒன்றை அமைத்து இந்தியாவெங்கும் அதன் கிளைகளை ஏற்படுத்திக் கொண்டே போவீராக. சமயாதாரமான அடிப்படையில் மட்டுமே இப்பொழுது தொடங்குவீராக! முரட்டுத்தனமான சமூக சீர்திருத்தம் எதையும் இப்பொழுது பிரசாரம் செய்ய வேண்டா. முட்டாள்தனமான மூட நம்பிக்கைகளை மட்டும் ஆதரிக்க வேண்டா. பண்டைய மதாசாரியர்களான சங்கராசாரியர், இராமனுஜர், சைதன்யர் போன்றவர்களால் விதிக்கப் பட்டவாறு 'எல்லோருக்கும் புத்தியுண்டு; எல்லோரும் சமமே, என்ற பண்டைய அடிப்படையில் சமுதாயத்தைப் புதுப்பிக்க முயற்சி செய்வீராக!

ஊக்கத்தைப் பற்றியவராய் இருந்து யாங்கணும் பரப்பு வீராக. பணிபுரிக , பணிபுரிக. தலைமைதாங்கி மற்றவரை நடத்திச் செல்லும், பொழுதும் பணியாளாகவே ஒழுகுக! சுயநலமே இன்றித் திகழ்க! நண்பன் ஒருவன் மற்றொருவனைத் தனிமையிலே அவதூறு கூறுவதற்கு ஒரு பொழுதும் செவி சாய்க்காதீர் எல்லை யில்லாப் பொறுமை உடையவராக இருப்பீராக ; உமக்கு வெற்றி நிச்சயம். இந்த விஷயத்தில் மிக விழிப்பாக இருப்பீராக ! மற்ற வரை அடக்கி ஆட்டி மேய்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டா

நான் எப்பொழும் என் கடிதங்களை உமக்கே விலாச மிட்டு அனுப்பிவருவது காரணமாக, என் மற்ற நண்பர்களைவிட உமக்கு ஏதோ அதிக முக்கியத்துவம் இருப்பதாக நீர் எண்ணமிட வேண்டா. அவ்வாறு செய்ய முயல்கின்ற முட்டாளாக நீர் ஒருக் காலும் இருக்க மாட்டீர் என்பதை யான் அறிவேன். ஆனாலும், உமக்கு இவ்வாறு எச்சரிக்கை செய்வது என் கடமையென யான் உணருகிறேன் இத்தகைய முட்டாள்தனமான முயற்சிதான் திறுவன வேலையாவற்றையுமே கொன்று வீழ்த்துகின்றது. பணி புரிவீர் ! பணிபுரிவீர் ! ஏனென்றால், பிறரது நலத்துக்காக உழைப்பதுதான் உண்மையான வாழ்க்கையாகும்.

கபடம் கூடாது ; கரவு கூடாது ; போக்கிரித்தனம் கூடாது — இவற்றை அறவே அகற்றிவிட வேண்டும். இதுவே யான் விரும்பு வது ஆகும். நான் எப்பொழுதும், இறைவரையே நம்பியிருந்து வருகின்றேன். பகற் பொழுதின் பிரகாசம் போன்று விரிந்து நிற்கும் சத்தியத்தையே எப்பொழுதும் நம்பியிருந்து வந்துள்ளேன். பெயரும் புகழும் தேடிக் கொள்வதன் பொருட்டோ, சுயநலம் செய்வதற்கோ நான் கபட வேடமாக நடித்தேன் என்ற மாசு எனது மனச்சாட்சியில் படியுமாறு, நான் வாழ்ந்து மடிய விரும்ப வில்லை. அறநேர்மைக்கு மாறான ஒரு மூச்சும் விடுதல் கூடாது ; ஒழுக்கமுறையில் தீயதான அழுக்கு எதுவுமே இருத்தல் கூடாது.

உறுதியில்லாத சலனபுத்தி வேண்டவே வேண்டா , இரகசிய வித்தை என்று கூறிக்கொண்டு நடைபெறும் யோக்கிய மற்ற தன்மை வேண்டா ; ஒளி மறைவாக இயற்றப்படும் ஏமாற்று வேலை வேண்டா ; மூலை முடுக்குகளிலே போய் இருந்துகொண்டு எதையுமே செய்வது கூடவே கூடாது. குரு மகத்துவமானவர். எமக்குத் தனி முறையில் சிறப்பான அருள்காட்டியிருக்கிறார் என்ப தெல்லாம் வேண்டா ; அந்த அளவுக்கு வந்தால் குரு மகாத்து மாவேகூட வேண்டவே வேண்டா. தைரியமிக்க என் இளைஞர்காள்! முன்னேறிச் செல்லுங்கள் ! பணம் இருந்தாலும் சரி, இல்லா

விடினும் சரியே. மனிதர் உதவினாலும் சரி, மனிதரே இலர் ஆயினும் சரி; முன்னேறிப் போங்கள்! உம்மிடம் அன்பு உள்ளதா, இல்லையா? உமக்கு இறைவர் உள்ளாரா, இல்லாமல் போனாரா? முன்னேறிப் போங்கள்! பிளவுபட்ட மதிற்சுவரை மோதித்தாக்க முன்னேறிச் செல்லுங்கள்! எதுவுமே உம்மை எதிர்த்து நிறுத்த வல்லதாய் இல்லை.

எவையெல்லாம் உண்மைக்குப் புறம்பானவையோ, அவற்றையெல்லாம் அகற்றுவதில் மிக விழிப்புடன் இருப்பீராக! சத்தியத்தை விடாது பற்றிக் கொள்வீராக! அங்ஙனம் செய்தால் நாம் வெற்றியுறுவோம். மெதுவாக, ஆனாலும் இறுதியில் உறுதியாக வெற்றிபெறுவோம். நான் இங்கு இலன் எனின் எவ்வாறு வேலை செய்திருப்பீரோ, அவ்வாறே வேலை செய்துகொண்டே போவீராக!

ஆற்ற வேண்டிய பணிகள் யாவும் உம்முள் ஒவ்வொருவரையுமே சார்ந்ததென எண்ணி வேலை செய்வீராக! ஐம்பது நூற்றாண்டுக்காலம் உம்மீது கண் வைத்து உலகம் உம்மைக் கவனித்து வருகின்றது: இந்தியாவின் எதிர்காலம் உம்மையே சார்ந்துள்ளது. பணிபுரிந்து கொண்டே போவீராக! நான் எப்பொழுது திரும்பிவர இயலும் என்பது எனக்குத் தெரியாது. பணியாற்றுவதற்கு ஏற்ற பெரு வாய்ப்புள்ள களமாகும் இது. இந்தியாவில் மிகவும் அதிமாகச் செய்தால் மக்கள் வாய் திறந்து புகழுரை பேசுவார்கள். அவ்வளவுதான்; ஆனால், எந்தப் பணிக்காகவும் ஒரு காசு கூடக்கொடுத்து உதவமாட்டார்கள் அவர்கள்; அவர்களே பிச்சைக்காரர்களாய் இருக்கையில் அந்தக் காசைத் தான் அவர்கள் எங்கிருந்து பெறுவார்கள். பாவம்! மேலும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, ஏன் அதற்கும் மேலாகக் கூடப் பொது நலப் பணியாற்றும் ஆற்றலையே அவர்கள் இழந்து கிடக்கின்றார்கள். தேசிய சமுதாயம், பொதுப்பணி முதலிய கருத்துகளை இப்பொழுதுதான் கற்று வருகிறார்கள். எனவே யான் அவர்களைக் குறைகூறத் தேவை இல்லை. இன்னும் அதிகமாகப் பின்னால் வரைகின்றேன். என் ஆசீர்வாதங்களை ஏற்பீராக!

அன்புள்ள,

விவேகானந்தா

# 5. தமிழரசு நீதி வழங்கிய திறம்

[பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை]

தமிழர் தங்கள் நாடாளும் வேந்தர்களை மன்னர், அரசர் முதலிய பெயர்களால் குறித்தபோது இறை என்ற பெயரையும் குறித்து வழங்கினர். இறை என்ற சொல் இறுத்தல் என்னும் சொல்லடியாகப் பிறந்தது. இறை என்பது முதனிலை திரிந்த தொழிற் பெயர் என இலக்கணம் கூறப்படும் இறு என்பது முதனிலை. அது, தங்குதல், விடை சொல்லுதல், கடன் முதலிய வற்றைச் செலுத்துதல் என்று பொருள்படும். கண்ணகியும் கோவலனும் மதுரைப் புறஞ்சேரியில் இறுத்தனர் ; என் வினவுக்கு அவன் நேரிய விடையிறுத்தான், பாண்கடன் இறுத்த சேண்விளங்கு புகழோன் எனவரும் தொடர்கள் மேலே காட்டிய பொருள்வகை களை நன்கு விளக்கும்.

நாட்டாட்சி நன்கு நடைபெறுதற்குப் பொருள் இன்றியமை யாமையின் அதனை நல்குவது நாட்டுமக்கட்குக் கடன். அக் கடன் புரவுக் கடன் எனப்பட்டு வேந்தர்க்கு இறுக்கப்படுதலின் இறை யென்றும் வழங்கும். அந்த இறைப்பொருளைப் பெறுதற்குரி யனுதல் பற்றி அவ்வேந்தனை இறை என்பது ஒரு வழக்காறு. உயிர்ப்பொருள், உயிரில் பொருள் ஆகிய எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்து தங்கும் இறையாகிய கடவுள் போல வேந்தனது ஆணை நாடு முழுதும் நீக்கமற நிற்பதால், அவனையும் இறையெனக் கோடல் தகும் என்பது ஒரு கொள்கை. இனி, கடவுளாகிய இறைவன், செய்யப்படும் வினைகட்குரிய பயனை வினைமுதலாகிய உயிர்கள் நுகருமாறு செய்கின்முர் ; நல்வினை செய்த உயிர் இன்ப மாகிய பயனையும் தீவினை செய்தவுயிர் துன்பமாகிய பயனையும் நுகர்தல் வேண்டும் என முறை வகுத்து, அப்பயன்கள் தாமாகவே சென்று வினைமுதலைச் சாரமாட்டாமை கண்டு அவற்றைச் செய்த உயிரை அடையுமாறு பண்ணுவான்; அதனுல் அக்கடவுளைப் "பால் வரை தெய்வம்" எனத் தொல்காப்பியம் கூறுகிறது அதுபோலவே மன்னனும் நல்வினை செய்தாரைப் பாராட்டி இன் புறுத்தியும் தீவினை செய்தாரை ஒறுத்துத் துன்புறுத்தியும் ஒழுகு தலின் இறையெனப் படுகின்றுன் என்பதும் உண்டு. நாட்டு மக் கட்குத் தலைவனுகிய வேந்தன், எட்டுத் திக்கினும் நின்று உலகம் காக்கும் இந்திரன், திருமால் முதலிய "உலக பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறையென்முர் ; "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே யென்னும்' என்று பெரியாரும் பணித்தார்'' என்று பரிமேலழகர் கூறுவர். வேறு

சிலர், வேந்தர்கள் ஆதியில் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டு அவ ரால் ஆட்சிபுரியுமாறு ஏற்படுத்தப்படட உரிமையுடையராதலால் வேந்தர் இறையெனப் பட்டனர் என்பர். எனினும், திருவள்ளுவர், இன்னோரன்ன கருத்துக்களால் நாம் அலைபபுண்டு மயங்காவாறு "முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்'' என்றார்.

முறையென்பது அளி, தெறல் என இருவகைப்படும். நல்வினை செய்தாரது நலத்தை அறிந்து பாராட்டி அருள் செய்வது அளி; தீது செய்தோருடைய தீமையை அறிந்து, அந்நெறியைக் கைவிட்டுத் திருந்தி நன்னெறிக்கண் நிற்குமாறு ஒறுத்தல் தெறல் என்பதாம். இம்முறையை நீதி என வடநூல்கள் குறிக்கின்றன, தமிழ் நூல்கள் செங்கோன்மை, நடுவுநிலைமை, செம்மை, செபபம் என்ற சொற்களால் இடத்துக்கேற்ப வழங்கும். அரசன் செய்யும் முறை "ஒருபாற் கோடாது செவ்விய கோல் போறலின் செங்கோல் எனப்பட்டது'' என்று பரிமேலழகர் கூறுவர்.

இம்முறையை வேந்தர் செய்யும் திறமே நீதி வழங்கும் செய லாகும். இதனை, "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை'' என்று திருவள்ளுவர் செப்பு கின்றார். முறை செய்தலும் குறைநீக்கலும் அரசு புரியும் ஆட்சி வினையாகும் குறை நீக்கம் வேண்டிய மக்கட்கு ஆவன ஆராய்ந்து செய்தல் நேர்முக ஆட்சியின்பாற்படும். மக்கள் முறை வேண்டி வருவது வழக்கு எனப்படும். ஒவ்வொரு வழக்குக்கும் தொடை, விடை என இருபக்கம் உண்டு தொடையை வாதம் எனவும் விடையைப் பிரதிவாதம் எனவும், வழக்குத் தொடுப்போரை வாதி எனவும், அவர் காட்டுவனவற்றை எதிர்த்து விடுப்போரை பிரதி வாதி எனவும் இந்நாளில் வழங்குகின்றனர். இருவர்பாலும் உள்ள உண்மைகளைக் காய்தல் உவத்தலின்றி நோக்குவது ஓர்தல்; இரு வருள் யாவர்மாட்டும் கண்ணோட்டமின்றி ஆராய்வது கண்ணோ டாமை; சான்றுகளையும் நூனெறிகளையும் துணைக்கொண்டு மெய்ம்மை பொய்மைகளைக் கண்டுணர்தல் தேர்தல்; காணப்பட்ட குணம் குற்றங்களின் வன்மை மென்மை நோக்கி அளியும் தெறலும் செய்தல் இறைபுரிதலாகும்.

இங்ஙனம் இறைபுரியும் வேநதர் மக்களினத்தவராதலால், மக் கள்பால் இயல்பாகக் காணப்படும் சினம், இரக்கம், அன்பு முதலி யன அளவு கடந்து நின்று அறிவை மறைத்துக் குற்றம் விளைவிக்கும். வேந்தர் இக் குற்றங்கட்குத் தம்மை இடமாக்கிக் கொள்ளல் கூடாது எனத் தமிழச் சான்றோர் எடுத்தோதுகின்றனர் "சினனே காமம் கழிகண்ணோட்டம் அச்சம் பொய்ச்சொல் அன்புமிக

வுடைமை தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து, அறம்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது'' (பதிற். 22) என நீதி வழங்கும் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்ற சேரமன்னற்குப் பாலைக் கௌதமனார் கூறுகின்றார். சினம் காமம் முதலியன முற்றவும் நீக்கத் தகுவனவல்லவாய் அளவோடு நின்றவழி வாழ்க்கைக்கு வேண்டுவனவாய் இருப்பதால் கழிசினம் கழி காமம் முதலாயின விலக்கப்பட்டன.

நீதியாகிய முறை செய்யும் மேலோர் ஒரு குற்றம் தம் கண் முன்னே நிகழினும், தாம் கண்டதே கொண்டு குற்றம் செய்தார்க் குத் தண்டனை விதித்தல் கூடாதென்பது பழந்தமிழர் அரசு முறை. அதனையும் உரிய நெறியில் நன்கு ஓர்ந்து கண்ணோடாது குற்றத்தின் வன்மை மென்மை தேர்ந்து இறைபுரிதல் வேண்டும். சோழன் நெய் தலங்கானல் இளஞ்சேட் சென்னியென்ற வேந்தன் முறை வழங்கக் கண்ட ஊன்பொதிபசுங்குடையார் என்ற சான்றோர் மிகவும் வியந்து, ''நீ மெய்கண்ட தீமை காணின் ஒப்பநாடி அத்தக ஒறுத்தி' (புறம், 10) என்றதனால் இதனை அறிகின்றோம்.

வரலாற்றுக் காலத்துக்கு முன்பு காவிரி பாயும் சோழ நாட்டில் ஒரு சோழன் ஆண்டுவந்தான். அவனைச் சேக்கிழார் மனுச் சோழன் என்று பெயர் குறிக்கின்றார். அவனுக்கு ஒரே மகன் உண்டு. ஒருகால் அவன் தேரேறிச் சென்று கொண்டிருக்கையில், 'இளங்கன்று பயமறியாது' என்ற பழமொழிக்கொப்ப ஆன்கன்று ஒன்று துள்ளி அவன் தேர்க்காலில் அகப்பட்டு இறந்தது. ஆன் கன்றைக் கொன்ற குற்றத்துக்காகச் சோழன் தன்மகன் எனக் கண்ணோடாது கொலை செய்து முறை புரிந்தான். இவ் வரலாற்றை இடைக்காலச் சோழவேந்தரவையில் அமைச்சராயிருந்த சேக்கிழார் சிறிது விரியவுரைக்கின்றார்.

தன் கன்று இறந்ததைக் கண்ட தாய்ப்பசு கண்ணீர்விடடுக் கதறி மன்னவன் கோயில் வாயிலையடைந்து அங்கு வழக்குரைப் போர் வரவுணர்த்தும் பொருட்டுக் கட்டப்பட்டிருந்த மணியைத் தன் கொம்பினால் முட்டியடித்தது. அதுகேட்ட வேந்தன் அவை யினர் வந்து பார்த்துப் பசு நிற்பது கண்டு வியந்து வேந்தற்கு உரைத்தனர். வேந்தனும் அது கண்டு மருண்டு நிற்ப, அங்கே கூடியிருந்தோர் நிகழ்ந்தது கூறினர். வேந்தற் குண்டான துயரத் துக்கு எல்லையில்லை . மிகவும் வருந்தி, ''மன்னுயிர் புரந்து வையம் பொதுக் கடிந்து அறத்தில் நீடும் என் நெறி நன்று'' எனத் தன்னையே இகழ்ந்து, ''என் செய்தால் தீரும் ?'' என்று வினவினான். அவனது வருத்தமிகுதி கண்ட அமைச்சர் அவனைத் தேற்றி, ''ஆன் கொலை புரிந்தார்க்கென மறைநூல்கள் சில முறைகளை விதித்

துள்ளன; அவற்றின்படி ஏற்றது செய்வது வழக்கு' என்று சொல்லி அதனை விளங்கக் கூறினர். அவர் உரையால் சோழன் மனம் அமைதி கொள்ளவில்லை. 'வழக்கென்று நீவிர் கூறுகின்றீர்; அது கன்றை யிழந்து அலறும் ஆவின் மனநோயைத் தீர்க்கும் மருந்தாகுமா? யான் என் மகனை இழக்கின்றேன் என நினைந்து நீங்கள் மொழிவது சழக்கு; அதற்கு நான் இசைந்தால் தருமம் சலித்தொழியும்'' என்று சொன்னான். மேலும் அவன் கூறலுற்று, "என் மகன் செய்த குற்றத்துக்கு மறைநூற் சடங்கு செய்து விட்டு வேறொருவன் அது செய்தால் அவனை மறைநூன் முறையென்று கொல்வேனானால், மனுவேந்தன் அறத்தை அழித்தான் என்னும் பழி இவ்வுலகில் நிலைபெற அன்றோ மொழிகின்றீர்கள்!'' என்றானாக, அமைச்சர்கள் "இப்படியே முன்னாளில் முறை செய்யப்பட்டுள்ளது; இதற்காக வேந்தன் மகனைக் கொல்வது மரபன்று' என்று வாதித்தனர். முடிவில் வேந்தன், அவர்களை நோக்கி, "எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித்தாம் இடரால் வெவ்வுயிர்த்துக் கதறி மணியெறிந்து வீழ்ந்தது?'' என்று கேட்க, ஒருவரும் விடை இறுக்கமாட்டாராயினர். அதனால் அவன், தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொல்லுமாறு பணிக்க, அவன் ஆணை பெற்றுச் சென்ற அமைச்சன், மறுத்தற்கு அஞ்சித் தன்னுயிரையே மாய்த்துக்கொண்டான். அதனால் சோழன் மனம் அயராது தானே தேரைச் செலுத்தித் தன் மகனைக் கொன்றான். இதனைச் சேக்கிழார்,

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதுமுணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடன்என்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற்று எளிதோதான்''

என்று பாடிக் காட்டுகின்றார். இச் சோழன் இவ்வாறு முறை செய்த திறத்தை வியந்து இளங்கோவடிகள், வழக்குரைத்த கண்ணகி கூற்றில் வைத்து,

"வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியில் மடித்தோன்'

என்று பாராட்டுகின்றார்

புகார் நகரத்தில் இருந்து ஆட்சி புரிந்த சோழ மன்னன் ஒருவனுக்கு உதயகுமரன் என்றொரு மகன் தோன்றி, அங்கே புத்த தருமத்தை மேற்கொண்டு அறப் பணி செய்தொழுகிய மணிமேகலையை விரும்பி அவளைத் தன் கைப்படுத்தற்காக அவளிருந்த இடத்திற்குச் சென்றான்; அப்போது அவள் காயசண்டிகை யென்ற

ஒருத்தியின் உருக்கொண்டிருந்தமையின் அச்சண்டிகையின் கணவனே அரசகுமரனைக் கண்டு மனம் பொறாது தன் வாளால் கொன்று நீங்கினான். இச்செய்தி வேந்தனுக்குத் தெரிந்தது; நிகழ்ந்தவற்றையும் ஆராய்ந்தறிந்தான். ஆயினும் அதனை ஆய்ந்து முறை செய்ய வேண்டியது அரசின் கடனாகவும், விஞ்சையன் செய்தது தவறு என்று தேர்ந்து, "யான் செயற்பாலது இளங்கோன் தன்னைத் தான் செய்ததனால் தகவிலன் விஞ்சையன்' என்றான் இதனால் முறைசெய்து நீதி வழங்குவதற்கென்று அமைந்த அரசரது செயலை, அவரல்லாத ஏதிலார் மேற்கொண்டு ஆற்றுவது நேர்மையன்று என்பது தமிழ் மக்களிடையே நிலவிய கொள்கையாதலைக் காணலாம். அன்றியும், அச்சோழன் உதய குமரன் செயலுக்கு நாணி, "மகனை முறை செய்த மன்னன் வழி ஓர் துயர்வினையாளன் தோன்றினான் என்பது வேந்தர்தம் செவியுறுவதன் முன்னம் அவனை ஈமத்தேற்றுக" எனப் பணித்தான். அஃது அவனது மானவுணர்வைக் காட்டுவது ஒருபுறம் நிற்க, மணிமேகலை வேறொருவன் மனைவியின் உருக்கொண்டு திரிந்த குற்றத்தை எண்ணி, "கணிகை மகளையும் காவல் செய்க" என்று கட்டளையிட்டான். இதனால் நீதியின் அமைதியை நிறுத்ததற்கண் தமிழரசு எத்துணைக் கருத்தாக இருந்த தென்பது விளங்கும்.

ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொலை செய்தது தவறு என்பதைக் கண்ணகி வழக்குரைத்து நிறுவிய போது, ஓர்ந்து கண்ணோடாது உண்மையைத் தேர்ந்து இறை புரிய வேண்டிய தான் தவறியதற்கு நொந்து, "பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன்; யானே கள்வன்" என்று வாய்வெருவி, "மன்பதை காக்கும் தென்புலம் காவல் என் முதல் பிழைத்தது" என்று வருந்தி உயிர் துறந்தது நீதிநெறிக்கண் அத்தமிழ்வேந்தன் உள்ளம் ஒன்றியிருந்த திட்பத்தையே நமக்குத் தெரிவிக்கிறது. இச் செய்தியைச் சேர வேந்தனான செங்குட்டுவன் கேள்வியுற்றபோது, தான், நீதி வழங்குமிடத்துத் தவறிய கொடுமை சென்று வேற்று வேந்தர் செவிப்படுமுன் பாண்டியன் தான் இறந்த செய்தி பரந்து வெளிப்பட வேண்டுமென வீழ்ந்துபட்டது நன்றாயிற்று என்ற கருத்துப்பட, 'எம்மோரன்ன வேந்தர்க்குற்ற செம்மையின் இகந்த சொல் செவிப்புலப்படாமுன், உயிர் பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென உயிர் விட்டது நன்று என்றும், "வல்வினை வளைத்த கோலைச் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது' என்றும் கூறினான். இதனால் பண்டைத் தமிழரசர் நீதி வழங்கற்கண் கொண்டிருந்த நேர்மைத் திறம் இனிது விளங்குதலைக் காணலாம்.

பாண்டி நாட்டில் தங்கால் என்னும் ஊர் சங்க காலத்தேயே சான்றோர் பலர் தோன்றிய சால்பும் செம்மையும் உடையது. அதன்கண் வார்த்திகன் என்றொரு வேதியன் வாழ்ந்தான். அவனுக்குத் தக்கிணமூர்த்தி என்ற பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். அவன் சிறுவனாயிருந்த போது பராசரன் என்ற வேதியன் சேரநாட்டு வேந்தன் நல்கிய பெருஞ்செல்வத்தைப் பெற்று வருகையில் தங்காலில் தங்கிச் சிறுவர் விளையாட்டுக் குழுவில் இருந்த தக்கிணமூர்த்தி வேதம் ஓதுதலில் ஏனைச் சிறுவர் அனைவரினும் மேம்பட்டு நிற்பது கண்டு வியந்து, தான் பெற்ற பெருவளத்தை அவற்கு அளித்துவிட்டுச் சென்றான் திடீரென்று வார்த்திகன் பெரும் பொருள் கொண்டு விளங்குவது கண்டு அழுக்காறு கொண்ட சிலர், "படுபொருள் வெளவினன்" எனப் பொய்க்குற்றம் காட்ட, அரசியல் ஏவலர் வார்த்திகனைப் பற்றிச் சென்று சிறையிட்டனர். பின்னர் அது பாண்டி வேந்தனுக்குத் தெரிந்தது; ஏவலர் உண்மை நிலையை முறைப்படி ஆராய்ந்து தெளியாது சிறையிட்டமைக்கு மனம் பெரிதும் வருந்தி, வார்த்தி கனை, "நீர்த்தன்று இது" எனச் சிறை விடுவித்து,

" அறியா மாக்களின் முறைநிலை திரிந்தஎன்
இறைமுறை பிழைத்தது பொறுத்தல் நும்கடன்"

எனப் பணிந்து மொழிந்து, பெருமையாலல்லது பிறவற்றால் வணங் காத தன் மணிமுடி வார்த்திகன் காலில்பட வணங்கி நின்றான் தாமேயன்றித் தம் ஆணைவழி நிற்கும் ஏவலர் தவறு இழைப்பினும் தமது நீதி நெறிவழுவிய தென்பது தேர்ந்து அதற்காக மனமழிந்து வருந்தியசெயல் இந்நிகழ்ச்சியால் விளக்கமாகிறது. இவ்வாறே இடைக்காலத்தில் ஆட்சி புரிந்த சோழ பாண்டியர்கள் நீதி வழங்கு தற்கண் மிக்க கண்ணும் கருத்துமாயிருந்தமை அவர்களுடைய கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பெருகவுள்ளன; அவற்றுள் வேள்விக்குடிச் செப்பேடுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சங்ககாலப் பாண்டியனான பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதி, கொற்கை கிழான் நற்கொற்றன் என்பவனுக்கு வேள்விக் குடியை நல்கினனாக, இடைக் காலத்துக் களப்பிரர்களால் அவ்வழு தியின் ஆணை புறக்கணிக்கப்பட்டது; பின்னர், பாண்டியன் நெடுஞ் சடையன் என்னும் வேந்தன்பால், நற்கொற்றன் வழியினனாகிய காமக்காணி நற்சிங்கன் முறையிட, அவன் அம்முறையீட்டை நன்கு ஆராய்ந்து, "மேனாளை நம் குரவரால் பால் முறையில் தரப் பட்டதை எம்மாலும் தரப்பட்டது" (Epigraphia Indica, Vol. XVII No. 16, என்று ஆணை தந்து, "கொற்கை கிழான் காமக்காணி நற் சிங்கற்குத் தேரோடும் கடற்றானையான் நீரோடு அட்டிக் கொடுத்தான்" என்பது வேள்விக்குடிச் செப்பேடு.

# 6. நாடும் பண்பாடும்

[பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார்]

நடராசன் என்பவர் தம் அருமை மைந்தன் இராம லிங்கத்தைச் சிறந்த ஓர் உயர்நிலைப்பள்ளியில் சேர்க்க விழை கின்றார். அப்பள்ளி பெரிய நகரத்திலும் இல்லை. அதன் கட்டட மும் மிகக் கவர்ச்சிகரமாய்ப் பெரிதாக அமையவில்லை. ஒரே ஒரு கட்டடத்தில் அஃது அமைந்துள்ளது. போதிய இடமின்மையால் ஓலைக் கூரை வேய்ந்த அறைகளில் சில சிறு வகுப்புக்கள் நடத்தப் படுகின்றன. இப்படித் தோற்றம் அளித்தும் அப்பள்ளியினை ஏன் சிறந்த பள்ளியாக மக்கள் போற்றவேண்டும் என்பதை ஆராய்வோம்.

அப்பள்ளி மாணவர்களுக்குச் சமய நீதிபோதனை அளிக்கப் படுகின்றது. அதனால் அவர்கள் நல்லொழுக்கத்தோடு வாழ் கின்றார்கள்; நன்றாகப் படிக்கின்றார்கள். அப்பள்ளியின் ஆசிரியர் களும் பொறுப்புணர்ச்சியோடு உண்மையாக உழைக்கின்றார்கள். இதனால் பல பள்ளிகள் கலந்துகொள்ளும் விளையாட்டுப் போட்டிகள், சொல்வன்மை இன்னிசை கட்டுரை ஓவியம் முதலிய போட்டிகளில் அப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு முதல் பரிசு பெறுகின்றனர். மேலும் சாரணர் இயக்கம், படைக்கலப் பயிற்சி, இளஞ்செஞ்சிலுவைச் சங்கம், சிறு சேமிப்புத் திட்டம், யோகாசனப் பயிற்சி, சுற்றுலாப்பயணங்கள், பொருட் காட்சி அமைத்தல் முதலியவற்றிலும் அப்பள்ளி மாணவர் பயிற்சி பெற்றுப் பெயரும் புகழும் பெற்றுள்ளனர். இதுவன்றி அரசாங்கப் பள்ளி இறுதித் தேர்வில் கலந்து கொண்ட அப்பள்ளியின் 200 மாணவர்களுள் 180 மாணவர் வெற்றி பெற்றனர். மேலும் காந்தியடிகள், தாகூர் முதலியோர் காட்டிய கல்வி முறைப்படி அப்பள்ளியில் தொழிற் கல்வியும் இடம் பெற்றுள்ளது. இத்தகைய காரணங்களால் அப்பள்ளி சிறந்த பள்ளியாகப் போற்றப்பட்டு வருகின்றது. எனவே அப்பள்ளியின் சிறப்புக்கு அப்பள்ளியிலுள்ள மாணவரும் ஆசிரியர்களும் பள்ளி ஆட்சி யாளரும் காரணம் என்பதை அறிகின்றோம். இதைப்போலவே ஒரு நாடு சிறந்த நாடு எனப் பெயர்பெறுதற்கு அந்நாட்டிலுள்ள நற்பண்பும் நற்செயலுமுடைய மக்களே காரணமாவர்.

ஒரு நாட்டிற்குப் பெருமை அதன் மக்களால் ஏற்படுகின்றது என்பதை ஔவையாராகிய அருந்தமிழ் மூதாட்டியார் புற நானூற்றில் நன்கு விளக்கியுள்ளார். ஔவையார் நிலத்தை நோக்கி, "நிலமே நீ ஒருபுறம் நாடாக இருக்கலாம் அல்லது ஒரு புறம் காடாக இருக்கலாம். ஓரிடத்தில் பள்ளமாக இருக்கலாம்;

மற்ருேர் இடத்தில் மேடாக இருக்கலாம். எவ்விடத்தில் நல்ல மக்கள் வாழ்கின்ருர்களோ அவ்விடத்தில் நீயும் நல்லே எனப் போற்றப்படுகின்ருய். உனக்கு எனத் தனிப் பெருமை இல்லே. உன் பெருமை எல்லாம் உன்னிடத்தே வாழும் மக்களேப் பொறுத்த தாகும். நிலமே நீ வாழ்வாயாக'' என்ற கருத்தில்,

"நாடா கொன்ருே காடா கொன்ருே
அவலா கொன்ருே மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லே வாழிய நிலனே'' (புறநானூறு-187)

எனப் பாடியுள்ளார். எனவே ஒரு நாட்டிற்குப் பெருமை அங்கு வாழும் நற்பண்பும் நற்செயலுமுடைய மக்களேப் பொறுத்ததாகும் என்பது அறியக்கிடக்கின்றது. "தீய நிலமாயினும் நல்லோர் உறையின் நன்றெனவும், நல்ல நிலனேயாயினும் தீயோருறையின் தீதெனவும், தன்னிடத்து வாழ்வார் இயல்பல்லது தனக்கென ஓரியல்புடையதன்று என நிலத்தை இழித்துக் கூறுவதுபோல உலகத்து இயற்கை கூறியதாயிற்று'' எனப் புறநானூற்றுக் குறிப்புரை ஆசிரியரின் விளக்கம் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

"பாருக்குள்ளே நல்ல நாடு — எங்கள்
பாரத நாடு''

எனப் பாடியுள்ளார் தேசியகவி பாரதியார். பாரதநாடு நல்ல நாடு எனக் கூறுதற்குக் கவிஞர் காட்டும் காரணங்களேக் காண்போம்.

"ஞானத்தி லேபர மோனத்திலே — உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையி லேஉயர் நாடு.''

"தீரத்தி லேபடை வீரத்திலே — நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே
சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு
தருவதி லேஉயர் நாடு.''

ஞானம், மானம், அன்னதானம், கானம் (இசை), கவிதை, வீரம், அன்பு, ஈகை, சாத்திரங்கள் முதலியவற்றில் சிறந்துள்ள நன்மக்கள் வாழும் நாடு பாரதநாடு எனக் கூறித் தாம் பிறந்த நாட்டினேப் பாராட்டுகின்ருர் பாரதியார்.

ஒரு நாடு சிறப்புற்று விளங்குவதற்கு அமைய வேண்டியவை எவை என்பதை இனி ஆராய்வோம். ஒரு நாடு குறையாத விளேச்

சலைப் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய குறையாத விளைவு நாட்டிற்குத் தேவையெனில் அதனை ஆக்கவல்ல உழவர்கள் நாட்டில் மலிந்திருத்தல் வேண்டும். உழவு மிகுந்தால் உணவுப் பொருள்களும் மிகுதிப்படும். உணவுப் பொருள் மிகுதியானால் நாட்டில் வறுமை ஒழியும். அதனால் நாட்டில் செல்வர் மிகுந் திருப்பர். கலத்தினும் காலினும் அரும் பொருள்தரும் வணிகரும் நாட்டில் பெருகி இருப்பர். இதனால் அரசர்க்கும் மக்களுக்கும் உரிய பொருள் பெறும் வழிகள் கூறப்பட்டன. கல்வியும் ஞானமும் நற்பண்புகளும் அமைந்த அறிவோர்கள் நாட்டில் இருப்பின் அவர்கள் மக்களை நல்லாற்றுப்படுத்துவர் என்பது ஒருதலை. இதனை,

" தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு "

என்ற வள்ளுவர் வாய்மொழி விளக்குதல் காண்க. எனவே குறை யாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வம் உடை யவரும் கூடியுள்ள நாடே சிறந்த நாடாகும் என்பது பெறப்படு கின்றது. பூம்புகார் நகரத்தின் வளத்தினை விளக்கிக் கூறும் கீழ்க் காணும் சிலப்பதிகார வரிகள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன :

" உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழுங்குகடல் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும்பொருள் தரூஉம் விருந்திற் றேஎம்
ஒருங்குதொக் கன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினுங் காலினுந் தருவன ரீட்ட.''

புகார் நகரில் அரசரும் விரும்பும் செல்வம் மிக்க வணிகர் பலர் வாழ்ந்தனர். சிறந்த பொருள்களைத் தரும் புதுமையுடைய தேயங்கள் ஒருங்குகூடி யிருந்தாற்போல, புகாரில் கிடைக்கும் வளப்பமுடைய பல பண்டங்கள், உலகம் முழுதும் ஒருசேர வரினும் வழங்கக் குறையாதனவாக மிக்கு விளங்கின என்பர் இளங்கோவடிகள்.

ஒரு நாட்டில் விளைச்சல் குறைவால் உணவுப் பொருள்கள் குறையுமாகில் அந்நாட்டின் மக்களுள் பலர் போதிய உணவு இன் மையால் பசியால் வாடி வருந்துவர். மிக்க குளிர், மிக்க வெப்பம், தீக்காற்று, உண்ணப்படும் உணவினால் உண்டாகும் தீமை முதலிய வற்றால் நாட்டில் மக்களுக்குப் பிணி தோன்றுதல் கூடும். இவை களேயன்றி, புறத்திலிருந்து வந்து அழிவுசெய்யும் பகைவரும் ஒரு

நாட்டிற்கு உண்டு. எனவே பசியும் பிணியும் பகையுமின்றி இனிது நடப்பதே சிறந்த நாடாகும் என்பது அறியக்கிடக்கின்றது. இதனை

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு "

என்ற திருக்குறளால் அறிகின்றோம். பசியும் பிணியும் பகையும் இல்லாத நாடே சிறந்த நாடு என்பதனைக் கீழ்காணும் சிந்தாமணிச் செய்யுளாலும் அறியலாம்.

" ஒன்றுடைப் பதினை யாண்டைக் குறுகடன் இறைவன் [விட்டான்
இன்றுளீர் உலகத் தென்றும் உடனுளீர் ஆகி வாழ்மின்
பொன்றுக பசியும் நோயும் பொருந்தலில் பகையும் என்ன
மன்றல மறுகு தோறும் மணிமுரசு ஆர்த்த தன்றே.

இதே கருத்தினை இளங்கோவடிகளும்,

" பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி "

எனக் கூறியது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. பசியின் கொடுமையால் சில மக்கள் பிச்சை எடுப்பதைக் காண்கின்றோம். சிலர் நல்ல உடல்நலம் பெற்றிருந்தும் மானத்தைவிட்டுப் பிச்சை எடுப்பது சாலவும் இழிந்த செயலாகும். அவர்கள் இஃதை ஒரு தொழிலாகக் கருதுகின்றனர். அண்மையில் நம் பாரத நாட்டில் சில மாநிலங் களில் பிச்சை எடுப்போரைத் தண்டிப்பதற்கு அரசியல் சட்டம் இயற்றியுள்ளனர். அத்தகைய சட்டம் தமிழ் நாட்டிலும் இயற் றப்படுதல் நலம் பயப்பதாகும். பிச்சை எடுத்தலின் இழிவினை விளக்கவந்த திருவள்ளுவர், பிரமன் சிலரைப் பிச்சை எடுத்துப் பிழைக்குமாறு படைத்தானாயின் அவனும் அவர்களைப்போல் எங்கும் சுழன்று கெடுவானாக, என்ற கருத்தில்,

" இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் "

எனக் கூறியுள்ளார். மக்கள் பசியின்றிச் சிறக்க வாழவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்த வந்த பாரதியார்,

" இனியொரு விதிசெய் வோம் — அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம் "

என வீர முழக்கம் செய்துள்ளார். ஒருவன் தான் உண்பதனைப் பசித்த உயிர்களுக்குப் பகுத்துக்கொடுத்துத் தானும் உண்ணுதல்

அறநூலை உடையார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றினும் தலையாய அறம் என்பது பொய்யாமொழியாகும்.

கோசல நாட்டின் சிறப்பினை விளக்கவந்த கம்பர், அந்நாட்டில் கொடைச் சிறப்புத் தெரிவதில்லை என்பர். ஏனெனில் அந்த நாட்டில் வறுமை என்பதே இல்லையாம். இதே கருத்தினை "கொள்வாரிலாமைக் கொடுப்பார்களு மில்லைமாதோ" எனக் கம்பர் அயோத்திமாநகரச் சிறப்பினைக் கூறும்போது குறிப்பிட்டுள்ளார். மேலும் பகைவர் கோசல நாட்டில் எதிர்த்துப் போர் செய்ய வருவதில்லை. அதனால் நாட்டு மக்களின் வீரச் சிறப்பும் அறிவதற்கில்லை. அந் நாட்டு மக்கள் பொய் பேசுவதில்லையாதலின் அங்கு உண்மையின் சிறப்பும் தெரிவதில்லை. அதுவன்றி மக்கள் பெரியோரை அடுத்துக் கேள்வி ஞானம் பெற்றதால் அறிவின்மை என்பதே அந் நாட்டில் இல்லை எனக் கோசல நாட்டின் சிறப்பினைக் கூறியுள்ளார் கம்பர். இதனைக் கீழ்க்காணும் செய்யுள் விளக்குதல் காண்க.

"வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்."

சிலர் வறுமையுற்றிருந்தாலும் தம் வாழ்க்கையை வறுமையிற் செம்மையாக நடத்துவதுண்டு. அவர்கள் பிறர் பொருள் கொடுத்தாலும் தம் மானம் கருதி அவைகளை வாங்கமாட்டார்கள். இதனைப் புறநானூற்றில் கழைதின் யானையார் என்ற புலவர் கீழ்க்காணும் வரிகளில் நன்கு விளக்கியுள்ளார்.

"ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று."

பகையரசர் நாட்டில் படையெடுத்து நாட்டை அழிக்காமல் பாதுகாப்பதற்கு மணிபோன்ற நிறத்தினையுடைய நீர் அரணும், வெட்ட வெளியான நில அரணும், மலை அரணும், குளிர்ந்த நிழலையுடைய காட்டரணும் ஒரு நாட்டிற்கு அமைந்திருத்தல் வேண்டும். நம் பாரத நாடான இந்தியாவுக்கு வடக்கில் இமயமலையாகிய மலையரணும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் நீர் அரண்களாகிய கடலும் இயற்கையாக அமைந்திருப்பது நம் தவப்பயனேயாகும்.

" செல்வம் விளையுள் பல்வளம் செங்கோல்
கொல்குறும் பின்மை கொடும்பிணி இன்மையென்று
இவ்வகை ஆறும் நன்னாட் டமைதி''

என்ற பிங்கலந்தையின்படி இங்குக் கூறப்பட்ட ஆறும் நாட்டிற்கு அமைதியைத் தருவனவாம். எனவே, உறுபசியும் பிணியும் பகையும் இல்லாது விளங்குவதே ஒரு நாட்டிற்குச் சிறப்பாகும் என்பது அறியக்கிடக்கின்றது. இனி நாட்டில் வதியும் மக்களின் பண்பாட்டினை ஆராய்வோம்.

மக்களுள் சிலரேனும் சிறந்த பண்பாட்டுடன் பண்புடையவர்களாக வாழ்வதால்தான் இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது. அவர்கள் இல்லையெனில் உலகமே அழிந்துபோயிருக்கும் என்கின்றார் திருவள்ளுவர்.

" பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

என்பது குறள். எனவே, நாட்டின் நலனுக்குப் பண்புடையார் இன்றியமையாதவராவர். இப் பண்புடையாளரின் பண்புகள் யாவை என்பதை நோக்குவோம். அவர்கள் இந்திரர்க்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அதனை இனிதெனக் கொண்டு, தனித்து உண்ணாது பிறருக்குக் கொடுத்து உண்பர். இஃது அவரது ஈகைப் பண்பினைக் காட்டுவதாகும்; அவர்கள் யாவரிடத்தும் அன்பு காட்டுவர்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அதனைப் போக்க முயல்வர்; புகழ் கிடைப்பதாயின் தம் உயிரையும் கொடுப்பர்; பழியெனின் அதனால் உலகம் முழுவதும் பெறினும் கொள்ளார்; எத்தொழிலையும் சிந்தித்து ஆராய்ந்து செய்வர். அதனால் அவர்களுக்கு மனக்கவலை தோன்றுவதில்லை. இத்தகைய அரிய பண்புகளைப் பெற்றுத் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பண்புடையாளர்களைப் பெற்றுள்ளதால் இவ்வுலகம் நிலைத்துள்ளது எனக் கூறுகின்றார், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி. இதனைக் கீழ்வரும் புறப்பாட்டால் அறிக.

" உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே ''

பல நற்குணங்களால் நிறையப்பெற்று அவைகளைத் தம் வாழ்க்கையில் கையாளும் தன்மையுடைய சான்றோரால் நாடு நலம்பெறும். சுற்றத்தார்மேலே யல்லாமல் பிறர்மேலும் உண்டாகிய அன்பும், பழிபாவங்களில் நாணுதலும், எவர்க்கும் வேண்டிய வேண்டியாங்கு ஈதலும், பழகியவரிடத்துக் கண்ணோட்டமும், எவ்விடத்தும் உண்மை கூறுதலும் என இவை ஐந்தும் சால்பு என்னும் கட்டடத்தைத் தாங்கும் தூண்களாகும் என்பர் வள்ளுவர். இதனைக் கீழ்க்காணும் குறள் விளக்குவதாகும் :

" அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்."

மக்கள் தொடர்புடையாரிடத்துக் காட்டும் அன்புடன் பிற உயிர்களிடத்தும் அருள் உள்ளம் படைத்தல் வேண்டும். குருடனாக உள்ள ஒரு பிச்சைக்காரனை நாம் காணும்போது நம்மால் இயன்ற உதவியை நாம் அவனுக்குச் செய்ய வேண்டும். கண் எதிரில் பார்க்கும் ஒருவனிடத்தில் நமக்கு அன்பு இல்லையாயின் நாம் காணாத கடவுளிடத்து நமக்கு அன்பு எவ்வாறு தோன்றும் என்ற கருத்தில்,

" He who has no love for the person whom he has seen
Cannot love God whom he has never seen" (Bible)

என விவிலிய நூல் கூறுகின்றது.

ஈகையின் இன்றியமையாமையை விளக்குதற்கு,

" ஈயென்று நானொருவ ரிடம்நின்று கேளாத
இயல்பும் என்னிடம் ஒருவர் ஈது
இடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமும் '

வேண்டும் எனத் தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்திலுள்ள கந்தப்பெருமானை வேண்டுகின்றார் இராமலிங்க அடிகளார்

" இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாங் கடுநர கங்கள் வைத்தார் "

என்பது அப்பர் வாக்கு 'இறைவன் நமக்கு அளித்த பொருளுக்கு நாம் அறங்காவலராக இருக்கவேண்டும் என்பர் காந்தியடிகளார். அதாவது அப்பொருள் நமக்கும் பிறர்க்கும் பயன்படவேண்டும் என்பதாம் அன்புடைமை (அஹிம்சை), வாய்மை என்ற இரண்டினையும் காந்தியடிகளார் தம் வாழ்க்கையில் கையாண்ட சிறந்த

அறங்களாம். அதனுல்தான் அவர் உலகத்திலுள்ள எல்லா மக்கள் உள்ளத்திலும் இடம் பெற்ருர்.

" உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன் " (வாய்மை-4)

என்பது பொய்யாமொழியன்ருே.

நம் பாரத நாடு பல மதங்களையும் குலங்களையும் மொழிகளையும் கொண்டதாகும். பாரத நாட்டு மக்கள் உணவிலும் உடையிலும் பழக்க வழக்கங்களிலும் சமய வழிபாட்டு முறைகளிலும் வேறுபட்டு உள்ளனர். ஆனுல் பாரத நாட்டில் இருப்பவர் அனைவரும் இந்தியரே என்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சி மக்கள் உள்ளத்தில் இடம்பெறவேண்டும். ஒரே நாடு என்ற உணர்ச்சி தோன்றியபின், "ஒரே உலகம்" என்ற உணர்ச்சி தோன்றுவதாகும். 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் விளங்கிய சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனுர் என்பவர், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தாரக மந்திரத்தை நமக்கு அளித்துச் சென்ருர். ஒருமைப்பாடு பற்றித் தேசிய கவி பாரதியார் தம் பாடல்கள் மூலம் நன்கு விளக்கியுள்ளார். பாரத நாட்டில் பல திறப்பட்ட மக்கள் பலவேறுபட்ட மொழிகளுடன் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் பாரதத்தாயின் மக்களேயாவர் என்ற கருத்தினைப் பாரதியார், பாரதத்தாய் என்ற தலைப்பில்,

" முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள் "

எனப் பாடியுள்ளது ஈண்டுப் படித்து இன்புறத்தக்கது. கவிஞர் பிறிதோர் இடத்திலும் இக் கருத்தினை வலியுறுத்தியுள்ளார் பாரதத்தாயின் மணிக்கொடியினைப் பல்வேறு மாநில வீரர்கள் காப்பதாகப் பாடியுள்ளார். மேலும் பாரத சமுதாயம் என்ற தலைப்பில்,

" எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள் "

என்பதனையும் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்

பாரத நாட்டின் தனிச் சிறப்பு யாதெனில் ஞானமார்க்கமே யாகும். மேலை நாடுகளில் பலர் இவ்வுலக வாழ்வே நிலையுள்ளது எனக் கொண்டு, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என நினைத்துக் கடவுள் நெறி நாடாது தம் வாழ்நாளை வீணுகக் கழித்து

வருகின்றனர். அத்தகைய உலகாயத மதத்தைச் சார்ந்த மக்கள் நம் நாட்டிலும் உண்டு. இதனால் பாரத நாட்டில் சைவ நாயன்மார்களும், சந்தான குரவர்களும், வைணவ ஆழ்வார்களும், சங்கரர், இராமாநுஜர், மாத்துவர் முதலிய ஆசாரியர்களும், புத்தர், மகாவீரர், சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், தாயுமானவர், இராமலிங்க அடிகள் முதலிய ஞானிகளும் தோன்றி மக்களுக்குத் தெய்வ பக்தி உண்டாகும் ஞான மார்க்கத்தினைப் போதித்தனர். எனவே இந்தியா பிற நாடுகளுக்கு ஞானமார்க்கத்தினைப் போதிக்கும் வழிகாட்டும் வான் பொருளாக அமைந்துள்ளது. இக் கருத்திற்குப் பாரதியார் பாடல்களும் அணிசெய்கின்றன. பாரதத் தாய் தன்பால் உள்ள சாத்திரங்களை உலகெங்கும் விதைப்பாள் என்ற கருத்தில் பாரதியார்,

" வேதங்கள் பாடுவள் காணீர் — உண்மை
வேல் கையிற் பற்றிக் குதிப்பாள்
ஓதருஞ் சாத்திரம் கோடி — உணர்ந்
தோதி யுலகெங்கும் விதைப்பாள்

எனப் பாடியுள்ளார் மக்கள் யான் என்னும் அகப்பற்றும் எனது என்னும் புறப்பற்றும் நீங்கிப் பற்றற்றவனாகிய இறைவனைப் பற்றிக்கொண்டு வீடுபேறு பெறும் முறையினை இந்தியா உலகிற்கு அளிக்கும் என்ற கருத்தில்,

" எல்லாரும் அமரநிலை எய்தும் நன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும் – ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் — ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் — வாழ்க

எனப் பாரதியார் பாடியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது

இதுகாறும் கூறியவற்றால் ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டு மக்களின் பண்பினைப் பொறுத்ததாகும் என்பதும், நாட்டில், 'தள்ளா விளையுளும் தக்காரும் செல்வரும்' இருப்பது பெருமையாகும் என்பதும், பசியும் பிணியும் பகையுமின்றி விளங்குவதே நல்ல நாடு என்பதும், ஈகை, அன்புடைமை, நாணமுடைமை, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய பண்புகள் மக்களிடத்தில் இருத்தல் வேண்டும் என்பதும், இந்தியர் அனைவரும் பாரதத்தாயின் மக்கள் என்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சி நாட்டில் பரவ வேண்டும் என்பதும், பாரத நாட்டில் பல மத ஆசாரியர்கள் தோன்றி மக்களுக்கு ஞானமார்க்கத்தைப் போதித்துள்ளார் என்பதும் அதனால் வீடுபேற்று முறையை இந்தியா உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டவல்லது என்பதும் சுருக்கமாக விளங்கப்பட்டன. இதன் விரிவினைத் தமிழ் இலக்கியங்களில் படித்து இன்புறுக.

# 7. அறிவியலும் வறுமையொழிப்பும்

[டாக்டர் வா. செ. குழந்தைசாமி]

பொதுவாக ஒரு சமுதாயத்தின் வாழ்வையும், வளத்தையும் பாதிக்கும் கூறுபாடுகள் நான்கு: அவை மக்கள் தொகை, இயற்கைவளம், அரசியல் பொருளாதார அமைப்பு, புதிய கண்டு பிடிப்புகள் ஆகும். கடந்த நூற்றுண்டுகளில் மக்கள் தொகை, இயற்கைவளம் ஆகியன முக்கியத்துவம் பெற்றிருந்தன. கண்டு பிடிப்புகளினுல் ஏற்படும் விளைவுகள் எவையும் அவ்வளவாகக் கவனத்திற்கு வரும் இடத்தைப் பெற்றிருக்கவில்லை.

காட்டுமிராண்டியாகத் திரிந்த மனிதன், வேட்டையாடும் வேடுவப் பருவத்திற்கு வளர்ந்து, பின்னர் வேளாண்மை செய்யத் தொடங்கிய காலை அவனது நாகரிக வாழ்வின் முதல் அத்தியாயம் தொடங்கியது அந்தச் சூழ்நிலையிலும் அதன் பின்னும் நிலவளமும், நீர்வளமும் முக்கியமாயிருந்தன. பண்டைய இந்திய, சீன, எகிப்திய நாகரிகங்கள் ஆறுகளின் மருங்கில், நீர்தரும் வளத் தையும், நிலம் தரும் விளைவையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை ; வளர்ந்தவை.

காலப்போக்கில், இந்த நாகரிகங்கள் வலிகுறைந்து, மெள்ள மறைந்ததற்குக் காரணம் அயலவர் படையெடுப்புகள் மட்டு மன்று. மக்கள் தொகை தொடர்ந்து பெருகி வந்தது. அதற் கேற்ப நீர்வளத்தையும், நிலத்தின் விளைவையும் பெருக்க அன்றைய மக்கள் தவறிவிட்டனர். பெருக்கும் கருவிகளும் அவர்கள் கையிலில்லை. இந்த நிலையில், எண்ணெய்வளம், கனிவளம் ஆகிய புதிய வளங்களைக் காணவும் அவற்றைக் கணிசமாக நாளகத் தேவைகளைத் தீர்க்கப்பயன்படுத்தவும் வழிவகை கண்ட மேலை நாட்டினர், ஒரு புதுவகை வாய்ப்பை உருவாக்கினர் இந்தப் புதிய வாய்ப்பின் அடிப்படையில், அதன் சூழ்நிலையில் உருவானது தான் தொழில் நாகரிகம். இதனைத் தோற்றுவிக்க அடிப்படை யாய் அமைந்தவை – அறிவியல், விஞ்ஞான வளர்ச்சிகள் ; இத் துறைகளில் வல்லமை பெற்ற அறிஞர்கள், ஆய்வினர்களின் கண்டுபிடிப்புகள்.

அறிவியல் உணர்வும் பொறியியல் செய்முறைகளும், மனித வாழ்வோடு இணைந்தவை. 6000 அல்லது 7000 ஆண்டுகட்கு முன் அல்லது அதற்கும் முன்பே, உழுகின்ற கலப்பையைக் கண்டுபிடித் தவன், எந்த அடிப்படையில் பார்த்தாலும் ஒரு தலைசிறந்த பொறி யியல் வல்லுநன்தான். ஏரைவிடப் பரவலாக, மனித சமுதா யத்தின் வாழ்வை, வளர்ச்சியை எந்த ஒரு கண்டுபிடிப்பும் பாதிக்க வில்லை. வானேங்க வளர்ந்த வல்லரசுகள் பலவும், இன்று இலக்கி

யத்தோடும் வரலாற்ருேடும் இணைந்துநிற்கும் பண்டைப் பெருமைகள் அனைத்தும், அந்த ஏர்முனையில் உருவானவை; அதன் பராமரிப்பில் வளர்ந்தவை. அதுபோன்று, ஆர்க்கிமிடிசு காலத்திலிருந்து விஞ்ஞான காலத்தை உருவாக்கிய கெலிலியோ காலம் வரை பல அறிவியற் கருத்துக்கள், பொறியியற் கருவிகள் உருப்பெற்றன, வளர்ந்தன. என்ருலும், முறையான அறிவியல் அடிப்படையில் அதன் வழிவந்த பொறியியல் வளர்ச்சி தொடங்கியது 17ஆவது நூற்ருண்டிலிருந்துதான். கடந்த மூன்று நூற்ருண்டுகளின் அறிவியல் வளர்ச்சி, மனித சமுதாய நலனுக்குப் பல துறைகளில், பல்வகைகளில் உதவியிருக்கிறது என்ருலும், வறுமை ஒழிப்பில் அதன் பங்கு என்ன என்பதை மட்டும், பறவைப்பார்வையாக, இக்கட்டுரைமூலம் காண்போம்.

'வறுமை' என்பது யாது? அதற்கென ஒரு வரைமுறை உண்டா? என்று கேட்போமாளுல், அதற்கு மறுமொழி காண்பது எளிதன்று. அதற்கான வரைமுறைகள், விளக்கங்கள், காலத்திற்குக் காலம், இடத்துக்கு இடம் மாறுகின்றன. இதற்கான வரைமுறைகளை வகுக்கும் முயற்சியில் ஐக்கியநாடுகள் அவை கூட முயன்றிருக்கிறது. இதைப்பற்றிய வாதங்களும், விளக்கங்களும், பொருளாதார வல்லுநர்க்கும், புலவர்கட்கும் வேண்டுமாளுல் தேவைப்படலாமே தவிர, பொதுமக்கட்கு அவ்வளவாக அது தேவையில்லை. 'வறுமை' என்ற சொல் நமக்கு விளங்குகிறது. அதனுல் குறிப்பிடப்படும் 'நிலைமை' நமக்குப் புரிகிறது. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் நிலைக்கேற்ப அதனைப் புரிந்து கொள்கின்றனர். அது போதுமானது.

உணவு, உடை, உறையுள் – ஆகியன மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகள். அவற்றின் தரமும் அளவும் ஒரு நிலைக்குக்கீழ் தாழும் பொழுது 'வறுமை' ஏற்படுகிறது. அந்நிலையைத் தடுக்க, தவிர்க்க, அறிவியல் கண்ட சாதனைகள் என்ன என்பது இப்பொழுது நமது ஆய்வுப்பொருள். இத்துறையில் அறிவியலின் முதலாவது சாதனை நிலத்தின் விளைவை அதிகப்படுத்தியதாகும். கதிர்தரும் பயிர்கள், காய்தரும் செடிகள், கனிதரும் மரங்கள் ஆகியன, இயற்கையின் செல்வங்கள்தான் என்ருலும், அவற்றின் தரத்தை, வளர்ச்சி முறைகளை, வளர்ந்து பயன்தரும் காலத்தை, பயனின் அளவைப் பெரும் அளவில் விஞ்ஞானம் மாற்றியிருக்கிறது. இதில் விஞ்ஞானம் செய்த முதற்புரட்சி, ஒட்டுச் செடி, பயிர், மரவகைகளை உற்பத்தி செய்ததுதான். சான்ருக, இன்று தமிழகம் முழுவதும் வளரும் கரும்புவகை சங்ககாலப் புலவர்களும் மற்றைய தமிழ்க் கவிஞர்களும் கண்டு, சுவைத்த கரும்பன்று. அன்றைய மெல்லிய இனிய கரும்பு வகையையும், வலியும், தண்டு

வளமும் வாய்ந்த மூங்கிலையும் இணைத்து, விஞ்ஞானிகள் படைத்த புதுக் கரும்பினம்தான் இன்று நாம் காணுவது. இங்கு மட்டுமன்று; உலகம் முழுவதும் அமைந்துள்ள கரும்பு வகைக்கும் இது பொருந்தும். அன்றைய கவிஞர்கள் மூங்கிலின் குழலையும் கரும்பின் சாற்றையும் இணைத்து. அவற்றின் இன்சுவையை உணர்ந்து பாடி மகிழ்ந்தனர். ஆனால் விஞ்ஞானிகள் மூங்கிலின் தண்டு வளத்தையும், வலியையும், கரும்பின் சாற்று வளத்தையும், இனிமையையும் இணைத்து ஒரு புதுவகைக் கரும்பினத்தைப் படைத்து உதவினர்.

முத்தமிழ் நாடு கண்ட முப்பழங்களின் முடிவில் நிற்பது வாழை. அதன் கனியிலிருந்து கன்றுவரை, இலை முதல் தண்டு வரை, மன்னர் விழாவிலும், கவிஞர் பாட்டிலும் இடம் பெற்று ஏற்றம் பெற்றன. கலை வாழையை வியந்தது; புகழ்ந்தது. விஞ்ஞானம் அதனை ஆய்ந்தது; அதன் கூறுகளை உணர்ந்தது. அதன் பல குணங்களை மாற்றியமைத்தது. இன்று நாம் காணும். பயிரிடும், பயன்படுத்தும் வாழை. பெயரில்தான் அன்றும் இன்றும் ஒன்றே தவிர, கூறுபாடுகளில் விஞ்ஞானிகள் புகுத்திய பல மாறுபாடுகளின் விளைவுகளைத் தன்னுள் கொண்டது. மா போன்ற கனி வகைகள், நெல், கோதுமை போன்ற பயிர் வகைகள், உருளைக் கிழங்கு போன்ற கிழங்குகள், தக்காளி, கத்தரி போன்ற காய் வகைகள் அனைத்தும், இன்று இயற்கையும் விஞ்ஞானமும் இணைந்து பிறந்த புதுப்பிறவிகள்தானேயன்றி, வேறல்ல. இன்று அவை பன்மடங்கு அதிக விளைச்சலைத் தருகின்றன. பருமனிலும் மற்றக் கூறுபாடுகளிலும், பல்வகைகளிலும் சிறந்து விளங்குகின்றன அவற்றிற்கான வித்தின் தன்மையை விஞ்ஞானிகள் உணர்த்தினர். அவற்றை வளர்க்கப் புதுவகை எருவைப் படைத்தனர். அவற்றிற்கு ஏற்படும் பல்வகைப் பிணிகளைத் தடுக்க, தவிர்க்க, மருந்தைக் கண்டனர். இவற்றின்மூலம் வேளாண்மையின் பயனை மிகுத்தனர்.

'நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவம். அந்நீரும் வானின்றி அமைவதில்லை என்பது அறிவியல் கண்ட உண்மை. இதுவும் வள்ளுவமே. அந்த நீர் கூடுவதோ, குறைவதோ இல்லை. உலகம் முழுமைக்கும் சேர்ந்துள்ள நீர்வளம் ஒரு குறிப்பிட்ட அளவைக் கொண்டது. அது உலகின் பல பகுதிகளில், பல்வேறு அளவுகளில் பகிர்ந்து கிடக்கிறது. ஒருபுறம் நீர் மிகுந்த வெள்ளமும், இன்னொரு புறம் நீர் குறைந்த வறட்சியும் நாம் காலமுற்றிலும் கண்ட காட்சி. வரலாறு கண்ட பல பஞ்சங்களின் தொடக்கமே வான் தவறியதின் விளைவுதான். இன்றும் வறட்சி, வறுமையின் பெருந்துணையாகும். இருக்கும் நீரை அதிகப்

படுத்தவோ, இல்லாத நீரை உண்டாக்கவோ, மனிதன் இன்றும் கூட ஆற்றலற்றவன்தான். எனினும், இருப்பதைச் சேகரிக்கவும், இல்லாத இடத்திற்கு நீண்ட தூரம் எடுத்துச் செல்லவும் விஞ்ஞானம் பல வழிகளைக் கண்டிருக்கிறது, வாய்ப்புகளைப் படைத்திருக்கிறது.

நிலத்தின் அடியில், மிகுந்த ஆழத்தில் இருக்கும் நீரைக் கண்டு பிடிக்கவும், அதன் அளவைத் தீர்மானிக்கவும் குழாய்க்கிணறுகள் மூலம் அவற்றைப் பயன்படுத்தவும் இன்று இயலும். அது மட்டுமின்றி செயற்கை மழை, கடல்நீரின் உவர்ப்பைக் குறைத்து இன்னீர் ஆக்குதல், இருக்கும் நீர் வெப்பத்தால் ஆவியாகிக் குறைவதைச் செயற்கைப் போர்வைகள்மூலம் குறைத்தல் ஆகிய பல விஞ்ஞானச் சாதனைகள், வறட்சியின் கொடுமைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்றன. பல பகுதிகளில் பாலைவனங்கள் பயிரிடும் பகுதிகளாக மாறிவருகின்றன. இந்தியாவில் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருப்பது இராஜஸ்தான் வாய்க்கால். இன்று திட்ட உருவில் காணப்படும் கங்கை-காவிரி இணைப்பு, 'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்' என்று பாடிய பாரதியின் கனவை நனவாக்கி, அக்கனவையும் மிஞ்சி அவன் கருதிய மையத்து நாடுகளையும் தாண்டி வளங் கொழிக்கும் சோழநாடுவரை கங்கையைக்கொண்டுவரும் முயற்சி' யாகும். இவையெல்லாம் விஞ்ஞானம் படைத்த சாதனைகளின் பலன்; அவற்றின் விளைவுகள்; சுருங்கச் சொன்னால் விஞ்ஞானம் தந்தகொடை. உலகின் பல பகுதிகளில் நீண்ட தொலைவுகட்கு நீர் கடத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மனிதர் நலனில் விஞ்ஞானம் செய்த மூன்றாவது சாதனை "போக்குவரத்து." சமுதாயத்தின் தேவைகளில் பலவற்றை எடுத்து ஆய்வோமானால் ஒரு முக்கிய உண்மை விளங்கும். உலக முழுமையும் ஒருமையாகக்கொண்டு அதன் தேவைகளைக் கணக்கிட்டால், பல பொருள்களில் தன்னிறைவுக்கான சாத்தியத்தைக் காணலாம். ஆனால், இவ்வளங்கள் ஒரு நாட்டில் அல்லது ஒரு பகுதியில் குறைந்தும் மற்றொரு பகுதியில் கூடியும் ஒரு சீரான வளர்ச்சியின்றிக் காணப்படுகின்றன. எனவே, குறைந்த பகுதியில் வறுமை தோன்றியபோது வளம் நிறைந்த பகுதியின் மிகுதி அதை ஈடுகட்ட இயலாதவாறு தூரம் குறுக்கே நின்றது. மனிதனது போக்குவரத்து முன்னேற்றம் இந்தத் தூரத்தை முழுமையாக வென்றது. இன்று ஒரு சில தவிர்க்க முடியாத தேவைகளை உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் எந்தப் பகுதிக்கும் விரைந்து அனுப்பலாம் என்பது எளிதான செயலாகிவிட்டது, வறுமையைத் தவிர்ப்பதில்

போக்குவரத்து வளர்ச்சியின் பங்கு மிகமிக முக்கியமானது. மனிதனின் பயணவேகம் இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் கூட மணிக்கு ஒருசில கிலோ மீட்டர் என்ற அளவில் இருந்தது. இன்று ஒலியினும் அதிக வேகத்தில் செல்லும் ஊர்திகள், ஆய்வுக் கட்டத்தைத் தாண்டி, போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் நிலைக்கு வந்துள்ளன. மனிதனின் விண்வெளிப் பயண வேகத்தை நான் இதில் இன்னும் சேர்க்கவில்லை. இந்தப் பயண விரைவு, உலகின் எல்லைகளைச் சுருக்கியது. நாடுகட்கும் மக்கட்கும் இடையில் இருந்த பல தடைகளைத் தகர்த்தது. பல பிரச்சினைகளை மானிட சமுதாயத்தின் பொதுப்பிரச்சினைகளாக நோக்கும் மனப்பான்மையை வளர்த்தது. இதன்மூலம் ஒருபகுதியின் தேவைகளை இன்னொரு பகுதியின் துணைகொண்டு தீர்க்கமுடிந்தது. வறுமை ஒழிப்பில் இதன் பங்கு மிகமிக முக்கியமானது.

நான்காவதாகக் குறிப்பிடவேண்டியது 'செய்பொருள்கள்' (Materials) துறையில் விஞ்ஞானம் செய்த புரட்சி. இந்தத் துறையில் இருபதாம் நூற்றுண்டின் சாதனை வியக்கத்தக்கது. இயற்கை தந்த இரும்புச் சுரங்கங்களில் கிடைக்கும் கனிகளிலிருந்து இரும்பும் எஃகும், பருத்தியிலிருந்து நூலும், அதை வைத்து ஆடையும், பெறுவதுதான் இயலும் என்ற நிலைமாறி, தனக்கு வேண்டிய செய்பொருள்களின் கூறுபாடுகளையும், தன்மைகளையும் முதலில் அளவிட்டு, பிறகு அவ்வகை இயல்புகளைக் கொண்ட எண்ணற்ற செய்பொருள்களை அறிவியலின் துணைகொண்டு உண்டாக்கலாம் என்ற ஒரு நிலை மலர்ந்திருக்கிறது. எதிர்காலத்தில் மனிதனது உடை, உறைவிடம் ஆகிய இரண்டு தேவைகளைத் தீர்ப்பதில் இவ் வளர்ச்சியின் மூலம் பெருந்துணை பெறுவது சாத்தியமாகியிருக்கிறது

பரந்து விரிந்த அண்டத்தில் நாம் வாழும் உலகம் ஒரு சிறு பகுதி. அதில் அமைந்துள்ள நிலப்பகுதி அதன் பரப்பில் சுமார் நான்கில் ஒரு பங்கு. இன்றுவரை நாம் கண்ட வளங்கள், தேடிய செல்வங்கள். அனைத்தும் இந்த நான்கில் ஒருபங்குப் பரப்பில்தான். இன்னும் மூன்று பகுதிப், பரப்பை அடைத்துக் கொண்டிருக்கும் கடலின் வளங்கள் அளவிறந்தன. அவற்றைப் பயன்படுத்துவதற்கான ஆற்றல், அறிவியல் வளர்ச்சி, நேற்றுவரை இல்லாதிருந்தது இன்று அதற்கான வாய்ப்பையும், வசதியையும் விஞ்ஞானம் படைத்துத் தந்திருக்கிறது. மனிதனது வறுமை ஒழிப்பிலும், வளர்ச்சி மிகுப்பிலும் ஒரு புதுக்காலமே தொடங்கும் தோற்றம் நம் கண்முன் தெரிகிறது.

இவையனைத்தும் விஞ்ஞானம் கண்ட விந்தை. ஆழ்ந்து அமைந்து பொறுப்போடும் பொறுமையோடும் ஆய்ந்த, ஆயிரம் ஆயிரம் சிந்தனையாளர்களின் படைப்பின் விளைவு. மனித சமுதாயம் தோன்றிய நாள்களிலிருந்து, நீங்கா நிழல்போல நீளத்தொடர்ந்து வந்த வறுமையும், அதனால் வாடிய மெய்யும், வதங்கிய முகமும் இல்லாத ஒரு சமுதாயத்தைப் படைப்பதற்குத் தேவையான கருவிகள் அனைத்தையும் விஞ்ஞானிகள் படைத்திருக்கின்றனர். அதனை உரிய முறையில், ஒத்தவகையில், தேவைக்கு ஏற்பப் பயன் படுத்தி, பலன்பெறுவது நம் முன் நிற்கும் கடமை. இதுவரை நாம் கண்ட பயன் கணிசமானது. ஆனால் காண இருப்பது மாணப் பெரிது.

# 8. சங்க இலக்கிய மரபு

**[டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி]**

புலவர்கள் சிறப்புமிக்க தம் வாழ்வியல் நுகர்ச்சிகளை இலக்கிய மாகப் படைப்பர். இதனால் இலக்கியம் வாழ்க்கையினின்று முகிழ்க்கிறது என்று கூறலாம். தமிழ் இலக்கியங்களில் மிகவும் தொன்மை வாய்ந்தவை சங்க இலக்கியங்களாகும் சங்க காலத்தில் புலவர்கள் மக்கள் வாழ்வியலைக் கூர்ந்து ஆராய்ந்து அவ்வாழ்வியல் உண்மைகளைத் தம் இலக்கியங்களில் விளக்கியுள்ளார்கள். அவர்கள் நடைமுறையில் கண்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தாம் கண்ட வண்ணமே இலக்கியங்களில் படைத்தார்கள் என்று கொள்ளுதல் இயலாது. அவை எங்ஙனம் அமைந்தால் மக்களின் வாழ்வியல் சிறந்து விளங்கும் என்பதை நுண்ணிதின் உணர்ந்து அங்ஙனம் உணர்ந்தவற்றையே இலக்கியமாக வடித்துள்ளனர்.

தொல்காப்பியரும்,

‘ நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் ’

என்று இலக்கிய வழக்கினைக் கூறுவர்.

தொல்காப்பியர் காலத்தில் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறே கூறாமல் மக்களின் நடைமுறை ஒழுக்கங்களையும் அக்கால நாடகங்களில் சித்திரிக்கப்பட்ட மக்கள் ஒழுகலாறுகளை யும் ஆய்ந்து, அவற்றை அடிப்படையாகக் கொண்டு மன்பதை உயர்வுக்கு அவை எங்ஙனம் அமைய வேண்டும் என்பதனைத் தம் புலமையிலும் உணர்விலும் உருவாக்கி இலக்கியங்களில் படைத்த னர் என்ற உண்மையை இந்நூற்பா விளக்குகிறது. இதனைக் குறிக் கோள் நெறி என்று கூறலாம்.

இம்மரபை ஒட்டியே சங்ககால இலக்கியங்களும் செய்திகளைப் புலனெறி வழக்காகக் கூறுகின்றன என்பதை நாம் உணரவேண்டும். சங்ககாலப் புலவர்கள் தொல்காப்பியர் வழிநின்று வாழ்வியலை அகம், புறம் என இரு பெரும் பிரிவுகளாகப் பகுத்துணர்ந்தனர். அகம், கணவன் மனைவி ஆகியோருடைய காதல் வாழ்க்கையையும், புறம் இக்காதல் வாழ்க்கை தவிர ஏனைய வாழ்வியல் நிகழ்ச்சி களையும் குறிப்பனவாகும். அகவாழ்வு ஒருவன் ஒருத்தியுடன் திருமணத்திற்கு முன்பு நிகழும் களவொழுக்கமும் திருமணத்திற்குப் பின்பு அவர்தம் காதல் உணர்வுமிக்க இல்லற வாழ்க்கையையும் கொண்டதாகும். இவ்வில்லற வாழ்க்கை 'கற்பொழுக்கம்' எனப் படும். களவொழுக்கம் நடைபெறும் முறைகளும் திருமணத்திற்குப் பிறகு கற்பொழுக்கமாகிய காதல் வாழ்வு நடைபெறும் முறைகளும் சங்க இலக்கியங்களில் விரிவாகவும் சுவையாகவும் பாடப்பட்டுள்ள திறத்தைக் காணலாம். ஒருவனும் ஒருத்தியும் ஒரு தனியிடத்தில் தற்செயலாக எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் காதலிப்பதும், தொடர்ந்து பல நாள்கள் அவர்தம் களவொழுக்கம் நிகழ்வதும், தலைவன் அவளைப் பிரிவதும், பிரிந்தபின் தலைவி பிரிவை ஆற்றியிருப் பதும், பிறகு பிரிவுத் துன்பம் ஆற்ற இயலாது அவள் வருந்துவதும், அவர்தம் திருமணத்திற்குப் பிறகு தலைவன் பரத்தையரை நாடு வதும், அதனால் அவர்களிடையே ஊடல் நிகழ்வதும் போன்ற நிகழ்ச்சிகள் சங்கப் பாடல்கள் பலவற்றுள் பாடப்பெற்றுள்ளன. மேலும், தலைவனும் தலைவியும் கூடுவது குறிஞ்சி நிலத்திலும், பிரிவு பாலை நிலத்திலும், தலைவி ஆற்றியிருப்பது முல்லை நிலத்திலும், பிரிவுத் துன்பத்தை ஆற்ற இயலாது வருந்துவது நெய்தல் நிலத் திலும், ஊடல் மருத நிலத்திலும் நிகழ்வனவாகப் பாடுவது சங்க கால மரபாகும்.

தலைவி தலைவனைக் காதலிக்கும் செய்தியினைத் தன் பெற்றோ ருக்கு அவள் நேரிடையாகக் கூறுவதில்லை. அவளுடைய தோழி அச்செய்தியை முதன்முதலாகச் செவிலிக்குத் தெரிவிப்பாள்; செவிலித்தாய் நற்றாய்க்குக் கூறுவாள்; நற்றாய் தந்தைக்குத் தெரி விப்பாள். இவ்வாறு தலைவியின் காதலைப் பெற்றோருக்கு வெளிப் படுத்துவது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

அகப்பாடல்களில் பாத்திரங்களாகப் படைக்கப் பெறுபவர்கள் பெயரைக் குறிப்பிடாமல் தலைவி, தலைவன், தோழி போன்ற பாத்திரப் பொதுப் பெயர்களாலேயே வழங்குவதை அக்கால மரபாகக் கொண்டார்கள்.

D

' மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறுஅர் '

என்று தொல்காப்பியம் இதற்கு விதி வகுத்துள்ளது.

புறத்திணைப் பாடல்களையும் புலவர்கள் புலனெறி வழக்கை யொட்டியே பாடியுள்ளனர். போர்த் தொடக்கத்திற்கு முதன் முதலாகப் பகைவர் நாட்டு ஆனிரையினைக் கவர்ந்து வருவதும், மண்ணாசையுடைய வேந்தனை வெல்லுதல் கருதி அவன்மீது படை யெடுத்துச் செல்வதும், பகைவனுடைய மதிலை முற்றுகையிடுவதும், தன் படைவலிமை கருதிப் படையெடுத்து வருவதும், வந்த அரசனை எதிர்த்துச் சென்று போரில் வெற்றி பெறுவதும் ஆகிய போர்ச் செய்திகள் முறையாக மரபை ஒட்டிப் புறத்திணைப் பாடல் களில் பாடப்பெற்றுள்ளன. இவற்றினை முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பர். உலக நிலையாமை பற்றிய பாடல்களும், வீரம், கொடை, தண்ணளி இன்னோரன்ன நல்லியல் புடையோரைப் புகழ்ந்து வாழ்த்தும் பாடல்களும், இன்னும் வேறு பல உலகியல்பை விளக்கிக் கூறும் பாடல்களும், சங்ககாலப் புறப் பாடல்களாக விளங்குகின்றன.

கவிஞனின் உள்ளத்திலிருந்து இயல்பாகப் பொங்கி வழியும் உணர்ச்சியினின்றும் உருவெடுக்கும் பாடல் தன்னுணர்ச்சிப் பாடல் எனப்படும். சங்கப் பாடல்களில் பெரும்பாலானவை—சிறப்பாக அகப்பாடல்கள்—புலவர்களின் உணர்ச்சிப் பெருக்கினின்றும் உருவானவையாகும். இவை அனைத்தும் தன்னுணர்ச்சிப் பாடல் களேயாகும்.

" நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்து
இனிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே !"

(குறுந். 6)

தலைவன் தலைவியர் களவொழுக்கம் பலநாள் நிகழ்கிறது. முடிவில் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதென்று முடிவு செய்து அதற்காகப் பொருளீட்டத் தலைவன் வேற்றூர் செல்கிறான். பிரிவுத் துன்பத்தைத் தலைவியால் தாங்க இயலவில்லை. அவளுடைய களவொழுக்கம் ஊரார்க்கு எப்படியோ தெரிந்து விடுகிறது. ஊர்மக்கள் அவளைப்பற்றியே எப்போதும் பேசிப் பழி தூற்றுகின்றனர். இரவு நெருங்குகிறது; நள்ளிரவு. அது

வரை அவளுடைய களவொழுக்கத்தைப் பற்றிப் பழிதூற்றிப் பேசி வந்த ஊர் மக்களும் தம் சொற்களெல்லாம் அடங்கி உறங்குகின்றனர். அவர்களேயன்றி உலகமே உறங்குகிறது. ஆனால், அவ்ளை இடையறாது பிரிவுத் துன்பம் வாட்டிக் கொண்டிருப்பதால் அவளால் உறங்க முடியவில்லை. இதை நினைந்து அவள் வருந்துகிறாள். "இந்த நள்ளிரவில் ஊர்மக்கள் சொல்லடங்கினர். உலகமே இன்பமாக உறங்குகிறது. ஆனால் இவ்வுலகத்தில் யான் மட்டும் உறங்காமல் இருக்கிறேனே" என்று தலைவி நினைந்து ஏங்குவதாகப் புலவர் பதுமனார் பாடுவதினின்றும் அவர் இதயத்தில் துன்ப உணர்ச்சி பொங்கி வழிகிற திறத்தை இப்பாடலில் காணுகிறோம். இங்குப் புலவர் தம் உணர்ச்சிகளை நேரடியாக உணர்த்தவில்லை. தலைவியாகிய பாத்திரத்தைப் படைத்து, அதன் வாயிலாகத் தம் உணர்ச்சிகளை உணர்த்தியுள்ளார். சங்க கால அகப்பாடல்கள் அனைத்திலும் இவ்வாறே பாத்திரங்கள் வாயிலாகப் புலவர்களின் உணர்ச்சிகளும் கருத்துக்களும் உணர்த்தப் பெறுகின்றன. அகப்பொருளுக்குத் தொல்காப்பியர் விதித்துள்ள விதிகளை யொட்டியே சங்கப் புலவர்கள் தம் அகப்பாடல்களில் பாத்திரங்கள் வாயிலாக உணர்த்தும் முறையினை மேற்கொண்டனர் எனலாம். தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் தலைவன், தலைவி, செவிலி, நற்றாய் முதலிய அகப்பொருள் பாத்திரங்கள் நிகழ்த்துதற்குரிய கூற்றுக்களைத் தொகுத்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு அகப்பாட்டிலும் ஒவ்வொரு பாத்திரத்தின் கூற்றுமட்டும் நிகழும். மற்றொரு பாத்திரம் அக்கூற்றினைச் செவிமடுப்பதாக இருக்குமேயன்றிக் கூற்றினைக் கேட்கும் பாத்திரம் ஒரே பாட்டில் மறுமொழி கூறுவதாக இருப்பதில்லை. மேலே கண்ட குறுந்தொகைப் பாட்டில் தலைவனின் பிரிவையாற்ற இயலாத தலைவி தோழிக்குக் கூறுகிறாள். இம் முறையினை, 'நாடகநிலைத் தனிமொழி' என்பர். ஆங்கிலத்தில் இது "டிரமாட்டிக் மோனலாக்" எனக் கூறப்படும். இது சங்க அகப்பாடல்களின் தனி இயல்பாகும்.

சங்கப் பாடல்கள் சிலவற்றில் கருத்தினும், உணர்ச்சி விஞ்சியிருக்கும். சில பாடல்களில் உணர்ச்சியினும் உயர்ந்த உண்மைகள், நீதிகள், நெறிமுறைகள் ஆகியவை பற்றிய கருத்துக்கள் சிறப்பாக விளங்கித் தோன்றும். சங்க அகப்பாடல்கள் அனைத்திலும் உணர்ச்சியே சிறந்து விளங்குகிறது. சங்ககாலப் புறத்துறைப் பாடல்களில் பெரும்பாலும் உணர்ச்சியினும் கருத்து சிறப்பிடம் பெறுவதைக் காணலாம்.

" பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே '
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம நெறியுமா ரதுவே

(புறம் 195)

" பயனற்ற மூப்பெய்திய பல்லறிவு படைத்தவர்களே. கூற்றுவன் உங்களை வந்து பிணிக்குங்கால் பெரிதும் வருந்துவீர்' எனவே, நீங்கள் நல்ல நிலையில் இருக்கும்போதே நல்ல அறங்களைச் செய்ய இயலாமற் போவீராயினும் தீமைகளைச் செய்தலை விலக்குங் கள். இதுவே எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவது; மேலும், தன்னெறிப் படுத்துவதும் இதுவாகும்'' என்பது இப் புறப் பாட்டின் கருத்தாகும்.

" பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே ''

என்ற இந்த மூன்று அடிகளிலேதான் உணர்ச்சி செறிந்துள்ளது எனலாம். இவ்வடிகளில் இகழ்ச்சி உணர்ச்சி நிறைந்துள்ளது. இதில் வரும் 'பல்சான்றீரே' என்ற தொடர் இகழ்ச்சிக் குறிப் புடையது. அடுத்துவரும்,

" கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ

என்ற இவ்விரண்டு அடிகளில் உணர்ச்சியும், உலக நிலையாமை யாகிய உயர்ந்த உண்மையும் விரவியுள்ளது.

இறுதியாக உள்ள,

" நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே ''

என்ற இவ்வடிகளில் நன்னெறியினுடைய தன்மை அறிவுறுத்தப் படுகிறது. இவ்வடிகளில் வெறும் கருத்தே மேலோங்கியிருக்கிறது

எனலாம். இப்பாட்டினை முழுமையாக நோக்கும் போது உணர்ச்சியினும் கருத்து சிறப்பிடம் பெறுவதை உணர்கிறோம். இப்பாட்டில் உலக நிலையாமை, தீ நெறியை அகற்றி வாழ்தல் முதலிய தெளிந்த உண்மைகள் உணர்த்தப்படுகின்றன. இது போன்ற பாட்டினை, 'மெய் விளக்கப் பாடல்' எனலாம். கவிஞன் தன் உணர்ச்சிகளை உடனடியாக, பாட்டாக வெளிப்படுத்தாமல் அவற்றை மிக்க அமைதியோடு கட்டுப்படுத்துவதினின்றும் உருப் பெறுவன இத் தகைய பாடல்கள் எனலாம்.

ஆனால் கையறுநிலை. அரசவாகை, இயன் மொழி இன்னோரன்ன துறைகளில் அமைந்த பாடல்கள் பலவற்றில் கருத்தினும் உணர்ச்சி விஞ்சியுள்ளது.

சங்கப் பாடல்கள் பலவற்றுள் இயற்கையின் தன்மையும் எழிலும் மிகச் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன அக்காலப் புலவர்கள் 'கை புனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பின' தாகிய இயற்கையிலே கொண்டுள்ள ஈடுபாட்டினையும் அவர்தம் நுண் மாண் நுழைபுலத்தினையும் அவர்தம் பாடல்கள் புலப்படுத்து கின்றன. தம் பாடல்களில் இயற்கையினை வெறும் வருணனைக் காக அவர்கள் பாடவில்லை. அவர்தம் இயற்கை விளக்கங்கள் பாடலினுடைய பொருளினை நுட்பமாகப் புலப்படுத்திச் சிறப் புறுத்துகின்றன. இயற்கையினை உள்ளுறையாகவும் இறைச்சியாக வும் அவர்கள் பயன்படுத்திப் பாட்டின்பத்தைப் பெருக்கியுள்ளனர். நேர்முகமாகப் பொருளை உணர்த்துவதைக் காட்டிலும், பல உத்திகள் வாயிலாகப் பொருளைக் குறிப்பாக உணர்த்துவதே இலக்கியத் தின் சிறப்பியல்பாகும்.

சங்கப் பாடல்களுள் அமைந்துள்ள இயற்கை விளக்கங்கள், உள்ளுறை, இறைச்சி இவற்றின் வாயிலாகப் பாட்டினுடைய நய மான பொருளைக் குறிப்பாக உணர்த்தி நம் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுகின்றன.

உவமையாகக் கூறப்படும் இயற்கைக் காட்சியே உவமிக்கப் படும் பொருளைக் குறிப்பாக உணர்த்துவது உள்ளுறை உவமமாகும்.

" கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
நீரொ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே

(குறுந். 38)

தலைவன் தலைவியை வரைந்து கொள்வதற்கு வேண்டிய பொருளீட்டுவதற்கு வேற்றூருக்குச் சென்றிருக்கிறான். அவன் பல நாள்களாகியும் திரும்பவில்லை. அவன் பிரிவினை ஆற்ற இயலாது தலைவி வருந்துகிறாள். அவள் தோழியினை நோக்கிக் 'காட்டில் வாழும் மயில் பாறையினிடத்து ஈன்ற முட்டையினை வெயிலில் உருட்டி விளையாடும் குரங்குக் குட்டியினையுடைய மலை நாட்டின் தலைவனுடைய நட்பு, நம் மையுண்ட கண்களிலிருந்து பெருகும் நீரினைக் கண்டும் அதற்கு இரங்காது பிரிந்த தலைவரது பிரிவினை ஆற்றியிருக்கும் வன்மையுடையவருக்கு என்றும் நன்மையாகும்'' என்று கூறுகிறாள். இக் குறுந்தொகைப் பாட்டின் பொருள் இது ஆகும். 'மயிலின் முட்டையைக் குரங்குக் குட்டி வெயிலில் உருட்டி விளையாடும் குன்று என்ற இயற்கை வருணனையை இப்பாட்டில் காணுகிறோம். 'மயிலின் முட்டையகத்துள்ள குஞ்சுக்கு நேரும் தீமையைச் சிறிதும் கருதாமல் குரங்குக் குட்டி அதனை வெயிலில் உருட்டுவது போன்று யான் எய்தும் துன்பத்திற்கு இரங்காமல் இவ்வூரார் என்றும் என் களவொழுக்கத்தைப் பழி தூற்றுகின்றனர்' என்ற உட்பொருளை இவ்வியற்கை வருணனை நமக்கு நயமாக உணர்த்தி இன்ப மூட்டுகிறது.

சில சங்கப் பாடல்களில் இயற்கை வருணனைகள் கருத்திற்கு அடைமொழி வடிவில் வந்து குறிப்புப் பொருளை உணர்த்தும். இஃது இறைச்சி எனப்படும்.

'' இறைச்சி தானே பொருட்புறத் ததுவே''

(தொல். பொருளியல் 35)

என்பர் தொல்காப்பியர்.

'' சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்
பெருவரை யடுக்கத் தருவி யார்ப்பக்
கல்லலைத் திழிதரும் கடுவரற் கான்யாற்றுக்
கழைமாய் நீத்தங் காடலை யார்ப்பத்
தழங்குகுர லேறொடு முழங்கி வானம்
இன்னே பெய்ய மின்னுமால் தோழி
வெண்ணெ லருந்திய வரிநுதல் யானை
தண்ணறுஞ் சிலம்பின் துஞ்சுஞ்
சிறியிலைச் சந்தின வாடுபெருங் காட்டே. ''

(நற்றிணை 7)

பொருளீட்டத் தலைவியைப் பிரிந்து தலைவன் வேற்றூர் சென்றிருக்கிறான். பிரிவினை ஆற்ற இயலாது தலைவி வருந்துகிறாள். இவ்

வாறு வருந்தும் தலைவியை நோக்கித் தோழி, "மூங்கிலின் வெண்ணெல்லை யுண்ட யானை, குளிர்ச்சி பொருந்திய நறுமணம் கமழும் மலைப் பக்கத்திலே உறங்குகின்ற சிறிய இலை பொருந்திய சந்தன மரங்கள் நிறைந்த வாடிய பெருங்காட்டில் அச்சம் நிறைந்த அகன்ற சுனையில் நீர் நிறையவும், பெரிய மூங்கில்களையுடைய மலைப் பக்கத்தில் அருவிகள் புரளவும் கற்களைப் புரட்டிக்கொண்டு விரைந்து ஓடிவரும் காட்டாற்றில் பெருகிய வெள்ளத்தின் அலை காட்டில் சென்று மோதவும், ஒலிக்கின்ற இடி பெரு முழக்கம் செய்து மேகங்கள் இப்போதே மழைபெய்ய மின்னுகின்றன. இக் காலத்தை நோக்கியதும் தலைவர் உடனே வந்து உன்னை வரைந்து கொள்வார் ; எனவே வருந்தாதே ' என்று ஆறுதல் கூறுகிறாள்.

இப்பாட்டில், 'வாடுகின்ற பெருங்காட்டில் அக்காடு தழைப்ப மழை பெய்யும்' என்பது, "பிரிவால் பெரிதும் வருந்தியிருக்கிற உன்பால் அருள் செய்யவேண்டித் தலைவர் விரைந்து வருவார்" என்ற பொருளினையும், "வெண்ணெல்லினை உண்ட யானை, கவலை நீங்கி உறங்கும்" என்பது, "காதலனோடு இன்பம் நுகர்ந்து நீ படுக்கையிலே துயில்வாய்' என்ற பொருளினையும், மிக நுட்பமாக உணர்த்திச் சுவையூட்டுகின்றன. இவை யிரண்டும் இப் பாட்டிலுள்ள இறைச்சிகளாகும்.

தொல்காப்பியர் சிறப்பாக ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாட்டு ஆகியவற்றைப் பாட்டிலக்கியத்திற்குரிய சிறந்த பாவகைகளாகக் கூறியுள்ளார். ஆனால், சங்கப்பாடல்களுள் கலித்தொகை, பரிபாடல் ஆகிய பாடல்களைத் தவிர ஏனையவை ஆசிரியப்பாவினாலேயே அமைந்துள்ளன. கலிப்பாவும் பரிபாட்டும் அகத்திணைக்குரிய பாவகைகளாகத் தொல்காப்பியர் விதித்துள்ளார்.

" நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர். "

(தொல். அகத்திணையியல் 56)

ஆனால் கலித்தொகையிலும் பரிபாடலிலும் உள்ள அகத்திணைப் பாடல்களைத் தவிர ஏனைய தொகை நூல்களிலுள்ள அகத்திணைப் பாடல்கள் அனைத்தும் ஆசிரியப்பாவிலேயே உள்ளன. புலவர்களுடைய உணர்ச்சிகளைத் தடையின்றி உணர்த்துவதற்கு ஆசிரியப்பாவே ஏற்றதாகும். ஆசிரியப்பா உணர்ச்சிக்கேற்ப

நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடையது எனலாம். சிறிதும் நெகிழக்கூடாத வன்மையான யாப்பு விதிகள் அதற்கு இல்லை.

தொல்காப்பியர் அகத்திணைப் பாடலுக்கு விதித்துள்ள கலிப்பாவும் பரிபாட்டும் ஆசிரியப்பா போலத் தடையின்றி உணர்ச்சிகளை உணர்த்துதற்கு ஏற்றவை என்று கூற இயலாது. ஏனென்றால் அப் பாடல்கள் தமக்கென இன்றியமையா உறுப்புக்களைக் கொண்டுள்ளன. கலிப்பா, தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் கலிப்பாவுக்குரிய துள்ளலோசை பொருந்தியிருக்க வேண்டும். இங்ஙனமே பரிபாட்டும் கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து முதலிய உறுப்புக்களைக் கொண்டதாகும். இவ்வுறுப்புக்களெல்லாம் பாட்டில் அமையவேண்டும் என்ற கருத்தோடு ஒரு புலவர் பாடுங்கால் அவருடைய உணர்ச்சியும் கருத்தோட்டமும் தடைபடுதல் இயற்கையே. ஆனால் ஆசிரியப்பாவுக்கு இதைப்போல இன்றியமையா உறுப்புக்கள் இல்லை. எதுகை, மோனை போன்ற ஒலி நயங்களிலும் புலவர்கள் மிக்க கருத்துச் செலுத்தவில்லை. அவர்கள் சிறப்பாகப் பாட்டில் உணர்ச்சி அல்லது கருத்துக்கு இடமளித்தார்கள். இதற்கு ஆசிரியப்பா மிக்க பொருத்தமுடையதாய் அவர்களுக்கு அமைந்ததால் அப் பாவகையிலேயே சங்ககாலப் புலவர் தம் பாட்டுக்களை அமைத்தார்கள் என்று கொள்ளலாம்.

இவ்வாறு சங்க இலக்கியங்களின் கருத்துக்களையும் அமைப்பையும் நுண்ணிதின் ஆய்ந்து சிந்திக்குந்தோறும் அக்காலத்தில் புலவர்கள் மேற்கொண்ட இலக்கிய மரபுகள் பல புலனாகின்றன. இவ்விலக்கிய மரபுகள் பல தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் விதிக்கும் இலக்கியக் கொள்கைகளோடு பெரும்பாலும் ஒத்தும் ஒரு சில வேறுபட்டும் உள்ளன.

# 9. சில சொற்கள்

**[டாக்டர் ரா. சீனிவாசன்]**

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று பாரதியார் தமிழ்ச் சொல்லின் உயர்வைப் பாராட்டினர். தமிழைச் சொல்லுவதில் இன்பமும், அதைக் கேட்பதில் இனிமையும், அச்சொல்லைச் சொல்லும் திறனில் கலையமைப்பும் உண்டாகின்றன என்றால், தமிழ்ச் சொல்லின் பெருமையைச் சொல்லி முடியாது.

சொல்லத் தெரிந்தவர்கள் எதைச் சொன்னாலும் அதில் இன்பத்தைக் காண முடிகிறது. அச் சொல்லுக்கு ஆற்றலும், ஆற்றலால் செயலும் பிறக்கின்றன. உள்ளத்தில் ஊற்றெடுக்கும் கவிப்பெருக்கும், கற்பனையில் வடித்தெடுக்கும் கதையமைப்பும் சொல்லுவோனின் சொற்றிறனால் சிறப்புப் பெறுகின்றன. கம்பர், இளங்கோ, வள்ளுவர் போன்ற ஆன்ற புலவர்களின் ஆழ்ந்த கவிதைகளும் சொல்லும் திறனால் வெல்லும் வாழ்வைப் பெற்று, அழியாப் பெருஞ் செல்வமாக நிலைபெற்றிருக்கின்றன. 'பொழுது போக்குக்கு' என ஒழிந்தநேரங்களில் படித்து இன்புறும் பல்வகைத் தொடர்கதைகளும், நடித்து இன்புறும் நாடக உரையாடல்களும் சொல்லும் திறனாலேயே உள்ளத்தைக் கவர்கின்றன. தேர்ந்த சொல்லால் ஓர்ந்த பொருள்கள் இழுமென் ஓசையும், விழுமிய கருத்துங் கொண்டு விளங்கும் பொழுது, அவை கற்போரின் உள்ளத்தை ஈர்க்கும் கவின்மிகு இலக்கியங்கள் ஆகின்றன.

வள்ளுவர் வாய்மொழியும், சொல்லும் திறன்படச் சொல்லப் படவில்லை யென்றால், அஃது அறத்தை வற்புறுத்தும் நீதிநெறி நூலாகவோ, பொருளைப் பொருட்படுத்தும் பொருளியல் நூலா கவோ, இன்பத்தை வகைப்படுத்தும் இன்பவியல் நூலாகவோ, தருக்க வாதங்கள் மிக்க தத்துவ நூலாகவோ அமைந்திருக்கு மேயன்றி, உலகம் போற்றும் உயர்ந்த இலக்கியங்களுள் ஒன்றாக விளங்கியிராது.

வள்ளுவர் வாய்ச்சொல்லின் திறத்தைத் திறம்பட அறிவதால், அச் சொல்லின் நலமும், அச் சொல்நலத்தால் சிறப்புறும் பாநலமும் அறிய முடிகின்றது. திறன்மிக்க சொற்களுக்கு ஆற்றலும், அவ்வாற்றலால் அறச்செயலும், அறச்செயலால் பொருளும் மிகும் என்பது அவர்தம் கருத்தாகும்

திறனறிந்து சொல்லுக சொல்லை, அறனும்
பொருளும் அதனினூஉங் கில்'

(குறள் 644)

என்பது அவர் குறளாம். திறனறிந்து எதையுஞ் சொல்லவேண்டும் என்பதை வற்புறுத்தும் அவர், திறம் தெரிந்து சொல்லைப் பயன் படுத்தித் தம் பாநலத்தை மிகுவித்திருப்பதற்கு, அவர் தம் திருக்குறட்பாக்கள் தக்க சான்றாகும்.

திறனறிந்து சொல்லப்பெறும் சொற்களும், அவற்றால் உணர்த்தப்பெறும் கருத்துக்களும் கேட்டாரைப் பிணித்துக்

கேளாரையும் ஈர்க்கும் இயல்பைப் பெற்று விளங்கும் இயல்பினவாம்.

> 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாஞ் சொல்'

(குறள் 643)

என்பது அவர் தரும் விளக்கமாகும். பிறர் விருப்புமாறு, அவர் உள்ளத்தைக் கவரக்கூடிய சொற்களால், சொல்லுவனவற்றை ஒழுங்குப்படுத்திச் சொல்ல வேண்டும் என்பது அவர்தம் அறிவுரையாகும்.

> 'வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
> மாட்சியின் மாசற்றார் கோள்'

(குறள் 646)

எனத் தாம் சொல்லும்போது, எவ்வாறு சொல்லவேண்டும் என்பதையும், பிறர் சொல்வதில் உள்ள பொருளை எவ்வாறு கொள்ளவேண்டும் என்பதையும் கூறுகின்றார்.

மேலும், எடுத்தாளுஞ் சொற்களில் தக்கசொல்லை எடுத்தாளுவதோடு, மிக்க சொல்லையும் அமைப்பது சிறப்புத்தரும் என்பது அவர் கருத்துரையாகும். வெல்லுஞ் சொல் அதனினும் வேறு இல்லாத வகையில், அச் சொல் அமையவேண்டும் என்பதை,

> 'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து'

(குறள் 645)

என்ற குறட்பாவால் நன்கு விளக்குகின்றார்.

இவ்வாறு நிரந்து இனிமையாகச் சொல்லுதல் வல்லாரைப் பெறின், அவர் சொல்லை உலகம் கேட்டுச் செயலாற்ற முன்வரும் என்பது அவர்தம் நம்பிக்கையாகும். வள்ளுவர் குறள் நிரந்து இனிது அமைந்திருப்பதால்தான் அதில் உள்ள கருத்துகள் உள்ளத்தில் நன்கு பதிந்து, உலகினரை நன்னெறிக்கண் செயல்படுத்துகின்றன என்று கூறலாம்.

> 'விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்'

(குறள்

என்பது அவர்தம் நூலுக்கே தரும் சிறந்த விளக்கவுரை எனக் கூறலாம். இக் குறட்பாக்கள் சொல்லின் திறத்தைப் பொதுப் படையாக விளக்குவன எனினும் அவை அவர்தம் திருக்குறளின் சொல் திறத்தையே விளக்குவன எனக் கூறலாம்.

குறைந்த சொற்களால் நிறைந்த பயன் விளைவிப்பதே சிறந்த மொழிநடையின் சிறப்பாகும். நீண்ட சொற்றொடர்களுக்கு இருக்கும் ஆற்றலைவிடப் பழகிப் பண்பட்ட சிறிய சொற்றொடர் களுக்கே ஆற்றல் மிகுதியாகும் என்பதை எழுத்துமொழிக்கும் பேச்சுமொழிக்கும் உள்ள வேறுபாடு உணர்த்தும். பேசும்பொழுதும் சுருங்கிய தொடர்களால் சிறிய சொற்களைக் கொண்டு கருத்தை எளிதில் வெளிப்படுத்த இயல்கிறது. அவை உடனே செயலைத் தூண்டி ஆற்றல் மிக்கனவாக விளங்குகின்றன. எழுத்துமொழி யாகிய இலக்கியநடை நீண்ட சொற்றொடர்களைக் கொண்டு உடனே செயலைத் தூண்டாமல் மனிதனைச் சிந்தனையில் ஆழ்த்து கிறது. நீண்ட சொற்றொடர்களுக்கு இருக்கும் ஆற்றலைவிடச் சுருங்கிய சொற்களுக்கும், அவை அமையும் தொடர்களுக்குமே ஆற்றல் மிகுதியாக உள்ளது.

வள்ளுவர் வாய்மொழியும் பேச்சு மொழியின் மரபைப் பெற்றுக் குறைந்த சீர்களைக் கொண்ட குறட்பாவால் அமைந்து, ஆற்றல் மிக்கவையாக விளங்குகின்றது; ஏழு சீர்களைக் கொண்டு, இரண்டினும் குறைந்த அடிகளால் இயங்கிச் சுருங்கிய சொற் றொடர்களால் நிறைந்த கருத்தை உணர்த்திச் சிறந்த நடையாக அமைந்துள்ளது.

குறைந்த அடிகளால் விளங்கும் காரணத்தாலேயே இந் நூலுக்குக் 'குறள்' எனப்பெயர் அமைந்து, சிறப்பு அடையாகிய 'திரு' என்பது சேர்ந்து, 'திருக்குறள்' என்ற பெயர் நிலவியது என்பர். சிறு சொற்களால் ஆகிய சீர்களால் இயங்குவதும் இதன் சிறப்பியல்பு எனக் கூறத்தகும்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற'

(குறள் 34)

என்ற குறளில், மனம், மாசு, நீர, அறன், பிற போன்ற சிறு சொற்களே மிகுதியாக அமைந்திருக்கக் காண்கிறோம். சிறு சொற்களை அமைத்து அரிய பெரிய கருத்துக்களை உணர்த்தும் பெற்றி இந்நூலில் யாண்டும் காணலாம்.

பாவின் அடியும், சீரும், சொல்லும், சுருங்கி அமைந்திருப்பதோடு, அவர் எடுத்தாண்டுள்ள சொற்களின் எண்ணிக்கையிலும் சுருக்கம் அமைந்திருக்கக் காண்கின்றோம். ஏழு சீர் கொண்ட திருக்குறளில், மிகச் சுருங்கிய எண்ணிக்கை கொண்ட சொற்களை மீண்டும் மீண்டும் வருமாறு அமைத்து, அவர் சொற்றிறனின் பெருமையை நிலைநாட்டி விட்டார் என்று கூறலாம். ஒரு குறளில் மூன்றே சொற்களை எடுத்தாண்டுள்ள இடங்கள் பல உள்ளன. 'துப்பு,' 'மழை,' 'ஆதல்' என்ற மூன்று சொற்களைக் கொண்டே ஏழு சீர்களைக் கொண்ட பாவினை அமைத்து, விண்ணையும் மண்ணையும் தொடர்புபடுத்தி, மண்ணில் வாழும் உயிரையும் உயிர்க்கு உணவாகிய மழையையும் பற்றி அரிய செய்தியைத் தெரிவித்திருக்கின்றார்; அக் குறட்பாவின் பெருமைக்கு நிகர் அவர் பாக்களே எனலாம்.

> 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉ மழை'

(குறள் 12)

இக் குறட்பாவில் அவர் எடுத்தாண்டுள்ள சொற்கள் 'துப்பு,' 'மழை,' 'ஆதல்' என்பவையே யாகும். இதைப் போலவே,

> 'குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
> குன்றி யனைய செயின்'

(குறள் 965)

என்ற பாவும்,

> 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
> செல்வத்துள் எல்லாம் தலை'

(குறள் 411)

என்ற பாவும், எண்ணிக்கையில் குறைந்த சொற்களைக்கொண்டு, அவை மீண்டும் மீண்டும் வருமாறு அமைந்திருக்கின்றன. இவ்வாறு வருதல், சொற் சுருக்கம் என்ற சிறப்போடு ஒரு தனி அழகையும் தருகிறது என்பதுபற்றி, அணி நூலாரும் சொற்பின் வருநிலையணி என்று பாராட்டுவர். வந்த சொல்லே மீண்டும் வருவதால், அந்த ஒலிகள் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன. அதனால் அவை உணர்த்தும் கருத்துக்களும் நம் மனத்தைவிட்டு அகலாமல் நிலை பெறுகின்றன.

> யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்காற்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

(குறள் 127)

என்ற குறளில், 'கா' 'கா' என்று ஒரே ஒலி மீண்டும் மீண்டும் வந்து செவியில் பட்டு, நாவைக் காத்தல் வேண்டும் என்ற நீதியை வற்புறுத்துகிறது.

பா, அடி, சீர், சொல் என்ற வகையில் சுருக்கத்தை ஆண்ட அப் பாவலர், எழுத்திலும், எழுத்தானும் அசைகளிலும் சுருக்கத்தை ஆண்டுள்ளமை அவர் குறளின் சொல் மாட்சியைக் காட்டுகிறது.

'கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க அதற்குத் தக'

(குறள் 391)

என்ற குறட்பாவில், இரண்டாவது அடியில் முதற்சீரில் 'னி' என்ற ஒலியைத் தவிர வேறு மெல்லொலியே அமையவில்லை; முதலடியிலும் இரண்டாமடியிலும் வல் ஒலியைத் தவிர வேறு இடையொலியே அமையவில்லை. வல்லொலிகளையே முற்றிலும் அமைத்து அவற்றிலும் ககரமும் றகரமும் மீண்டும் மீண்டும் ஒலிக்குமாறு செய்து, அவற்றை இயக்க அகர உயிரையே பலமுறையும் பயன்படுத்தி, இகரத்தை இரண்டிடத்தில் மட்டும் துணைப்படுத்தி, ஒலியில் செறிவையும் ஒழுங்கையும் அமைத்து ஒலியமைப்பில் சுருக்கத்தைக்கண்டது, அவர் ஒலிகளிலும் சுருக்கத்தைக் கையாளும் இயல்பைப் புலப்படுத்துகிறது. ஒரே வகையான ஒலிகள் காதில் படுவதால் சொல்லின்பம் உண்டாதலோடு கருத்தும் ஆழமாகப் பதியும் என்ற கருத்தால், அவர் இவ்வாறு ஒலியமைப்பிலும் சுருக்கத்தை எடுத்தாண்டுள்ளார் எனலாம்.

இதைப்போலவே, 'குழலினிது யாழினிது என்ப தம்மக்கள் மழலைச்சொல் கேளா தவர்' என்ற குறளில் ழகர எழுத்தையும், குழல் யாழ் மழலை போன்ற சொற்களையும் அமைத்துக் குழந்தையின் மழலைச் சொல்லை நம் காதில் ஒலிக்கச் செய்கின்றார். மழலைச் சொல்லின் இன்பத்தை அக்குறள் செவிக்கு ஊட்டிவிடுகின்றது என்று கூறலாம்.

இவ்வாறு பிறர் வேட்கும்படி தேர்ந்த சொல்லால் நிரந்து இனிது சொல்லும் திறம் அவர் சொற்களுக்கு இருப்பதற்கு அடிப்படைக் காரணம் சுருங்கச் சொல்லலாகும். சில சொற்களால் சொல்லத் தெரியாதவர்கள்தாம் பல சொற்களால் எதையுஞ் சொல்ல முற்படுவார்கள் என்றும், அவ்வாறு பல சொற்களை எடுத்தாள்வது சொற்றிறனாகாது என்றும், வள்ளுவனே

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர் '

(குறள் 649)

என்ற குறளில் விளக்குகின்றார். அந்தச் சில சொற்களும் மாசற்ற சொற்களாக அமையவேண்டும் என்று வற்புறுத்துகின்றார். மாசற்ற சில சொற்களால் சொல்லுவதுதான் சொற்றிறன் என்பதை வற்புறுத்தப் "பல சொல்லக் காமுறுவர் மன்ற" என்று பிறர் குறையை எடுத்துக் காட்டுகின்றார்.

எழுத்தானும், சொல்லானும், சீரானும், அடியானும் சுருக்கத்தைப் போற்றி, அதனால் பொருள் நுட்பத்தைத் திட்பமாக உணர்த்தும் திறனால்தான் இந்நூலுக்குக் குறள் எனப் பெயர் வழங்கலுற்றது எனக் கூறலாம். பொருள் கருதி வைக்கப்பட்ட 'முப்பால்' என்ற பெயர் வழக்கிழந்து, சொல்திறன் கருதிச் சிறப்பிக்கப்பட்ட திருக்குறள் என்ற பெயரே நிலைத்துவிட்டது.

சொற்களைச் சொல்லும் பொழுது மக்கள் பேச்சுமொழியின் போக்கை ஒட்டிச் சுருங்கக்கூறி விளங்க வைப்பது போலவே, மக்கள் பேசும் மரபை ஒட்டியே உவமைகளும் பிற அணிகளும் அமைந்துள்ளன. "அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு" என்ற பேச்சு மரபை ஒட்டியே,

' பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் '

(குறள் 475)

என்ற குறள் அமைந்திருக்கிறது.

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின் '

(குறள் 599)

என்பதும் இதைப் போன்ற அமைப்பை உடையதாகும். பொருளை விடுத்து உவமையை மட்டும் அமைப்பது இவற்றில் காணும் சிறப்பியல்பாகும். பொருளைக்கூறாது விடுவதால் சொற் சுருங்கியிருத்தல் இவ்வமைப்பின் தனியழகாகும். இவ்வாறு உவமையைமட்டும் சொல்லிப் பொருளோடு தொடர்பு படுத்தாமல் விடுவதால் மற்றொரு சிறந்த நன்மையும் உண்டாகிறது. ஒரு குறிப்பிட்ட பொருளோடு மட்டும் உவமை தொடர்புபெறாமல் யாண்டும் பொருந்தத்தக்க வகையில் அமைகிறது. மேலே குறிப்

பிட்ட குறள்களுள் முறையே எடுத்துக்கொண்ட பொருளாகிய வலியறிதல், ஊக்கமுடைமை என்பவை அரசியற்கன்றி ஏனைய சூழ் நிலைக்கும் பொருந்துவனவாக அமைகின்றன. இதனைப் 'பிறிது மொழிதல் அணி' என்று அணி நூலார் பாராட்டுவர்.

இவர் சொற்றிறனின் மற்றொரு சிறப்பியல்பு, உவமையும் பொருளும் கூறி இடையே உவமஉருபு கொடாதிருத்தலாகும்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

(குறள் 396)

'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு'

(குறள் 595)

என்ற குறட்பாக்களில், அதுபோல என்ற உவம உருபு கொடாமல் கூறியிருப்பது அவர் சொற்சுருக்கத் திறனையே காட்டுகிறது. இதனை அணி நூலார், 'எடுத்துக்காட்டு உவமை அணி' என்று சிறப்பிப்பர்.

'மற்றொரு வகையாகவும் சுருங்கச் சொல்லும் திறன் இவர்பால் காணப்படுகிறது. உவமையைவிட உருவகங்களாகக் கூறுவதில் சுருங்கச் சொல்லல் என்ற அழகு அமைகிறது. அவ்வாறு உருவகித்துக் கூறுங்காலும் முழுமையும் உருவகமாகக் கூறாமல் ஓரளவு உருவகமாகக் கூறிவிட்டு எஞ்சியவற்றை விடுவதில் சொற்சுருக்கம் காண்கின்றார்.

'உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து'

(குறள் 1032)

என்ற குறளில், உழுவார் தேரின் அச்சாணி போன்றவர்கள் என்று உருவகித்தாரே யன்றி ஏனையவற்றை யெல்லாம் உருவகிக்கவில்லை. இஃது அவர் சொற்றிறனின் சிறப்பாகும். இதனை அவயவ உருவகம் என்று அணி நூலார் கூறுவர்

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்'

(குறள் 1068)

என்ற குறளும், இவ்வாறு அமைந்ததேயாகும். 'வறுமையாகிய கடலைக் கடக்க இரவு என்னும் பாதுகாப்பற்ற தோணி கரத்தல்

என்னும் வன்னிலத்தில் தாக்குமாயிற் பிளந்துபோம் என்பது இக்குறளின் கருத்தாகும். வறுமையைக் கடலுக்கு உருவகிக்காமல் ஏனையவற்றைத் தக்க உருவகங்கள் கொண்டு விளக்கியிருப்பது அவர் சொற்றிறனின் சிறப்பியல்பாகும்.

சுருங்கச் சொல்லுதல் என்ற அணிமட்டுமன்றி விளங்க வைத்தல் என்ற சிறப்பும் இவர் குறளுக்குள்ள தனிச் சிறப்பாகும். சொல்லைப் பயன்படுத்தும் பொழுது அக்கருத்தை விளக்க அதன் இனமான சொல்லை உடன் பயன்படுத்தும் சிறப்பு அவர் பாக்களில் மிளிர்கின்றது. கல்வி என்றால் அதனோடு இனமான கல்லாமை என்பதையும் உடன்வைப்பது அவர்தம் மரபாக விளங்குகிறது. நட்பு என்றால் உடனே அதற்கு இனமாகத் தீநட்பையும் விளக்கிக் காட்டுதல் அவர் சிறப்பாகும். பெரியாரைத் துணைக் கோடல் என்றால் அதனோடு இணையாகச் சிற்றினஞ் சேராமை என்பதையும் உடன் கூறி விளக்குகிறார். அதைப் போலவே தனிக் குறளிலும், ஒரு கருத்தைக் கூறினால் அதற்கு இனமான கருத்தையும் சொல்லையும் உடன் வைத்துச் சுருங்கக் கூறி விளங்கவைக்கும் இயல்பைக் காண்கிறோம்.

'இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'

(குறள் 100)

என்ற குறளில், இனிய என்பதற்கேற்ப இன்னாத என்ற சொல்லையும், கனி என்பதற்கு இனமாகக் காய் என்ற சொல்லையும் அமைத்துத் தொடர்புடன் முரணும்படச் கூறிக் கருத்தை விளங்கவைக்கக் காணகிறோம்

'அறத்திற்கே யன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'

(குறள் 76)

என்ற குறளிலும, அறமும் மறமும் ஒருங்கு அமையக் காண் கிறோம்.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்'

(குறள் 104)

என்பதில், தினையையும பனையையும் ஒரே இடத்தில் காட்டி அமைக்கின்றார்

இவவாறு சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற பண்பு அடிப்படையாக அமைந்திருபபதால்தான் திருக்குறள் சொற்

திறனில் மிக்கது என்று கூறலாம். ஒலியிலும், எடுத்தாளும் சொல்லிலும், இசைத்து அசைத்துச் சீராக அமைக்கும் சீரிலும், சீர் பெற்று நடக்கும் அடிகளிலும், அழகுபட அமைக்கும் அணியிலும் சுருக்கத்தை ஆண்டு, பொருள் நிறைவை உணர்த்தும் பெருமை திருக்குறள் ஒன்றிற்கேயுண்டு என்று கூறலாம். 'சில சொல்லல்' என்ற அழகு அவர் சொற்றிறன் என்பதும், அதுவே அவர் கூறும் பொருட்டிறனை இலக்கிய வளமுடையதாகச் செய்கிறது என்பதும் தெளிவாகின்றன.

# 10. ஒளிச்செல்வம்

**[டாக்டர் பி. திருஞானசம்பந்தம்]**

நாம் வாழும் உலகம் ஒளியால் வாழ்கிறது என்று சொல்லலாம். சூரியனும், சூரியனையொத்த விண்மீன்களும், சூரியனையும் விஞ்சிய ஏனைய வான்மீன்களும் ஒளி என்னும் செல்வத்தினை எப்பொழுதும் வழங்கிக்கொண்டே இருக்கின்றன. இந்த ஒளியின் பண்புகள் பற்றியும் பயன்கள் பற்றியும், புதிர்கள் சிறப்புகள் பற்றியும், அறிவியல் அறிஞர்கள் ஆராய்ந்த வண்ணமாக இருக்கிறார்கள். இவ் வகைகளில் சிறந்த செல்வமாகிய ஒளி என்னும் இயற்கைச் செல்வத்தினைப் பற்றிச் சிறிது காண்போம். ஒளியின் உடன்பிறப்புகளைப் பற்றியும் சிறிதே கூறலாம்.

ஒளியின் சிறப்பினைக் கூறவந்த மெய்ஞ்ஞானப்பாரதியார், 'நல்லொளிக்கு ஞாலமிசை ஒப்புளதோ' என்று வியந்து வினவுகிறார். மேலும், 'விண்ணை அளக்கும் ஒளி மேம்படும் ஓர் இன்பம் அன்றோ' என்றும் போற்றி மகிழ்கிறார். விஞ்ஞானத்துறையில் விண்ணகத்துப் பெரும் தொலைவுகளை அளக்கும் அளவுகோல் ஒளியின் வேகத்தின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டிருக்கிறது என்பது இங்கு நோக்கற்பாலது. அண்டகோடிகளுக்கு இடையே அமையும் அருந் தொலைவுகளை அளப்பதற்கு அங்குலமோ, மீட்டரோ, மைலோ, கிலோ மீட்டரோ பயன்படுவதில்லை. ஆங்கு வழங்கிவரும் அலகு (unit) ஒளியாண்டு (Light year) என்று கூறப்படும். அண்டப் பெரு வெளியில் ஒளியானது ஓராண்டுக் காலத்தில் கடந்து செல்லும் தொலைவே இந்த ஒளியாண்டு ஆகும்.

கண்ணிமைப்பொழுதில் — கைந்நொடிப பொழுதில் — அதாவது ஒரு செகண்டு நேரத்தில், ஒளியானது மூன்று இலட்சம் நூறாயிரம் கிலோமீட்டர் தொலைவு செல்ல வல்லது என்று இயற்பியல்

(Physics) இயம்புகிறது. இந்தக் கணக்கில், ஒரு வருட காலத்தில் எத்துணை செகண்டுகள் உள்ளனவோ அத்துணை செகண்டுகளில் ஒளி யானது கடந்து செல்லும் தொலைவு ஓர் ஒளியாண்டின் நீளமாகும்.

வானத்தில் சந்திரன் உதயமாகிறது என்ற நற்செய்தியினைச் சந்திரனிலிருந்து புறப்படும் ஒளி என்னும் தூதன் வான்வழியே 1·25 செகண்டு நேரத்தில் விரைந்தோடி வந்து நம்மிடம் கூறுகிறான். கீழ்த்திசையில் ஆதவன் தோன்றி விட்டான் என்ற இன்சொல்லை இளங்காலை நேரத்தில் கூறுபவனும் ஒளி என்னும் தூதன்தான். ஆனால், அவன் இப்போது ஐந்நூறு செகண்டுகள் நேரம் விண் வழியே கடிதின் பறந்து வருகிறான். ஆல்பா செண்டாரி (Alpha Centauri) என்னும் விண்மீன் நம் நிலவுலகிலிருந்து நான்கு ஒளி யாண்டுகள் தொலைவில் உள்ளது என்றும், ரீகல் (Rigel) என்னும் விண்மீன் அறுநூற்றைம்பது ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ளது என்றும் அறிவியல் பேசுகிறது. நம் சிந்தைக்கும் பெருவிருந்து அளிக்கிறது.

ஒளியின் வேகம் பெரியது என்று கண்டோம். இவ்வேகத்தினை உயர்தனிவேகம் என்று கூறி மகிழலாம். இந்த மீப்பெரிய வேகத் திற்கு ஈடும் இல்லை, இணையும் இல்லை என்பது மாமேதை ஐன்ஸ்டீன் பெருமகனார் அளித்த பெருவாக்கு ஆகும். இப் பேருண்மையினை அறிந்து உணர்ந்த நிலையில் ஐன்ஸ்டீன் அவர்கள் கண்ட இயற்கைக் காட்சி இந்த நூற்றாண்டில் இயற்பியல் வளர்ச்சிக்கும் அறிவியல் ஏற்றத்திற்கும் வழிவகுக்கும் திருப்பு மையமாக அமைந்தது. அதன் காரணமாக ஒப்புமைக் கொள்கை (Theory of relativity) என்னும் சிறந்த அறிவியற் கொள்கை உருவாகி இன்று அறிவியலில் அரசோச்சி வருகிறது ; அணுவியலில் (Atomic physics) பல புதுமை களுக்கு வழிகாட்டியுள்ளது; அணுக்கருவியலில் (Nuclear physics) பல வளர்ச்சிகள் உருவாகியுள்ளன. பேராற்றல் அளிக்கும் அணுமின் நிலையங்கள் (Atomic power stations) இயங்கி வருகின்றன; நம் மாநிலத்தில் கல்பாக்கத்தில் உருவாகிவரும் அணுமின்நிலையமும் இதற்குச் சான்று பகரும்.

இனி, ஒளியின் இயல்புபற்றிப் பேசுங்கால், அது மின்காந்த ஆற்றல் (Electromagnetic energy) என்று தெளிவு செய்யப்பட் டிருக்கிறது என்றும், இந்த மின்காந்த ஆற்றல், அலை (Wave) எனப் பரவுவதாகும் என்றும் அறிகிறோம். எந்த ஓர் அலைக்கும் அலைநீளம் (Wave length), அலைவெண் (Frequency) ஆகிய இரு அடிப்படை யான, ஒன்றோடொன்று தொடர்புடைய, பண்புகள் அமை கின்றன. ஓர் அலையின் அலைநீளத்தையும் அதன் அலைவெண்ணை

யும் பெருக்க வரும் பெருக்குத் தொகையே அலையின் வேகமாகும். காட்டாக, சென்னை-1 வானொலி நிலையத்திலிருந்து ரேடியோ அலைகள் 416·7 மீட்டர் அலை நீளத்தில் ஒலி பரப்பப்படுவதை அறிவோம்; இதனையே வேறு விதமாகச் சொல்லும் போது 720 கிலோ ஹெர்ட்ஸ் அலைவெண்ணில் ஒலிபரப்பு நிகழ்கிறது என்றும் சொல்வது வழக்கம். இந்த அலைநீளத்தையும் அலைவெண்ணையும் பெருக்க வருவது ரேடியோ அலையின் வேகமாகும். எல்லா நிலையங்களிலும் பயன்படும் ரேடியோ அலைகள் வேகத்தால் ஒன்றுபட்டு அலைநீளம் அல்லது அலைவெண் காரணமாக வேறுபடுகின்றன. மேலும் ரேடியோ அலையின் வேகமும் ஒளியலையின் வேகமும் சமமாகும்; ரேடியோ அலையும் ஒளியலையும் மின்காந்த ஆற்றல் அலைகள், உடன்பிறப்புக்கள் என்று அறியப்படுகின்றன.

ரேடியோ அலைகள் நமக்குக் கட்புலனாவதில்லை; ஆனால் ஒளியலைகளைக் காண்கிறோம். இந்த வெள்ளொளியில் செங்கருநீலம், கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகிய ஏழுநிற ஒளிகளும் ஒளிந்து கிடக்கின்றன என்பதனை நியூட்டன் பெருமகனார் முந்நூறு ஆண்டுகட்கு முன்பே தெளிவு செய்தார். ஒளியின் இந்த ஏழு பகுதிகளையும் நிறங்களின் அடிப்படையில் நிரல் செய்து சொல்வதைவிட, அலை நீளங்களின் அடிப்படையில் வேறுபடுத்திக் கூறுவது சிறப்பு ஆகும். அந்த அலைநீளங்கள் ஆங்ஸ்ட்ராம் அலகு (Angstrom Unit) என்ற அலகின் துணையினால் அளக்கப்படுகின்றன பத்துக்கோடி ஆங்ஸ்ட்ராம் அலகுகள் கொண்டது ஒரு சென்ட்டிமீட்டர் ஆகும் என்று சொல்லும்போது ஆங்ஸ்ட்ராம் அலகு, நீளம்பற்றிய சிறியதொரு அலகு என்பது தெரியவரும். ஊதா ஒளியின் அலைநீளங்கள் நாலாயிரம் ஆங்ஸ்ட்ராம் அலகுகள் அளவிலும், சிவப்பு ஒளியின் அலைநீளங்கள் ஏழாயிரம் ஆங்ஸ்ட்ராம் அலகுகள் அளவிலும் அமைகின்றன என்று அறிவியல் அளந்து கூறுகிறது.

கண்ணிற்குப் புலனாகும் ஒளி அல்லது மின்காந்த ஆற்றலின் அலைநீளங்கள் நாலாயிரம் முதல் ஏழாயிரம் ஆங்ஸ்ட்ராம் அலகுகள் உடையவை. ஆதலினால் கண்ணிற்குப்புலனாகாத மின்காந்த ஆற்றல் பகுதிகள் இருக்கலாம் என்பதும், அப்பகுதிகள் நாலாயிரத்திற்குக் குறைவாகவும் ஏழாயிரத்திற்கு அதிகமாகவும் அமையும் அலைநீளங்கள் கொண்டிருக்கவேண்டும் என்பதும் எளிதே உணரப்படும். அத்தகைய மின்காந்த அலைகள் இயற்கையில் உள்ளன என்பதும், அவைகளின் பண்புகளும் பயன்களும் சிறந்தவை என்பதும் இனிய அறிவியற் செய்திகளாம். இந்த மின்காந்த அலைக்குடும்பம் காமாக்கதிர்கள் (Gamma Rays), எக்ஸ் கதிர்கள் (X-Rays), புறச்

செங்கருநீல ஊதாக்கதிர்கள் (Ultraviolet Rays), கட்புலனுகும் ஒளி (Visible Light), புறச்சிவப்புக்கதிர்கள் (Infrared Rays), மைக்ரோ அலைகள் (Micro Waves), ரேடியோ அலைகள் (Radio Waves) முதலிய பல உடன்பிறப்புக்கள் கொண்ட பெரியதொரு நல்ல குடும்பம் எனக் காட்சியளிக்கிறது என்று கூறுவது மிகை யாகாது.

ஒளியின் உயிர்ப் பண்புகளைப்பற்றிக் கூறுவதற்கு முன்பாக, ஒளியின் உடன்பிறப்புகளின் பண்புகளையும் பயன்களையும் பற்றிச் சிறிது சுட்டிக்காட்டுவது பொருத்தமேயாகும். காமாக் கதிர்கள் மிகவும் வீரியம் வாய்ந்த கதிர்கள் என்றும், அவைகள் பயிரினங் களின் வளர்ச்சிக்குப் பயன்படுகின்றன என்றும் அறிகிறோம். எக்ஸ் கதிர்களை நாமே உருவாக்கி மருத்துவம், அறிவியல், தொழிலியல் முதலிய துறைகளில் பயன்படுத்துகிறோம். காலைக் கதிரொளியுடன் கலந்துவரும் புறச் செங்கருநீலக் கதிர்கள் நம் கட் புலனுக்கு நலம் செய்யும் என்றும், புறச்சிவப்புக்கதிர்கள் தொலைவி லுள்ள பொருள்களைப்படம் எடுக்கத்துணைசெய்யும் என்றும் காண லாம். மைக்ரோ அலைகளைப் பயன்படுத்தி இன்று செய்திப் போக்கு வரத்துத்துறையில் பெருவளர்ச்சி பெற்று வருகிறோம். ரேடியோ அலைகளின் பண்புகளும் பயன்களும் அனைவரும் அறிந்த செய்தி களாகும். இந்த ரேடியோ அலைகளின் உதவியினுல் ரேடியோ வான வியல் (Radio Astronomy) என்ற புதியதொரு அறிவியலே இந்த நூற்றுண்டில் உருவாகியுள்ளது. இத்துறையில் கண்ட வளர்ச்சிகள் காரணமாக ரேடியோ அலைகளை வெளிவிடும் விண்மீன்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன இவ் வகையில் சைனஸ் A (Cygnus A) என்று பெயரிடப்பட்டுள்ள விண்மீன் குழுவானது ஐம்பத்தைந்து கோடி ஒளியாண்டுகள் தூரத்தில் அமைகிறது என்று அறிகிறோம். அண்டத்தின் பருமையினையும் பெருமையினையும் என்னென்று சொல்வது !

இனி, ஒளியின் சிறப்புகள்பற்றிக் காண்போம். காலை நேரத்தில் நாம் கண்ணுடியில் முகம்பார்க்கப் பயன்படுவது ஒளியின் எதிரொளி (Reflected Light) என்பது யாவரும் அறிந்ததே. நீர் வழியாக வரும் ஒளியானது நீர்ப்பரப்பில் விலகல் (Refraction) அடைந்து நம்மைச் சேர்வதால் நண்பகலில் கிணற்றின் அடியிலுள்ள மணற் பரப்பு உயர்ந்து காணப்படுகிறது. காலை யிலோ, மாலையிலோ, விசும்பிலிருந்து இழிந்து விழும் மழைத்துளி களில் ஒளியானது சிதறல் (Scattering) பெறும்போது வானவில் உருவாகும். வெவ்வேறு பொருள்கள் வெவ்வேறு வகைகளில் ஒளியினை உறிஞ்சுதல் (Absorption) காரணமாகப் பொருள்களின்

நிறங்கள் மாறுபடுகின்றன. நீர்ப்பரப்பில் எண்ணெய்ப் படலங்கள் அமைவதனையும் ஆங்குப்படும் ஒளியானது குறுக்கீட்டு விளைவுக்கு (Interference) உட்பட்டு வண்ணங்கள் தோன்றுவதும் கண்ணிற்கினிய காட்சிகளாகும். கண் இமைகளின் கண்ணே சூரிய ஒளி வருகை தரும்போது விளிம்புவிலகல் (Diffraction) பெற்று ஒளியின் வண்ணங்களைத் தோற்றுவிப்பது மகிழ்வுதரும் காட்சிகளாகும். படிகங்கள் (Crystals) வழியாகச் செல்லும் ஒளியானது இருதிசைகளில் விலகல் (Double Refraction) பெறுவதும், விலகலடைந்த அவ்வொளிகள் மாற்றுத்தளங்களில் அலைப்பண்பினைக் கொண்டிருப்பதும் (Polaristation) வியத்தகு இயற்கை நிகழ்ச்சிகளாகும்.

ஒளியின் அலைப்பண்புகள் இவ்வாறு பல வகைகளில் சிறப்பாக அமைவதனைக் காண்கிறோம். இதுபோலவே, துகள் (Particle) பண்புகள் சிறந்து நிற்பதனையும் கண்டு மகிழ்கிறோம். மிக நுண்ணிய துகள்களோடு தொடர்பு கொள்ளும்போது ஒளியும் துகளெனவே செயற்படுகிறது என்பது இயற்கையின் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது. கண்ணாடிக் குடுவையொன்றில் உள்ள தூயநீரில் புகுந்து வெளிவரும் தூயதோர் ஒளிக்கதிரானது நீர் மூலகத்தோடு (Water Molecule) ஆற்றல் பரிமாற்றம் பெறுகிறது. அந்த ஒளிக் கதிரானது துகள் போலவே இயங்குகிறது என்பதனைக் காணலாம். அந்த ஒளித்துகள் நீர்மூலகத்திற்குச் சிறிதளவு ஆற்றல் அளித்து விட்டு வெளிவரும்போதும், மூலகத்திடமே சிறிதளவு ஆற்றல் பெற்று வெளிவரும்போதும், ஒளியினுடைய அலைநீளங்கள் மாறுகின்றனவாம். இந்த அற்புதக் காட்சியினை நீரிலும் ஏனைய உகந்த பொருள்களிலும் கண்ட பெருமை நம் நாட்டு அறிவியல் தந்தை, இயற்பியற்செல்வர், சர் சி. வி. இராமன் அவர்களைச் சாரும். இக் கண்டுபிடிப்பின் காரணமாகப் பேரறிஞர் இராமனுக்கு நோபெல் பரிசு அளிக்கப் பெற்றது என்பதும், அறிவியல் துறையில் அனைத்து ஆசியாவிற்கும் கிடைத்த முதல் நோபெல் பரிசு இதுவே என்பதும் நாம் அறிந்த செய்திகளாகும். இவ் ஆண்டு, அதாவது 1978 ஆம் ஆண்டு, இராமன் சாதனையையொட்டிய பொன்விழா ஆண்டாகக் கொண்டாடுதற்குரியது என்பது அறிந்து மகிழ்கிறோம்.

இதுகாறும் கூறியவாற்றால், இயற்கை அருள் கூர்ந்து அளிக்கும் எழிற்செல்வம் ஒளி என்றும், இவ்வொளியின் துணையினால் வானத்துப் பொருள்களைப் பற்றி அறிந்து கொள்ளுகிறோம் என்றும், இவ்வொளிதானும் மிகப் பெரிய வேகத்தில் செல்லும் மின்காந்தக் கதிர்வீச்சு என்றும், அதன் பெருமையினைக் கலைமாச் செல்வர் ஐன்ஸ்டீன் தெளிவு செய்தார் என்றும், ஒளியும் அதன் உடன்பிறப்புக்களும் சிறந்த பண்புகள் உடையன என்றும், அலைப்

பண்பினைப் போலவே துகள் பண்பும் ஒளியின் உயர்தனிச்சிறப்பினை எடுத்து மொழிகின்றது என்றும், இயற்பியல் துறையில் அறிவியல் அறிஞர் இராமன் அவர்கள் கண்ட கண்டுபிடிப்பானது ஒளிச் செல்வத்தின் புகழ பரபபுகிறது என்றும், ஒளியின் பெருமை விரிக்கிற் பெருகும் என்றும் அறிவியற்கண்கொண்டு அறிந்து மகிழ்கிறோம்.

# 11. இயற்கை இன்பம்

**[டாக்டர். இரா. சாரங்கபாணி]**

பண்டை மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடாத்தி இன்பங் கண்டனர். இயற்கை அடிப்படையிலேதான் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பகுக்கப் பெற்றது. அதனாலேயே ஞாலம் நானிலம் எனப் பெயர்த்தாயிற்று. பாலை எனத் தனி நிலமில்லை. எந்நிலமும் வெம்மை மிகுதியால் பாலையாகலாம். நானில மக்கள் அவ்வந் நிலத்திற்குத்தக உண்டு உடுத்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இயற்கை எழிலையே இறையாக எண்ணி இன்புற்றனர். மலைமிசை வாழ்ந்த மக்கள் நீலத் திரைக் கடலிற் றோன்றிய செஞ்ஞாயிற்றின் கவினார்ந்த காட்சியில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தனர் அக் காட்சியை நீல மயில் மீது தோன்றும் செவ்வேளாக நினைந்து ஏத்தி இறைஞ்சினர்

> 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு'

எனத் திருமுருகாற்றுப்படை இக்காட்சியினைப் புனையும். மலை வாழ் மக்கள் மலைநெல், மூங்கிலரிசி, தினை, தேன் முதலியவற்றை உணவாகக் கொண்டு, தழையாடை உடுத்து, குருவி யோப்பி, கிளி கடிந்து, சுனை நீராடி, கிழங்ககழ்ந்து, தேனெடுத்து, யாழிசைத்து மகிழ்ந்து இன்புற்றனர்

முல்லை நில மக்கள் வெயில் நுழைபறியாக் குயில் நுழை பொதும்பரின் இருளார்ந்த இயற்கை அழகை மாயோனாகக் கருதி வழிபட்டு வணங்கினர் அவர்கள் ஆனிரை மேய்த்தும் வரகு, சாமை வித்தியும் கான்யாறு ஆடியும் பால், வெண்ணெய் உண்டும் குழலூதியும் குரவைக் கூத்தாடியும் மகிழ்ந்தனர். மருத நில மக்கள் நெல்லரிசி அயின்று, உழவுத் தொழில் புரிந்து, குளம் குடைந்து, புது நீராடி மழைக கடவுளான இந்திரனைப் போற்றித் தொழுதனர் நெயதனிலப பரதவர்கள் உப்பு விற்றல் மீன் பிடித்தல் முதலிய தொழில் செயது, தழையாடை அணிந்து, கடலாடி, வருணனை வழி

பட்டனர் இங்ஙனம் நிலத்துக்கேற்ப உண்டு உடுத்து ஆடி மன நிறைவோடு வாழ்ந்ததைப் பண்டைச் சங்க இல்க்கியங்கள் பறை சாற்றும். இயற்கைப் பொருள்களில் உள்ள ஈடுபாட்டால்தான் தம் ஆடைகளிலும் அணிகலன்களிலும் தவிசு முதலிய இருக்கைகளிலும் பூ, கொடி இலை முதலியவற்றைப் புனைந்து உவந்தனர் அக்காலத்து மக்கள்

அவர்கள் இயற்கைப் பொருள்களை இன்பம் நுகர்தற்குரிய பொருள்களாகக் கருதினர்; வெண்ணிலவின் பயன் துய்த்தும் தென்றலின் இன்பங்கணடும் புனலாட்டயர்ந்தும் பொழிலாடியும் மகிழ்வாகப் பொழுது போக்கினர் உவகைக்குரிய நிலைக்களன் நான்கனுள் விளையாட்டையும் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுவர்

' செல்வம் புலனே புணர்வு விளையாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே '

(தொல். 1205)

பிறிதொரு நூற்பாவில் தலைவனும் தலைவியும் தம் நாட்டெல்லை கடந்தும் யாறு, குளம், பொழில்களுக்குச் சென்று விளையாடுப எனத் தொல்காப்பியம் நுவலும்.

' யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப. '

(தொல். 1137)

புனலாட்டினைச் சங்க இலக்கியங்கள் விரித்துக் கூறுகின்றன.

**புனல் விளையாட்டு**

பரிபாடலில் வையைப் பாடல்கள் புனலாட்டினைப் பாரித்துரைக்கும். ஐங்குறுநூற்றில் புனலாட்டுப் பத்தும் சிலம்பில் கடலாடு காதையும் நீராடலைப்பற்றியனவேயாம். பரிபாடல் காட்டும் புனலாட்டத்தைக் காண்போம். சிறுவர் சிறுமியர், வலியர் மெலியர், இளையர் முதியர், ஒருமை மகளிர் வரைவின் மகளிர் எல்லோரும் நீராட வையைக்கு ஏகினர். ஏகுங்கால் பல்வகை அணிகலன் பூண்டு, நறுமணப் பொருள்கள் பூசி, மலர் அணிந்து, நறுநெய் தடவித் தேசும் ஒளியும் திகழ, ஓசனை கமழும் வாசமேனியராய்ச் சென்றனர். புனலாடச் செல்லும் ஆர்வத்தில் திண்டேர்ப் புரவியை வங்கத்தில் பூட்டினர். வங்கப் பாண்டியைத் திண்டேர்ப் பூட்டினர். புரவிக்குரிய அணிகளைக் களிற்றுக்குப் பூட்டினர். விரைந்து வையை சென்ற மகளிர் ஒருவர் மேல் ஒருவர் அரக்கு நீரை வீசிக்கொண்டனர் நீராடியவர்தம்

சாந்தும் சுண்ணமும் தாரும் கோதையும் வையையின் நிறத்தையே மாற்றிவிட்டன. பாவையர் ஆடும் பந்தையும் கழங்கையும் காளையர் கவர்ந்தோடி கரையிலிருந்து நீருட் குதிப்பர். காதலர்கள் கள்ளுண்டு மகிழ்ந்து புல்லிப் புனலாடிக் கண் சிவந்தனர். வையை சென்ற மாந்தர் ஆராதனைப் பொருள்களை வழங்கி வையை அன்னையை வரம் வேண்டுகின்றனர். என்ஞான்றும் இன்பத்தினின்றும் நீங்காதிருக்கக் காதலரைத் தழுவும் சிறப்பினைப் பெறுக எனச் சிலர் வேண்டுகின்றனர். தேனருந்தியதும் ஒருவும் வண்டு போலாது எம் கணவர் தணவாது எம்மை எந்நாளும் புரப்பாராக என இரப்பார் சிலர். யாமும் கணவரும் நிலைத்த இளமையுடன் வளம்பல பெற்றுச் சுற்றம் சூழப் பொலிக எனப் பாடுகிடப்பார் சிலர்.

'கழுத்தமை கைவாங்காக் காதலர்ப் புல்ல
விழுத்தகை பெறுகென வேண்டுதும் என்மாரும்
பூவீழ் அரியிற் புலம்பப் போகாது
யாம்வீழ்வார் ஏமம் எய்துக என்மாரும்
கிழவர் கிழவியர் என்னுதேழ் காறும்
மழவின்று மல்லற்கேண் மன்னுக என்மாரும்'

(பரிபாடல் 11 : 116 - 121)

இவ் வேண்டுதல்கள் எல்லாம் இன்பங் குறித்தனவாய் அமைதல் காண்க.

**பொழில் விளையாட்டு**

சீத்தலைச்சாத்தனுர் சோழ மன்னன் கோப்பெருந்தேவியுடன் பொழிலாட்டயர்வதைச் சித்திரித்துள்ளார். பொழிலின்கண் உள்ள ஒரு பொய்கையில் இருந்த அன்னச் சேவலும் ஆண்மயிலும் பெண்மயிலும் தம் கோலக் கலாபம் கொள விரித்து ஆடுகின்றன. இக்காட்சி வெண்ணிறப் பலதேவனும் கடல் வண்ணக் கண்ணனும் நப்பின்னையும் குரவைக் கூத்தாடியதுபோல் இருந்தது. சோலையில் ஒருபக்கம் கோங்கு மலர்ந்திருந்தது. அம்மலரைச் சார்ந்து மாங்கனி ஒன்றிருந்தது. அதன் பக்கம் மயில் தங்கியிருந்தது. இது பெண்ணொருத்தி பொன்தட்டில் பால் கொண்டு வந்து கிளிக்கு ஊட்டுவதை நிகர்த்தது.

'கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொற் றட்டில் தீம்பால் ஏந்திப்
பைங்கிளி யூட்டுமோர் பாவை'

(மணி. 19: 67-70)

பொழிலில் காதலர்கள் ஆடுதற்கு ஊசல் கட்டியிருந்தனர். அதில் கடுவன் தன் காதல் மந்தியை அமர்த்தி ஆட்டி மகிழ்ந்தது. இக் காட்சி காதலை மிகுக்குமாறு அமைந்திருந்தமையின் அரசப் பெரு மக்கட்குக் காதல் விருந்தாயிற்று. இன்பத்திற்குக் காரணமாக விளையாட்டு இருத்தலினால்தான் பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடடு ஆகியவற்றைத் தண்டியாசிரியர் காப்பிய இலக்கண மாகக் கூறியுள்ளார்

## இயற்கையில் அறம்

இயற்கைக் காட்சிகளை நுணணிதின் ஆய்ந்துணர்ந்த புலவர் கட்கு அவை பல அறக் கருத்துக்களைத் தோற்றுவித்தன. அவ்வறங் களை மக்கள் தம் வாழ்க்கையிற் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ்ந்து இன்பமெய்தினர். திங்களின் தோற்றம், மறைவு, தேய்வு வளர்வு ஆகியவற்றை ஒரு புலவர் உற்று நோக்கினர். அத் திங்கட் காட்சி வளர்வது குறையும், குறைவது நிறையும், பிறந்தது மறையும். மறைவது பிறக்கும் என்னும் நிலையாமைக் கருத்தை உணர்த்திற்று.

'தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து'

என்னும் புறநானூற்று (27) அடிகளே அப்புலவர் பாடியவை. நிலை யாமைக் கருத்தை அறிவித்த திங்கள், திருவள்ளுவர்க்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் நட்பின் இயல்பை உணர்த்துகிறது. பிறை மதி நாடோறும் வளர்வது போலச் சீரியோர் கேண்மை ஒத்த உணர்ச்சி இருத்தலின் நாளும் வளரும். நிறைமதி பின்னர்த் தேய்ந்து இருண் மதியாதல் போலப பூரியோர் நட்பு நாளும் குன்றிப் பொன்றிப் போம். இதனைச் செந்நாப்போதார்,

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பினனீர பேதையார் நடபு'

(குறள் 782)

என்று கூறுவர்

தாமரை, அல்லி முதலியவற்றின் நாளங்கள் நீர்நிலைக் கேற்ப நீளுதலும் ஆசிரியர்க்கு அறக்கருத்தை நல்குகிறது. மக்கள் ஊக்கத்துக் கேறப ஆக்கம் வரும் என்பதனை,

' வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.'

(குறள் 595)

எனும் குறள் புலப்படுத்தும்.

யானை, நாய் ஆகிய விலங்கின் இயல்பு கொண்டு நாலடியார் ஒருவத்தக்கார் நட்பினையும் மருவத்தக்கார் நட்பினையும் விளக்கு கிறது.

' யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் — யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.'

## இயற்கை அரங்கம்

மக்களுக்கு இன்பம் நல்குவனவற்றுள் இசையும் நாடகமும் சிறந்தனவாகும். இவற்றை இயற்கைக் காட்சிகளே தந்து இன்புறுத்துகின்றன எனப் புலவர்கள் புனைந்துள்ளனர். கபிலர் கண்ட மலைக்காட்சி நாடக அரங்காக மாறுகிறது. மலைப் பக்கத்திலே உள்ள வண்டு துளைத்த மூங்கில் துளை வழியே காற்று வீசியது. அப்பொழுது இன்னோசை எழுந்தது. மற்றொரு பக்கம் கல்லை உருட்டிக்கொண்டு ஓடிவரும் அருவியின் ஓசை கேட்டது. பிறிதொரு பக்கம் துள்ளித்திரியும் புள்ளிமான்கள் குரல் எழுப்பின. பூஞ்சோலையில் வண்டின் இசை எழுந்தது. மயில் ஒரு பக்கம் தோகை விரித்தாடியது. மந்திகள் வியந்து மருட்சியுடன் நோக்கின. இக் காட்சியைக் கபிலர்,

' ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் களிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத் தியலியா டும்மயில்
நனவுப்புகு விறலியில் தோன்றும் நாடன்'

(அகம் 82)

என்று பாடி அரங்கம் அமைத்துள்ளார். இவ்வியற்கை அரங்கினைப் போற்றித் தழுவிப் பின் வந்த புலவர்களும் பாடியுள்ளனர்.

சீத்தலைச் சாத்தனார் காட்டும் அரங்கினை இனி நோக்குவோம். வெயில் நுழைபறியாக் குயில் நுழை பொதும்பரில் தும்பிகள் இமிர்கின்றன. வண்டினங்கள் ஒலிக்கின்றன. மயில்கள் ஆடுகின்றன. மந்திகள் காண்கின்றன. இதனை,

'பரிதியஞ் செல்வன் விரிகதிர் தானைக்கு
இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டின நல்லியாழ் செய்ய
வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்'

(மணி. 4 : 1-6)

இங்ஙனம் ஆடரங்காகக் காட்டுகிறார் சாத்தனார். முன்னர் மலைக் காட்சியில் கபிலர் அரங்கம் காட்டினார். சாத்தனார் இங்குப் பொழிற் காட்சியில் அரங்கம் காட்டினார்.

திருத்தக்கதேவரோ இளவேனிற் பருவத்தைப் புனையும் போது ஆடரங்கு அமைக்கின்றார். இளவேனிலில் சோலையில் வண்டினம் முழங்க, தும்பிகள் ஒலிக்க, குயில்கள் கூவுகின்றன. இவற்றைத் துணையாகக் கொண்டு இளவேனில் என்னும் கூத்தன் ஆடினான்.

'இளிவாய்ப் பிரசம் யாழாக
இருங்கண் தும்பி குழலாகக்
களிவாய்க் குயில்கள் முழவாகக்
கடிபூம் பொழில்கள் அரங்காகத்
தளிர்போல் மடவார் தணந்தார்தம்
தடந்தோள் விளையும் மாமையும்
விளியாக் கொண்டிங் கிளவேனில்
விருந்தா ஆடல் தொடங்கினான்.'

(சீவக. முத்தி. 93)

தேவருக்கு இளவேனிற் காட்சி ஆடரங்கமைக்க உதவுகிறது. கம்பரும் ஆடரங்கமைக்க மறந்தாரிலர். அவர் கார்காலக் காட்சியின் துணையால் அரங்கம் புனைகின்றார். வண்டின் இசை யாழாகவும் இடிஓசை முழவாகவும் ஆடும் மயில் நடம் பயிலும் விறலியராகவும் காந்தள் மலர் விளக்காகவும் கருவிள மலர்கள் காண்போர் கண்களாகவும் கொண்டு அரங்கம் புனையப்பட்டுள்ளது.

கிளைத்துணை மழலை வண்டு
  கின்னர நிகர்த்த மின்னுந்
துளிக்குரல் மேகம் வள்வார்த்
  தூரியந் துவைப்ப போன்ற
வளைக்கையர் போன்ற மஞ்ஞை
  தோன்றிகள் அரங்கின் மாடே
விளக்கினம் ஒத்த; காண்போர்
  விழியொத்த ளிளையின் மென்பூவி '

(கம்ப. கார்காலப்படலம் 32)

கபிலர் மலைக்காட்சியில் அரங்கமைக்கப பின்வந்த புலவர்கள் சிறுசிறு வேறுபாடு தோன்றத் தம் அரங்குகளை அமைத்து இயற்கைக் காட்சிகளில் இன்புற்றமை நோக்கத்தகும்.

**இயற்கையும் இறைமையும்**

இயற்கையையே இறைவனுகக் கண்டு வாழ்ந்தவர் தமிழர் என்பதனை முன்னர்க் கண்டோம். எனவேதான் இறைவனின் திருவடி நிழலுக்கு இயற்கைப் பொருள்களை ஒப்புமை காட்டுகிருர் திருநாவுக்கரசர் இறைவன் அடிகளின் தன்மைக்கு,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே '

என்று வீணை, மதி, தென்றல், இளவேனில், பொய்கை முதலிய பொருள்களைச் சுட்டல் காண்க. வெண்ணிறக் கயிலை மலையைப் புனையும் சேக்கிழார்க்குச் சிவபெருமானின் திருநீறு பூசிய கோலம் நினைவு வருகிறது.

பொன்னின் வெணதிரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது. '

(பெரிய. திருமலைச் 1)

உலகு வாழ மழை வேண்டிப் பாவை நோன்பு நோற்கும் ஆண்டாளுக்கு, கார்மேகம் மின்னி இடித்து மழை பொழிவது, திருமாலின் தோற்றத்தையும் செயலையும் நினைவுபடுத்துகிறது. படவே தம் திருப்பாவையில் இயற்கை மழையையும் எம்பெருமானையும் ஒன்றுபடுத்திப் பாடுகிருர்.

ஆழி மழைக்கண்ணு ஒன்றுநீ கை கரவேல்
ஆழியுட் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பத்மநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய் !' (4)

இவ்வாறு இயற்கையும் இறைமையும் இறையடியார்க்கு வெவ்வேறு பொருளாய்த் தோன்ருது ஒன்றித் தோன்றுதல் இயல்பாகும்.

**இயற்கைக் குறிப்பு**

ஒரு கருத்தை வெளிப்படையாகக் கூருது குறிப்பாக உணர்த்த விழைந்த போதும் இயற்கைப் புனேவு துணைசெய்கின்றது. அகத்திணைப் பாடல்களில் இயற்கைப் புனேவாய் குறிப்பாகச் செய்திகளை உணர்த்தும் நெறியை, உள்ளுறை என்றும் புறத்திணையில் உர்ணத்தும் நெறியைப் பிறிதுமொழிதல் என்றும் இலக்கண நூலார் கூறுப. குறிப்பின் உணர்த்தும் இம்முறை புலமை நலம் காட்டுதலின் நூல் நயம் பயக்கும்.

பரத்தை ஒழுக்கம் உடைய தலைவனைத் தூயவன் எனக்கூறிப் பாணன் தோழியிடம் வாயில் வேண்டினுன். அப்பொழுது தோழி குருவியின் குடும்ப அன்பைப் புலப்படுத்தித் தலைவனின் ஒழுக்கக் கேட்டைக் காட்டிக் கழறுகின்ருள். ஆண்குருவி தன் பெடை கருவுற்றதறிந்து பொறையுயிர்த்தற்காகக் கரும்பின் பூவினுல் மெத்தை யமைக்கிறது.

'யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறு வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே

(குறுந்தொகை 85)

இக் குருவிப் புனேவால் தலைவி கருவுற்றதறிந்து தலைவன் அவட்கு ஏற்ற உதவி புரிந்திலன் என்பதும் சூல் முதிர்ச்சி எய்தியிருந்தமையின் இன்பப் பேற்றுக்கு உரியள் ஆகாள் என அவளைத் துறந்து புறந்திரிந்தான் என்பதும் குருவிக்கு உள்ள அன்புகூடத் தலைவனுக்கில்லை என்பதும் குருவிக் காட்சியைக் கண்டேனும்

தலைவன் அறிவு பெறுவானாக என்பதும் தோழி கூறிய இயற்கைப் புனைவால் பெறப்படும் கருத்துக்களாம்.

### தற்குறிப்பேற்றம்

இயல்பாக நிகழும் நிகழ்ச்சிகளில் புலவர்கள் தம் கருத்தை ஏற்றிச் சொல்லுதல் இலக்கிய மரபாகும். காப்பியங்களில் இத் தகைய போக்கு நிறைந்து காணப்பெறும். வையையாறு நீர் தெரியாமல் பன்னிறப் பூக்களால் மறைக்கப்பெற்று ஓடுகிறது. அதனைக் காண்பார், புனலாறு அன்று; பூவாறு என்று கூறத் தோன் றும். இக்காட்சியை இளங்கோவடிகள் காப்பியக் கதைப் போக் கிற்கு இயையத் தம் குறிப்பேற்றிப் பாடுகிறார். மதுரையில் கண்ணகிக்கு நடக்கவிருக்கும் கடுந்துயர் நினைந்து, வையை கண் கலங்கியதாகவும் தன் கலக்கம் கண்ணகிக்குத் தெரியலாகாதே என்று பூவாடையால் தன்னை மறைத்துக் கொண்டதாகவும் இளங்கோ கற்பனை செய்கிறார் :

‘ வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறு ’

(சிலப். 13 : 170-174)

இங்ஙனம் காப்பியப் போக்கில் தற்குறிப்பேற்றமாகப் பாடவும் இயற்கை துணைபுரிகிறது.

### அந்திப் புனைவு

இயற்கைப் புனைவால் பண்டைப் புலவர்கள் இன்புற்றது போலவே இக்காலக் கவிஞர்களும் இன்புற்றுள்ளனர். பாரதியார் பாடலில் இதற்குச் சான்று காண்போம். அருச்சுனன் பாஞ்சாலியை ஒரு பொழிலில் பசும்புல் மேட்டில் இருக்கச் செய்து அந்திமாலையின் எழிலோவியத்தைக் காட்டுகிறான். இதனைப் பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் அழகாகச் சித்திரித்துள்ளார். ‘எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா’ என்று உலகின் இயற்கை இன்பங்களைக் கண்டு களித்துப் பாடும் பாட்டுக்கொரு புலவராம் பாரதியாரைக் கதிரவன் மறையும் மாலைக்காட்சி வியப்பில் ஆழ்த்துவது வியப்பில்லையன்றோ ?

பார் ;சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன ! ஓகோ
என்னடி ! இந்த வன்னத் தியல்புகள்
எத்தனை வடிவம் ! எத்தனை கலவை !
தீயின் குழம்புகள் ! — செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள் — வெம்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள் — பாரடீ !
நீலப் பொய்கைகள் — அடடா, நீல
வன்ன மொன்றில் எத்தனை வகையடீ !
எத்தனை செம்மை ! பசுமையும் கருமையும
எத்தனை ! கரிய பெரும்பெரும் பூதம்
நீலப் பொய்கையின் மிதந்திடும் தங்கத்
தோணிகள்'

இவ்வாறுகப் பாரதியார் அந்திமாலையில் மனத்தைப் பறிகொடுத்து வியந்து வியந்து மிக நீளமாகப் பாடியுள்ளார் 'எத்தனை' என்னும் சொல்லை எத்தனையோ முறை பயன்படுத்தி இயற்கை எழிலில் தாம் கொண்ட ஈடுபாட்டைப் புலப்படுத்திவிடுகிறுர். சங்கப் புலவர்கள் தொடங்கிப் பாரதியார்வரை, ஏன் ? இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர்களும் — இயற்கை இன்பத்தில் திளைத்து மகிழ்ந்தனர் — மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது ஒருதலை.

# அட்டவணை

| எண் | திணை | பாடியோர் பெயர் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | திப்புத்தோளர் |
| 2. | ,, | இறையனார் |
| 3. | ,, | தேவகுலத்தார் |
| 4. | நெய்தல் | காமஞ்சேர் குளத்தார் |
| 5. | ,, | பதுமனார் |
| 6. | பாலை | பெரும் பதுமனார் |
| 7. | நெய்தல் | கயமனார் |
| 8. | மருதம் | ஓரம் போகியார் |
| 9. | பாலை | மாமூலனார் |
| 10. | ,, | ஓதலாந்தையார் |
| 11. | குறிஞ்சி | கபிலர் |
| 12. | பாலை | ஔவையார் |
| 13. | ,, | பாலைபாடிய பெருங்கடுங்கோ |
| 14. | குறிஞ்சி | கபிலர் |
| 15. | மருதம் | பரணர் |
| 16. | பாலை | கோப்பெருஞ்சோழன் |
| 17. | முல்லை | ஓதலாந்தையார் |
| 18. | பாலை | சேரமானெந்தையார் |
| 19. | குறிஞ்சி | ஔவையார் |
| 20. | முல்லை | பரணர் |
| 21. | குறிஞ்சி | வெள்ளிவீதியார் |
| 22. | பாலை | ஔவையார் |
| 23. | குறிஞ்சி | ஔவையார் |
| 24. | மருதம் | படுமரத்து மோசிகீரனார் |
| 25. | ,, | கொல்லிக்கண்ணன் |
| 26. | ,, | கழார்க்கீரன் எயிற்றியார் |
| 27. | குறிஞ்சி | பரணர் |
| 28. | பாலை | பாலைபாடிய பெருங்கடுங்கோ |
| 29. | குறிஞ்சி | கபிலர் |
| 30. | ,, | செம்புலப்பெயல்நீரார் |
| 31. | பாலை | அணிலாடு முன்றிலார் |
| 32. | குறிஞ்சி | கபிலர் |
| 33. | பாலை | ஔவையார் |
| 34. | பாலை | வெள்ளி வீதியார் |
| 35. | மருதம் | ஆலங்குடி வங்கனார் |
| 36. | ,, | மாமலாடனார் |
| 37. | குறிஞ்சி | நெடு வெண்ணிலவினார் |
| 38. | பாலை | பூங்கணுத்திரையார் |
| 39. | நெய்தல் | அம்மூவனார் |
| 40. | மருதம் | குன்றியனார் |